தர்மசக்கரம்



ரௌத்திரி ௵ ஆவணி ௴ சக்கரம் 29 ஆரம் 8

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

VIVEKANANDA KENDRA KANYAKUMARI INVITES

APPLICATIONS FROM men and women desirous of joining its LAY ORDER of dedicated Life-Worker-missionaries and fulfilling the following conditions.

1. Spiritual urge for selfless service to the people
2. A GRADUATE in any branch of study
3. Unmarried, and prepared to remain so at least till the completion of a 4-year period of intensive training
4. Without encumbrances or family commitments
5. Below thirty years and physically fit
6. Willingness to work and serve in any part of the country, rural or urban and be content with a simple living

Evidently, assignments entrusted to life-worker-missionaries are NOT SALARIED JOBS. NO RELAXATION IN THESE CONDITIONS. Eligible willing aspirants may write along with self addressed cover affixing 60 paise postal stamps to:

THE GENERAL SECRETARY, VIVEKANANDA KENDRA,
Vivekanandapuram, Kanyakumari-629 702.

அந்தர்யோக விவரங்கள்

திருச்சி ஜில்லா—கைலாசபுரத்தில் 24—8—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : *பாய்லர் பிளாண்ட் ஆரம்பப்பள்ளி*
நேரம் : *காலை 10-00 மணிமுதல் நண்பகல் 1-00 மணி வரை*
நடத்துபவர் : ஸ்ரீமத் ஸ்வாமி நித்தியானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—ராஜபாளையத்தில் 31—8—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : *பழையபாளையம் பாரதி கல்யாண மண்டபம்*
நேரம் : *காலை 10- 00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை*
நடத்துபவர்: ஸ்ரீமத் ஸ்வாமி நித்தியானந்தர்
உணவு வசதி: *மதிய உணவுக்கு ரூ. 1-50 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.*

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 7—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : *ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆஸ்ரமம்*
நேரம் : *காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*
நடத்துபவர் : ஸ்ரீமத் ஸ்வாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி : *நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.*

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 7—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : *ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி*
நேரம் : *காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை*
நடத்துபவர் : ஸ்ரீமத் ஸ்வாமி நித்தியானந்தர்

தென்ஆற்காடு ஜில்லா—அவலூர்பேட்டையில் 21—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : *அரசினர் உயர்நிலைப்பள்ளி*
நேரம் : *காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*
நடத்துபவர் : ஸ்ரீமத் ஸ்வாமி நித்தியானந்தர்

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 29	ரௌத்திரி ஞூ ஆவணி மீ	ஆரம் 8

பொருளடக்கம்

சந்தா விவரம்

ஆன்மீகக் கருத்துக்களில் தெளிவுபெற தர்ம சக்கரம் சந்தாதாரராகச் சேர்ந்து பயன்பெறுங்கள்.

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதிப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப்பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விசுவநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் அன்பர்களின் உதவியால் தர்ம சக்கரம்தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25 வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி



ராமனாதபுரத்தில் தாயுமான சுவாமிகள் கோயில் சுவர் தரை மட்டத்திலிருந்து **15** அடி உயரம் எழுப்பி அதற்கு மேல் சிமிண்ட் கான்கிரீட் போடுவதற்காக கட்டடத்துக்குள் மூங்கில் கால்கள் நிறுத்தி அதற்கு மேல் மரப்பலகைகளும் இரும்புத் தகடுகளும் அடைப்பு போட்டாய் விட்டது. இப்பொழுது கம்பி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது முடிந்ததும் சில நாட்களுக்குள் சிமிண்ட் கான்கிரீட் போட்டு பூர்த்தியாகும். அது தண்ணீரில் இருபத்தொரு நாள் ஊறிக் கொண்டிருக்கவேண்டும்.

விடுதிக்காக என்று அமைக்கப்பெற்று வரும் கட்டடத்தின் சுவர் தரை மட்டத்துக்குமேல் ஏழடி வந்திருக்கிறது. இப்பொழுது ஜன்னல் மட்டத்துக்கு மேல் (**Sun shade**) வெய்யிலும் மழையும் தடுக்கின்ற சிமிண்ட் பலகை வேலை நடந்து கொண்டிருக்கிறது.

1980 ஜூலை மாத நன்கொடை விபரம் வருமாறு :

விலாசம்		ரூபாய்
ஜூன் மாதம் முடிய நன்கொடை வசூல்		*8 71 248*
M/s. S. R. P. டுல்ஸ் லிமிடெட்	தம்புசெட்டித்தெரு, சென்னை	*1 500*
ஸ்ரீ P. நாச்சியப்பன்	பெராக், மேற்கு மலேசியா	*1 001*
ஸ்ரீ க. வீ. அழ. ராம. ராம. ராமநாதன் செட்டியார் ஞாபகார்த்தம்,	கோலாலம்பூர்	*520*
அமரர் டுன் V. T. சம்பந்தன் ஞாபகார்த்தம்	,,	*501*
ஸ்ரீ K. R. சோமசுந்தரம் A. M. N. J. P. தே. கி. நிதி கூட்டுறவு சங்கம்	,,	*501*
ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலம்	சின்னதண்டா, சேலம்	*400*
ஸ்ரீ லெ. பெரி. லெ. மெய்யப்பன்	கோலாலம்பூர்	*351*
டான் ஸ்ரீ மு. சோமசுந்தரம்	,,	*300*
ஸ்ரீ உ. ராம. மெ. சுப. சேவு. பஞ்சனதம் செட்டியார் & ஸ்ரீ உ. ராம. மெ. சுப. சேவுகன் அண்ணமலை செட்டியார்,	ஈப்போ	*300*
ஸ்ரீ மு. ராம. மு. முத்தையா செட்டியார்	லெபோ அம்பாங், கோலாலம்பூர்	*245*
ஓர் அன்பர்	சேலம்	*201*
ஸ்ரீ M. S. V. சாமிக்காளை நாடார்	தேனி	*200*
தமிழ்நேசன் N. M. நாகப்பசெட்டியார்	கோலாலம்பூர்	*176*

[தொடர்ச்சி அட்டை 4-ம் பக்கம் பார்க்க]

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 29	ரௌத்திரி ௵ ஆவணி ௴	ஆரம் 8

பிரார்த்தனை

त्वमादिदेवः पुरुषः पुराणस्त्वमस्य विश्वस्य परं निधानम् ।
वेत्तासि वेद्यं च परं च धाम त्वया ततं विश्वमनन्तरूप ॥ — श्रीमद्भगवद्गीता

த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்த்வமஸ்ய
விச்வஸ்ய பரம் நிதானம் ।
வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம
த்வயா ததம் விச்வமனந்த ரூப ॥ — ஸ்ரீமத் பகவத்கீதை

எண்ணில்லா வடிவங்களை யுடையோனே, முதற்பொருளே! தொல்லோனும் இவ்வுலகுக்கு மேலான இருப்பிடமும் தாமே யாவீர். அறிபவரும், அறியப்படுபொருளும், அருட்பெரு நிலமும் ஆவீர். உம்மால் உலகம் யாவும் நிறைந்துள்ளது.

கருங்கார் தோகை மயிற்பீலி யணிந்து
கட்டி நன்(கு)உ டுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவன்ஒரு வன்குழல் ஊதின போது
மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கிஅவை செய்யும் குணமே.

அருள் விருந்து

சினமும் வெறுப்பும் ஞானத்தின் எதிரிகளாம்.

ஞானியின் நிறைவாழ்வு உலகுக்கு அருளை வழங்குகிறது.

நல்லறிவை வளர்ப்பவனே நாட்டுக்குரிய நன்மகனாகிறான்.

பிறரை நேசிக்கும் அளவு பண்பில் மனிதன் மேன்மையுறுகிறான்.

நலனை நிராகரிப்பவன் அரக்கன். கேட்டை எதிர்ப்பவன் நன்மகன்.

இன்று இயற்றவேண்டிய அலுவலை நாளைக்கென்று ஒத்தி வைக்காதே.

கடவுளுக்காகப் பணிவிடை பண்ணுவது கடவுள் தியானத்துக்கு நிகர்.

நலம் கேடு ஆகிய இரண்டின் வாயிலாக நாம் நல்லறிவைப் பெறுகிறோம்.

அருள்நாட்டத்தில் ஈடுபடுவதற்கேற்ப மனிதனிடத்துள்ள சிறுமைகள் ஒதுக்கப்படுகின்றன.

கடவுள் நம்பிக்கை இல்லாதவனுக்குத் தன்னுடைய கீழான மனப்பான்மையை வெல்ல முடியாது.

பணக்காரரில்லாது ஒரு சமுதாயம் தாக்குப் பிடிக்கமுடியும். ஆனால் தொழிலாளி இல்லாது எந்தச் சமுதாயமும் சமாளிக்க முடியாது.

பாரமார்த்திகப் பெருவாழ்வில் ஈடுபடுபவன் புதிய பிறப்பு எடுப்பவனாகின்றான். அன்னவனே இருபிறப்பாளன் என இயம்பப்படுகிறான்.

அறநெறியை அடிப்படையாகக் கொண்டது இவ்வையக வாழ்வு. அறநெறியைப் புறக்கணிப்பவன் இவ்வையக வாழ்வில் வெற்றியடையான்.

இவ்வுலகுக்குரிய இன்பமும் துன்பமும் இணைபிரியாதவைகள். ஆகவே இன்பத்தை ஒதுக்க வல்லவனே, துன்பத்தையும் ஒதுக்க வல்லவனாகிறான்.

நலனையும் கேட்டையும் பாகுபடுத்தத் தெரியாத அறிவிலி தனக்குத் தானே தீங்கு செய்து கொள்ளுகிறான். அதன் வாயிலாக உலகில் தீமை வளர்கிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்ச தேவருக்கும், கிரீஷ் சந்திர கோஷுக்கும் சம்பாஷணை தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டிருக்கிறது.

கிரீஷ் : " ஐயனே, தாங்கள் என்னை ஆட் கொண்டிருக்கிறீர்கள்.''

பரமஹம்சதேவர் : "அப்படியா ? ஊக்கத் தோடு முயன்றால் நீ பூண்டுள்ள இலட்சியத் திலே வெற்றியடைவாய் என்றுதானே நான் பகர்ந்தேன்.''

'ஆனந்தமயீ' என்று இயம்பிக்கொண்டு பரமஹம்சதேவர் ஆழ்ந்து சமாதியில் மூழ்குவா ராயினர். அந்நிலையில் அவர் நெடுநேரம் இருந் தார். அவருடைய மனது உலக ஞாபகத்துக்குச் சிறிது கீழே இறங்கி வந்தபொழுது 'அந்தப் பொடியர்கள் எங்கே?' என்று அவர் இயம் பினர். தம்முடைய இளம் சிஷ்யர்களைப் பரம ஹம்சதேவர் இப்படிக் குறிப்பிடுவது வழக்கம். அது அவர் அவர்கள்பால் பூண்டிருந்த அன்புக்கு அறிகுறியாகும். அப்போது மகேந்திரர் பாபு ராம் என்னும் இளைஞனை அவரிடம் அழைத்து வந்தார். அந்த பாபுராமனையும் மற்ற பக்தர்களை யும் பரமஹம்சதேவர் உற்றுப்பார்த்தார். அவர் படைத்திருந்த சமாதிநிலை அவரை விட்டு இன் னும் அறவே அகன்று போகவில்லை. அங்ஙனம் அவருடைய மனதின் செம்பகுதி அதீதத்தில் இருந்தபடியே அவர் இயம்பியதாவது: சச்சி தானந்தப் பெருநிலையில் மூழ்கியிருப்பது மிக நன்று; இனி அருள் நாட்டத்தினின்று உதித்து வரும் பேரின்பத்தை என்னென்பது ?

பாடல் ஒன்றை அவர் பாட ஆரம்பித்தார். 'அறியவேண்டிய ஒன்றை நான் இப்பொழுது முற்றிலும் அறிய வருகிறேன். பரவசநிலை எது? ஆழ்ந்து பரத்தில் மூழ்கிக் கிடப்பது எது? ஆகிய இரண்டுக்குமிடையிலே உள்ள தார தம்மியத்தை நன்கு அறிய வருகிறேன்.'

மற்றும் ஒரு பாடலை அவர் பாடலாயினர். 'நான் கங்கைக்கும், கயைக்கும், காசிக்கும், காஞ்சிக்கும், பிரபாசுக்கும் யாத்திரைப்போவா னேன்? அன்னை பராசக்தியின் நாமத்தை உச் சரித்துக்கொண்டு உடலை உருக்கும் பரிபாகம் எனக்கு வாய்க்குமாகில் இத்தகைய தீர்த்த யாத்திரைகள் எதற்காக?'

தொடர்ந்து பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "அம்பிகையிடம் நான் பிரார்த்தனை பண்ணிய பொழுது நான் வேண்டிக் கொண்டதாவது, 'ஓ தாயே, எனக்கு வேறொன்றும் வேண்டாம். உன்னிடத்தே என் மனதை முற்றும் நாட்டு வதற்கான தூய பக்தியை எனக்குத் தந்தருள் வாயாக."

பக்தியின் ஆரம்பதசையில் இருப்பவர்கள் அதை உறுதிப்படுத்துவதற்காக ஸ்தல யாத் திரை போகிறார்கள்; விசேஷமாக வந்தனை வழி பாடுகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் ஆழ்ந்த பக்தியிலே உறுதியாக மூழ்கியிருப்பவர்களுக் குத் தீர்த்தயாத்திரையும் விசேஷ வழிபாடும் ஒருவிதத்தில் ஆழ்ந்த பக்திக்கு இடைஞ்சலா கும். இதைக் கருத்தில் வைத்துக்கொண்டே 'யாத்திரைகள் எனக்கு எதற்காக'எனப் பரம ஹம்சதேவர் தாம் பூண்டிருந்த பாரமார்த்திக பெருநிலையை விமர்சனம் பண்ணுகிறார்.

கிரீஷ் சந்திரகோஷர் இப்பொழுது அமை தியே வடிவெடுத்தவராகப் பரமஹம்சதேவர் பாடிய பாடல்களுக்குச் செவி கொடுத்துக் கொண்டு இருந்தார். அவர் அப்படியிருந்த தைக் குறித்துப் பரமஹம்சதேவர் அகமகிழ்வு பூணுவாராயினர்.

கிரீஷ் சந்திரகோஷருடைய நாடகக் கொட் டகை நிர்வாகியினுடைய அறையிலே பரம ஹம்சதேவர் அமர்ந்திருந்தார். அப்பொழுது ஒரு பெயர்வழி அங்கு வந்து இயம்பியதாவது: ''வேடிக்கை ஒன்றைப் பார்க்க வருகிறீர்களா ? 'விவாகம் ஒன்றில் விளைந்த குழப்பம்' என் பதைப் பற்றிய வேடிக்கையை நாடக மேடை யில் நடிக்கப் போகிறார்கள்."

கிரீஷரைப் பார்த்துப் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது : "நீ என்ன செய்துள்ளாய்? பிரகலாதனுடைய ஜீவிதத்தைப் பற்றிய அற் புதமான நாடகத்திற்குப் பிறகு இத்தகைய பொருளற்ற வேடிக்கையை நடாத்திக் காட்டு வது பொருந்துமா? முதலில் தித்திப்புப் பண்

டங்களையும், பால் பாயசத்தையும் பரிமாறி யான பிறகு வேப்பிலைச் சட்னியை எடுத்து வழங்குவது பொருந்துமா ?''

'மக்களை நல்வழியில்நடாத்துவதற்கான பக்தி நிறைந்த நாடகம் ஒன்றை நடாத்திக் காட்டி யான பிறகு வேடிக்கை விநோதங்களைக் காட்டி அந்தப் பக்தி உணர்வைக் கெடுத்துவிட லாகாது' என்பது பரமஹம்ச தேவரின் கருத்து ஆகும்.

அன்று இரவு பரமஹம்சதேவர் பார்க்க வந்திருந்த பிரகலாதன் சரித்திரம் என்னும் நாடகம் முடிவுற்று இருந்தது. அதன் பிறகு கிரீஷ்சந்திரகோஷருடைய கருத்துக்கு இணங்கி அந்நாடகத்திலே பங்கு கொண்டி ருந்த பெண்பாலர்கள் பரமஹம்சதேவருக்கு வந்தனை வழிபாடு செலுத்த அந்த அறைக்குள் வந்தனர். அவர்கள் தங்களுடைய நெற்றி நிலத்தில் படியும்படி பஞ்சாங்கமாக வணங்கி னார்கள். அப்படி வணங்கிக் கொண்டிருந்தவர் களில் ஒரு சிலர் பரமஹம்சதேவருடைய பாதத் தைத் தொட்டு வணங்கினர். அப்பொழுது அவர் அன்பு கனிந்த பாங்கில் "அம்மா அப் படிச் செய்யவேண்டாம்!" என்று வேண்டினர்.

நடிகைகள் அறையை விட்டு வெளியே சென் றான பிறகு பரமஹம்சதேவர் தம்முடன் வந்தி ருந்த பக்தர்களிடம் இயம்பியதாவது : "இறை வன் ஒருவனே இத்தனை வடிவங்களில் இலங்கு கின்றான்.''

வாயிலண்டை வண்டி ஆயத்தமாக நின்று கொண்டிருந்தது. அவரை வழியனுப்புவதற்குக் கிரீஷ்சந்திரகோஷரும், ஏனைய பக்தர்களும் வீதிக்கு வந்தார்கள். பரமஹம்சதேவர் வண் டியினுள் ஏறியவுடனே ஆழ்ந்த சமாதி நிலை யில் மூழ்கிவிட்டார். நாராயணனும், இன்னும் இரண்டு மூன்று பக்தர்களும், பரமஹம்சதேவ ருடன் புறப்பட்டுச் சென்றனர். வண்டி தக்ஷி ணேசுவரத்தை நோக்கி ஓடுவதாயிற்று.

1884-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி சனிக்கிழமை. அப்பொழுது கிறிஸ்துமஸ் பண்டிகை நிகழ்ந்துகொண்டிருந்தது. அதை முன்னிட்டு அந்த வாரம் முழுதும் விடுமுறை நாட்கள் ஆயின. அந்த விடுமுறையை நன்கு பயன்படுத்துதல் பொருட்டுப் பக்தர்கள் பலர் பரமஹம்சதேவரின் தரிசனத்திற்காகத் தக்ஷி ணேசுவர ஆலயத்துக்கு வந்தனர். அவர்களுள் சிலர் அன்று அதிகாலையிலேயே அங்கு வந்து குழுமியிருந்தனர். அப்படி வந்திருந்தவர்களில் கேதார், ராம், நித்தியகோபால், தாரக், சுரேந் திரா, மகேந்திரா, சாரதா, பிரசன்னு ஆகிய வர்களை பொறுக்கி எடுத்துப் பகருவது பொருந்தும். இன்னும் சில இளைஞர்களும் ஆங்கு வந்து கூடியிருந்தனர். அப்படி வந்திருந் தவர்களுள் சாரதா பிரசன்னு என்பார் இப் பொழுதுதான் முதன் முதலாகப் பரமஹம்ச தேவரைப் பார்க்க வந்தவர் ஆவர்.

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் வினவிய தாவது : "பங்கிம் எங்கே? உன்னோடு அவனை நீ அழைத்து வரவில்லையா ?''

பங்கிம் என்பவன் ஒரு பள்ளிக்கூடப் பிள்ளையாண்டான் ஆவான். அவனைப் பரம ஹம்சதேவர் பாக்பஜார் என்னும் கல்கத்தா நகர்ப்பிரிவினில் முன்பு சந்தித்திருந்தார். எட்ட நின்று கொண்டு அந்த இளைஞனைப் பார்த்தவுடனே அவன் நல்லியல்பு வாய்க்கப் பெற்றவன் எனப் பரமஹம்சதேவர் பகர்ந்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு பக்தர்களைத் தம் முடன் அழைத்துக்கொண்டு பரமஹம்சதேவர் பஞ்சவடிவுக்குச் சென்றார். ஆங்கு அவர்கள் அவரைச் சூழ்ந்திருந்தனர். ஒரு சிலர் அமர்ந்து கொண்டும், மற்றும் சிலர் நின்று கொண்டும் இருந்தனர். ஆங்கு ஆலமரத்தைச் சுற்றி அமைக்கப்பெற்றிருந்த மேடையின்மீது பரம ஹம்சதேவர் தென்மேற்கு முகமாக அமர்ந் திருந்தார். தம் முகவிலாசத்திலே புன்னகை தவழ்ந்து கொண்டிருந்த பாங்கில், "புஸ்தகத் தைக் கொண்டு வந்திருக்கின்றாயா ?" என்று அவர் மகேந்திரரிடம் கேட்டார்.

மகேந்திரர் : "ஆம் ஐயனே, கொண்டுவந் திருக்கிறேன்.''

பரமஹம்ச தேவர்: "ஏதேனும் ஒரு பகுதியை எடுத்து வாசி."

அந்தப் புஸ்தகத்தின் பெயரை அறிந்து கொள்ளப் பக்தர்கள் ஆவலுடன் இருந்தனர். தேவி சௌத்ராணி என்பது அந்தப் புஸ்த கத்தின் பெயர். நிஷ்காமிய கர்மத்தை அந் நூல் விளக்கியிருக்கிறது என்று பரமஹம்ச தேவர் கேள்விப்பட்டிருந்தார். பரமஹம்ச தேவர் சில நாட்களுக்கு முன்பு சந்தித்திருந்த

பங்கிம் சந்திர சட்டர்ஜி என்பாரே அந்த நூலை இயற்றியவர் எனவும் பரமஹம்ச தேவர் கேள்விப்பட்டிருந்தார். அந்த நூலாசிரியர் பிரசித்தி மிக வாய்ந்தவர். அவரைத் தாமே நேரில் சந்தித்திருந்ததனல் அவருடைய மனப் பாங்கை அறிந்துகொள்ளுதற்கு அந்தப் புஸ்த கத்தைக் கொண்டு வரும்படி பரமஹம்ச தேவர் மகேந்திரரிடம் சொல்லியிருந்தார்.

மகேந்திரர் இயம்பியதாவது : "வயதில் இளையவளாக இருந்த பெண்பால் ஒருத்தி—அவளே இந்த நூலின் கதாநாயகி—பவானி பதக் என்னும் நாமம் படைத்திருந்த திருடன் ஒருவன் கையில் அவள் அகப்பட்டிருந்தாள். அந்தப் பெண்பாலின் பெயர் பிரபுல்லா. ஆனல் திருடன் அவளுடைய பெயரை 'தேவி சௌத் ராணி' என மாற்றிவிட்டான். திருடன் எனினும் பவானிபதக் நல்லியல்பு வாய்க்கப்பெற்றவன். ஆத்மசாதனங்கள் பல பயிலும்படி பிரபுல்லா வுக்கு இத்திருடன் பாடங்கள் சில கற்பித்திருந் தான். பொல்லாதவர்களிடமிருந்து இத்திருடன் பணத்தை அபகரித்தான். ஏழை, எளியவர் களைப் பராமரிப்பதில் அவன் அப்பணத்தைச் செலவிட்டான். 'கெட்டவர்களைத் தண்டிப்ப திலும், நல்லவர்களைக் காப்பாற்றுவதிலும்' நான் கருத்தைச் செலுத்துகிறேன் என்று பிர புல்லாவிடம் பவானிபதக் என்னும் திருடன் எடுத்துரைத்தான்."

பரமஹம்சதேவர் : "ஆனல் இது ஒரு அரச னுடைய கடமையாயிற்றே."

மகேந்திரர் : "ஓர் இடத்தில் இந்நூல் ஆசிரியர் பங்கியைப் பற்றி எழுதுகிறார். பவானிபதக் பிரபுல்லாவோடு இணக்கம் வைக்க நிஷி என்னும் பெயர்படைத்த பெண் ணொருத்தியை அனுப்பினன். நிஷியோ ஒரு பக்திமதி. அவள் கிருஷ்ணனைத் தன் நாயக னகக் கருதினள். பிரபுல்லாவுக்கோ ஏற் கனவே மணம் முடிந்திருந்தது. அவளுடைய தந்தை மடிந்துபட்டுப்போனர். ஆதலால் அவள் தன் தாயுடன் மட்டும் வாழ்ந்திருந்தாள். அயலார்கள் பிரபுல்லாவானவள் ஒழுக்கங் கெட்டவள் என்று அவளைப் பற்றிப் பொருந் தாத வதந்தியைக் கிளப்பிவிட்டனர். அது மட்டுமல்லாது அவளை அறவே ஒதுக்கி வைத்த னர். ஆதலால் அவளுடைய மாமனர் அவளைத் தன் மகனேடு வாழ்ந்திருக்க அனுமதிக்க வில்லை. கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவ ளுடைய கணவன் மறுமணம் புரிந்துகொண் டான். ஆயினும் பிரபுல்லாவானவள் தன் கணவன் மீது வைத்திருந்த தூய அன்பைச் சிறிதேனும் மாற்றவில்லை. (இப்பொழுது பரம ஹம்சதேவரைப் பார்த்து) "ஐயனே கதையை இனி நீங்கள் பின்பற்ற முடியும்."

மகேந்திரர் வாசிக்கிறார்.

நிஷி : "நான் பவானிபதக்கினுடைய செல்வி. அவர் என் தந்தை. ஒரு போக்கில் அவர் எனக்கு மணம் முடித்து வைத்திருக் கிறார்."

பிரபுல்லா : "என்னசொல்லுகின்றாய்? நீ பகர்வது புலப்படவில்லை."

நிஷி : "என்னுடைய அனைத்தையும் நான் கிருஷ்ணனிடம் ஒப்படைத்துள்ளேன்."

பிரபுல்லா : "அது எப்படி?"

நிஷி : "என்னுடைய அழகு, இளமை, உயிர் ஆகிய யாவும்."

பிரபுல்லா : "அப்படியானல் கிருஷ்ணன் உன்னுடைய கணவன்."

நிஷி : "ஆம். என்னை முற்றிலும் தன் மயம் ஆக்கிக்கொண்ட கிருஷ்ணன் தானே என் தலைவன் ஆகிறான்."

பிரபுல்லா : (சிறிது அச்சமுற்றவளாய்) "எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. கணவன் யார் என்பதை நீ அறிந்திலையாதலால் இப்படி யெல்லாம் நீ பேசுகிறாய். உனக்கு உண்மை யில் கணவன் ஒருவன் இருந்திருப்பானகில் நீ ஸ்ரீ கிருஷ்ணனை நேசித்திருக்கமாட்டாய்."

பிரபுல்லாவுடைய கணவனகிய வ்ரஜேஸ் வரன் ஓர் அறிவிலி. தன் மனைவி தன்மீது கொண்டிருந்த ஆழ்ந்த அன்பை அவன் அறிந்து கொள்ளவில்லை.

நிஷி : "ஸ்ரீ கிருஷ்ணனை அனைவரும் நேசிக்க முடியும். ஏனென்றால் அவன் வரம்பில் அடங் காத பேரழகன். யாண்டும் இளமையே வடி வெடுத்தவன். அவனுடைய மகிமைக்கு வரம்பு கிடையாது. அவன் புல்லாங்குழலின் இனிய கீதம் உயிர்கள் அனைத்தையும் கவரவல்லதாக இருக்கிறது. அவன் தெய்வீக அழகில் உயிர் கள் அனைத்தும் மெய்மறந்து தங்களைக் கொடுத்து விடுகின்றன."

பைங்கிளிக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

37. பச்சைகண்ட நாட்டில் பறக்கும்உனைப் [போல்பறந்தேன்
இச்சைஎல்லாம் அன்னற்கு இயம்பிவா பைங் [கிளியே

பச்சைக் கிளியைப் பாலைவனப் பகுதிகளில் காணமுடியாது. அக்கிளி படைத்திருக்கிற பசுமைக்கு ஒப்ப யாண்டும் பச்சையாகக் காட்சி கொடுக்கின்ற மரம் செடி கொடிகள் நிறைந்துள்ள பிரதேசங்களிலேயே கிளி மகிழ்வுடன் வாழ்ந்திருக்கிறது. மரங்களின் மீது அது அமர்ந்திருக்கிற பொழுது அதைக் கண்டுபிடிப்பது மிகக் கடினம். மர இலைகளில் உள்ள பச்சை நிறத்தோடு கிளியின் நிறமும் ஒன்றித்துப் போவதே அதற்குக் காரணம் ஆகும். அக்கிளி சத்தமிடுவதை முன்னிட்டே அது மரத்தில் அமர்ந்திருக்கிறது என யூகிக்கப்படுகிறது. பசுமை நிறைந்த பிரதேசம் வெகு தூரத்திற்கு அப்பாலிருந்தாலும் கிளியானது அப்பசுமையையே நாடிப் பறந்து போகும். வெறும் பொட்டல் நிலத்தில் அது இறங்காது. அதன் போக்குக்கு ஒப்ப ஆத்மசாதகன் பரமனையே யாண்டும் நாடி நிற்கின்றான். கடவுளுக்குப் புறம்பான பொருள் எதிலும் அவன் கருத்தைச் செலுத்துவதில்லை. பரமன் அடைவதற்கு அரிய பொருள் எனினும் அவனையே ஆத்மசாதகன் நாடி நிற்பான். அத்தகையவனுடைய அருள் நாட்டத்தை அருள்நாட்டம் படைத்திருக்கிற மற்றோர் ஆத்மசாதகனே அறிந்து கொள்ள வல்லவனாகிறான். இக்கோட்பாட்டைப் பச்சைக் கிளியோடு பேசுவதுபோன்று தாயுமான சுவாமிகள் தெரிவிக்கின்றார். அருள் தாகம் பிடித்திருக்கின்றவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அன்னவர்களுக்குத்தான் அண்ணலிடமிருந்து ஆறுதலும் அனுக்ரஹமும் வந்தமைகின்றன.

38. பாசபந்தம் செய்ததுன்பம் பாராமல் எம்இறைவர்
ஆசைதந்த துன்பம்அதற்கு ஆற்றேன் நான் [பைங்கிளியே.

உடல் எடுத்திருக்கும் உயிர்வகைகளுக்கு உலக வாழ்வு யாண்டும் இன்பம் நிறைந்ததாக அமைவதில்லை. இன்பதுன்பங்கள் மாறி மாறி அமைந்து கொண்டேயிருக்கின்றன. உயிர்களனைத்தும் ஆசைக்கு அடிமைப்படுகின்றன. அப்படி ஆசைப்படலாகாது என்று இயம்புவது பொருந்தாது. ஆசை பூணுவதும், ஆசையை நிறைவேற்றுவதும் வாழ்க்கையில் இன்றியமையாத செயல்களாம். உயிர்கள் பூண்டுள்ள ஆசைக்கு நிவர்த்தி விரைவில் அமையாவிட்டால் அந்த ஆசை துன்பமாகப் பரிணமித்துஉயிர்களை வாட்டுகிறது. ஆசையை அறவே அகற்றியவனுக்கு யாண்டும் இன்பம். துன்பத்துக்கும் அன்னவனுக்கும் வெகுதூரம். ஆயினும் ஆசைப்பட்டும் அதன் விளைவாகத் துன்பப்பட்டும் உயிர்வகைகள் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றன. ஆரம்ப தசையில் ஆசையானது இவ்வுலகத்தைப் பற்றியதாக அமைகிறது. இவ்வுலகைப் பற்றிய ஆசை அதிகரிப்பதற்கேற்ப ஆசைப்படுகிறவன் பந்தபாசத்திற்கு ஆளாகிறான். பந்தபாசத்திலே உண்டாகிற துன்பமோ மிகக்கொடியதாயிருக்கிறது. இவ்வுலக ஆசை ஏதும் வேண்டாம் என்று அதை ஒதுக்கிவைத்துவிட்டுக் கடவுள்மீது ஆசைபூணுவது சாலச் சிறந்தது. கடவுள் நாட்டம் அதிகரிப்பதற்கேற்ப உலகநாட்டம் தானாக அகன்று போகிறது. இத்தகைய வாழ்க்கைத் தத்துவத்திற்கு விளக்கமாகவே

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்னும் மறைமொழி வந்துள்ளது. உலகப் பற்று மிகக் கொடியது. அது மனிதனுடைய சொரூபத்தைத் தேய்த்துத் தள்ளுகிறது. தெய்வப்பற்றோ உடலை இளைக்கச் செய்வதாயிருந்தாலும் அது ஆன்மீகப் பொலிவை வளர்க்கச் செய்கிறது. பொலிவு வளர்ந்தால் போதாது. ஆண்டவனுடைய அருளுக்குப் பாத்திரமாக வேண்டும். அருள் நாட்டம் படைத்திருக்கிறவர்களுக்கு இறைவனிடமிருந்து அனுக்ரஹம் வாராது இருக்குமாகில் அது ஆத்ம சாதகனைப் பெரும் துன்பத்தில் துய்க்கச் செய்கிறது. சான்று ஒன்றின் மூலம் இக்கோட்பாட்டை ஆராய்வோம். சீதாபிராட்டி ஜீவாத்ம சொரு

பம். ராவணனே கட்டில் அடங்காத ரஜோ குண மயமான மனேதத்துவத்தின் சொருபமா கிருன். அவன் சீதாபிராட்டியாரைச் சிறை பிடித்து வைத்தான். பந்தபாசத்தை ஏராள மாகச் சீதாபிராட்டியாருக்கு எடுத்து வழங்கி ஞன். அவன் வழங்கிய சுகபோகம் சீதா பிராட்டியாரிடம் கசப்பையும் வெறுப்பையும் வளர்த்தது. அத்தகைய கசப்பும் வெறுப்பும் ஓர் அளவில் சமாளிப்பதற்கு உரியவைகளாக சீதாதேவியாருக்குப் புலப்பட்டன. சிறையுண் டது முதற்கொண்டு கணப்பொழுதும் சீதை கதறிப் பதறி அழுது கொண்டிருந்தது தன் நாயகனுகிய பரமாத்மாவை அடைதல் பொருட் டேயாம். பிரதிகூலமான சூழ்நிலையாகிய இலங்கையில் சிறைவாசமும் இராவணன் மையல் ஊட்டியதும் அம்மாதரசியை அவ்வளவு துன்புறுத்தவில்லை. ஆனல் ராமன் தக்க நட வடிக்கைஎடுத்துச் சீதையை மீட்டெடுக்கவாரா திருந்ததுதான் அவளுக்குப் பெரும் துயரத்தை உண்டுபண்ணியது. சீதா பிராட்டியாயிருந்த அதே பரிதாபகரமான நிலையில்தான் அருள் தாகம் பிடித்துள்ள ஒவ்வோர் ஆத்ம சாதக னும் அல்லல்பட்டுக் கொண்டே இருக்கிருன். இறைவனிடமிருந்து ஆறுதல் வாராதிருக்கும் பரியந்தம் அவனுடைய துன்பம் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டே போகிறது என் னும் கோட்பாடு இக்கண்ணியில் அற்புதமாக அமைந்திருக்கிறது.

39. பார்ஆசை அற்று இறையைப் பற்றுஅறநான் பற்றி நின்ற பூராயம் எல்லாம் புகன்றுவா பைங்கிளியே.

பார்ஆசை அற்று-உலக ஆசைகளை ஒழித்து. பூராயம்-ஆராய்ச்சி முழுதும். புகன்று வா-சொல்லி வா.

இப்பிரபஞ்சம் ஜீவாத்மனுக்குப் பயிற்சிச் சாலையாக அமைந்துள்ளது. இதில் ஆழ்ந்து பற்றுவைப்பது ஜீவாத்மனுடைய இயல்பு. ஆரம்ப தசையில் அத்தகைய பற்றுதல் முற்றும் அவசியமானது. பிஞ்சு முதிர்ந்து கனியாகும் வரையில் காம்பின் வாயிலாக மரத்தைப்பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அத்தகைய பற்று தல் பிஞ்சுக்குத் துவக்கத்தில் எவ்வளவு அவ சியமோ அவ்வளவு அவசியம் ஜீவாத்மனுக்கு உலகப்பற்றுதலில் இருக்கவேண்டும். பல பிறவிகளில்இப்பற்றுதல் வாயிலாக நல்ல அனு பவம் ஜீவாத்மனுக்கு உண்டாகிறது. அந்த அனுபவத்தின் விளைவாக இப்பிரபஞ்சம் அவ னுடைய நிரந்தரமான இருப்பிடம் அன்று என் பதை அறிந்துகொள்ளுகிருன். அதற்கு மேல் இப்பிரபஞ்சத்தில் துன்பம் கலவாத இன்பம் இல்லையென்பதையும் அவன் அறிந்து கொள் கிருன். இது ஜனன மரணமயமானது. பேரா னந்தப் பெருவாழ்வுக்கு இங்கு இடமில்லை. அப்பெரு நிலையை நாடுகின்றவன் உலகப் பற்றை அறவே நீக்குதல் வேண்டும். தெய்வப் பற்றைப் பலப் படுத்தவேண்டும். ஆத்ம சாதக னெருவன் எவ்வளவுக்கெவ்வளவு உலகப்பற் றைக் குறைத்துத் தெய்வப்பற்றை வளர்க்கின் ருனே அதற்கேற்றவாறு அவன் பரத்தினைச் சென்றடைவது திண்ணம். அற்றது பற்றெனில் உற்றது வீடு என்பது கோட்பாடு. இத்தத்து வத்திற்கு ஒப்பத் தாயுமானவர் தாம் அடைந் துள்ள ஆத்மபரிபாகத்தைப் பரமனிடம் எடுத் துச் சொல்லி வரவேண்டும் என்று பச்சைக்கிளி யிடம் வேண்டிக் கொள்ளுகிருர்.

40. பேதைப்பருவத்தே பின்தொடர்ந்துஎன் பக்குவமும் சோதித்த அண்ணல்வந்து தோய்வாரோ பைங்கிளியே.

தோய்வாரோ-ஆட்கொள்வாரோ.

ஆத்மசாதகன் ஒருவன் ஆரம்பதசையில் தீவிரபக்தியில் ஈடுபடுவதில்லை. மேகம் சூழ்ந் திருக்கிற பருவத்தில் சந்திரன் அம்மேகங் களுக்கிடையிலே தென்படுவதும் மறைந்துபட் டுப்போவதுமாகக் காட்சி கொடுக்கிறது. அதே விதத்தில் ஆத்மசாதகன் ஒருவன் இளமைப்பரு வத்தில் இருக்கின்றபொழுது அவனுடைய பக் திக்கும், தோற்றமும் மறைவும் மாறிமாறி அமை கின்றன. ஆட்கொள்கிற அண்ணல் இளைஞன் ஒருவனிடம் இருக்கின்ற இத்தகைய சலன மனப்பான்மையைப் பிரதிகூலமாகப் பொருள் படுத்துவதில்லை. சாதகனெருவனிடமிருக்கும் சிறிய அருள் நாட்டத்தையும் பெரியதாக பொருள்படுத்தும் பாங்கு இறைவனுக்குரியது. அந்தப் பாங்கின்படி இப்பொழுது அவர் என்னை வந்து முழுதும் ஆட்கொள்வாரா அல் லது பாராமுகமாகப் புறக்கணித்து விடுவாரா என்னும் விஷயத்தைப்பச்சைக்கிளியே, நீ பரம னிடம்சென்று அறிந்துவா என்னும் வேண்டு தல் இந்தக் கண்ணியில் அடங்கியிருக்கிறது.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

9. நன்மக்கள் உலகுக்கு உப்புப் போன்றவர்கள். உப்பு தின்பண்டங்கள் அனைத்துக்கும் சுவை தருகிறது. ஆனால், உப்பு தன் உவர்ப்பை இழந்துவிட்டால் அதற்கு எப்படி உவர்ப்பைக்கொடுப்பது? உவர்ப்பை இழந்த உப்பு ஒன்றுக்கும் உதவாது. காலில் மிதிபடும் மண்ணோடு மண்ணாகப் போகும்படி அதை மண்ணுக்குள் எறிந்து விடவேண்டிய நிலை வரும். அதுபோன்று நன்மக்கள் தங்கள் நலத்தை இழந்துவிடுவார்களானால் உலகம் பாழ்பட்டுப்போகும்.

மனிதனுக்கு நலம் தருவது தன்னம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் ஆகும். தன்னம்பிக்கைதான் தெய்வ நம்பிக்கையை வளர்க்கிறது. குருவை நாடிவரும் சிஷ்யனுக்குக் குரு முதலில் தன்னம்பிக்கையை ஊட்டுகின்றார். இது இந்தியப் பழக்கம். பலஹீனம், கோழைத்தனம், தோல்வி என்பனவற்றைப்பற்றிய உணர்ச்சி சிஷ்யன் உள்ளத்தில் ஏற்படாமல் குரு பாதுகாக்கின்றார். கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் புகட்டிய உபதேசத்தில் அவருடைய வாயிலிருந்து வந்த முதல் வாக்குகளாவன: "அர்ஜுனா, ஆரியனுக்கு அடாததும், ஸ்வர்க்கத்தைத் தடுப்பதும், புகழைப் போக்குவதுமான இந்த உள்ளச்சோர்வு எங்கிருந்து உன்னை வந்து அடைந்தது? பார்த்தா, அலியின் இயல்பை அடையாதே. அது உனக்குப் பொருந்தாது. இழிவான உள்ளத் தளர்வைத் துறந்துவிட்டு எழுந்திரு." தன்னம்பிக்கையும், தளர்வற்ற உள்ளமும், தெய்வ நம்பிக்கையும் மனிதனிடம் இல்லாவிட்டால் அவன் உவர்ப்பில்லாத உப்புப் போன்றவன் ஆகின்றான்.

கண்ணாடிப் பெட்டிக்குள்ளிருக்கும் பொருள்களைக் கண்ணாடி வழியாக ஒருவன் தெளிவாகப் பார்ப்பதுபோன்று ஞானிகள் நம் உள்ளத்தில் உள்ளதைத் தெளிவாகக் காண்கிறார்கள். ஆனால், சான்றோர்கள் நம்முடைய குறைகளையும், பலஹீனத்தையும் கூறி நம்மை இழிவுபடுத்துவதில்லை. மனிதன் இயல்பு எத்தகையது என்பதை அவர்கள் அறிவார்கள். பலஹீனத்தையும், ஏமாற்றத்தையும் உடைய மனிதன் வாழ்க்கையில் எதையும் சாதிக்கமுடியாது என்பதையும், அவன் ஆத்மீகத்துறையில் வளர்ச்சி அடைய முடியாது என்பதையும் அவர்கள் அறிவார்கள். எனவே, முதலில் அவர்கள் எல்லாரிடத்தும் தன்னம்பிக்கையை வளர்க்கிறார்கள்.

ஞானிகள் நம்நிலையைத் தெளிவுபட அறிகின்றார்கள். இப்பொழுதுள்ள நம்முடைய நிலைமையை அறிவதோடு எதிர்காலத்தில் நாம் எத்தகையவர்களாக ஆகமுடியும் என்பதையும் அவர்கள் அறிகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு ஓர் இளம் துறவி இந்தியாவைவிட்டுப் பிரச்சாரம் செய்வதற்காக அமெரிக்காவிற்குச் சென்றார். அவர் அமெரிக்காப் போவதற்கு முன்பு சுவாமி துரியானந்தரிடம் ஆசி பெறுவதற்குச் சென்றார். சுவாமி துரியானந்தர் அந்த இளம் துறவியைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்தார். "சுவாமி, நீங்கள் போற்றுகின்ற உயர் குணங்கள் எதுவும் என்னிடத்தில் இல்லை" என்று அந்த இளம் துறவி கூறினர். அதற்குச் சுவாமி துரியானந்தர் பகர்ந்ததாவது: "உன்னைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? நீ எவ்வளவோ பெரிய சக்தியை வெளிப்படுத்தப் போகிறாய்." இங்ஙனம் கூறிச் சுவாமி துரியானந்தர் அந்த இளம் துறவியிடத்துத் தன்னம்பிக்கையை ஊட்டினர். நம்மிடம் அளப்பரிய தெய்வீக சக்தி மறைந்து கிடக்கிறது. அந்தத் தெய்வீக சக்தியை வெளிப்படுத்தும் ஆற்றல் நம்மிடத்து இருக்கிறது. அந்த ஆற்றலில் குரு நமக்கு நம்பிக்கையை ஊட்டுகின்றார்.

"பணிவுடையவர்கள் பாக்கியவான்கள்" என்று இயேசுநாதர் பகர்ந்திருக்கிறார். பணிவு, தன்னம்பிக்கை ஆகிய இரண்டையும் சேர்த்துப் பெற்றிருக்கிறவர்களைத்தான் உலகத்துக்கு உப்புப்போன்றவர்கள் என்று இயேசுநாதர் பகர்கிறார். தான் பாவியென்றோ, கீழ்மை உடையவனென்றோ, புழுப்போன்றவனென்றோ பாவித்துத் தன் கீழ்மையிடத்து நம்பிக்கைவைப்பவனைத் தன்னம்பிக்கை உடையவனென்று இயேசுநாதர் குறிப்பிடவில்லை. தான் புனிதவான் என்றும், தான் ஆத்மசொரூபம் என்றும், தன்னிடத்துத்தெய்வத் தன்மை உண்டுஎன்றும்

நம்புபவனைத்தான் தன்னம்பிக்கை உடையவன் என்று இயேசுநாதர் பகர்கிறார். அத்தகைய தன்னம்பிக்கை உடையவர்களே உலகுக்கு உப்புப் போன்றவர்கள் ஆகிறார்கள். அத்தகைய தன்னம்பிக்கை உடையவர்கள் புலன் இன்பத்தை வெல்லும் திறன் உடையவர்களாகிறார்கள். அவர்கள் தங்களைத்தெய்வத்திடம் முற்றும் ஒப்படைத்துவிட்டுச் சிற்றின்ப மோகத்திலிருந்து விடுதலையடைகிறார்கள். தெய்வத்திடம் தங்களை முற்றிலும் ஒப்படைத்தவர்கள் மேன்மக்கள் ஆகின்றார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்ரீமதி ராதையைப்பற்றிப்பகர்ந்திருக்கிறார். ஸ்ரீமதிராதை கிருஷ்ணனுடைய அன்புக்குப் பாத்திரமானவள். கோபிகாஸ்திரீகளுள் ஸ்ரீமதி ராதை முதலிடம் பெறுகின்றாள். கிருஷ்ணனுடைய அன்புக்குத் தான் பாத்திரமானவள் என்று ஸ்ரீமதி ராதை பகர்ந்ததை வைத்து அவளுக்கு அகங்காரம் வந்துவிட்டதென்று மற்றவர்கள் எண்ணினர்கள். கிருஷ்ணனிடமும் தங்கள் அபிப்ராயத்தை வெளியிட்டார்கள். ஸ்ரீமதி ராதை பகர்ந்ததாவது: "நான் அகங்காரம் உடையவள். ஆனால் அவ்வகங்காரம் கிருஷ்ணனைப் பற்றியதாகும். நான் என்று சொல்லுவதும், எனது என்று சொல்லுவதும் எனக்குரியவைகளல்ல. நான் கிருஷ்ணனுக்குரியவள், என்னுடைய அனைத்தும் கிருஷ்ணனுக்குரியவை." 'நன்றே செய்வாய், பிழை செய்வாய், நானே இதற்கு நாயகம்' என்று தன்னை முற்றும் தெய்வத்திடம் ஒப்படைத்தவர்களிடம் அகங்காரம் இருக்க முடியாது. பக்தர்களுடைய அகங்காரம் யாருக்கும் ஒரு தீங்கும் செய்வதில்லை. மேலும் அவ்வகங்காரம் பக்தர்களை உலகத்தில் கட்டுப்படுத்துவதில்லை. குண்டூசியைக் கயிறு கொண்டு கட்டமுடியாது. அது கட்டிலிருந்து நழுவிப்போய்விடும். அங்ஙனம் பக்தர்கள் அகங்காரக் கட்டிலிருந்து நழுவி விடுவார்கள். தூய்மையும், உறுதியும் படைத்த மனம் படைத்தவர்கள் உலகுக்கு உப்புப் போன்றவர்கள் ஆகிறார்கள் என்று இயேசுநாதர் பகர்ந்துள்ளது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசமொழி ஒன்றை ஞாபகமூட்டுகிறது. அவ்வுபதேச மொழியாவது: "உங்களுக்குக் கடவுளுடைய அருள் பூரணமாகக் கிட்டி இருக்கலாம். குருவின் அனுக்கிரகமும் உங்களுக்குப் பூரணமாக இருக்கலாம். பக்தர்களுடைய அனுக்கிரகமும் உங்களுக்கு இருக்கலாம். ஆனால் ஒன்றின் அனுக்கிரகம் இல்லாவிட்டால் நீங்கள் உபயோகமற்றவர்களாகி விடுவீர்கள்." அந்த ஒன்றுதான் ஒருவருடைய மனதின் அருளாகிறது. முக்தி அடையவேண்டுமென்ற அருள்தாகம் உள்ளத்தில் எழாவிட்டால் மேற்கூறிய மூன்று அருள்கள் இருந்தாலும் ஒருவன் முன்னேற முடியாது. நம்முடைய மனதின் கிருபை நமக்கு இல்லாவிட்டால் காலில் மிதிபடும் மண்போன்று நாம் பிரயோஜனமற்றவர்களாகிவிடுவோம். மனதை உறுதியாக்கி நம்மிடத்துள்ள தெய்வத் தன்மையில் நம்பிக்கையை வைத்து நம்மை முழுமனதோடு தெய்வத்திடம் ஒப்படைப்போமாக! அப்பொழுது நம்மிடத்தில் மறைந்து கிடக்கும் தெய்வத்தன்மை முற்றிலும் வெளிப்படுகிறது. தெய்வத்தன்மை வெளிப்படும் பொழுதுதான் நாம் முற்றிலும் உலகுக்குப் பயன்பட்டவர்களாக முடியும். உள்ளத்தில் தெய்வத்தன்மை என்னும் நலன் ஓங்கப்பெற்றவர்கள் உலகுக்கு உப்புப் போன்றவர்களாகிறார்கள். அந்தத் தெய்வத் தன்மையை இழந்து இருப்பவர்கள் உவர்ப்பை இழந்த உப்பு போன்று ஒன்றுக்கும் உதவாதவர்களாகப் போய்விடுவார்கள். அப்பேர்ப்பட்டவர்களால் உலகுக்கும் நன்மை இல்லை. அத்தகையவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகும்பொழுது உலகம் பாழ்பட்டுப் போகிறது. இயேசுநாதருடைய உபதேசம் இக்கருத்தை விளக்குகிறது.

'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்னும் பழமொழி ஒன்று உண்டு. உணவோடு உப்பு சேர்கின்றபொழுதுதான் அது உண்பதற்குப் பயன்படுகிறது. உணவுக்குச் சுவையூட்டி அதை விரும்பி உண்பதற்கு உரியதாக ஆக்குவது உப்பின் செயல் ஆகின்றது. உவர்ப்போடு கூடிய உப்புதான் இச்செயலைச் செய்ய முடியும். அங்ஙனம் மனிதன் சுயநலமற்றவனாகவும், தன்னம்பிக்கை உடையவனாகவும் இருக்கும்பொழுதுதான் மக்களுக்கு நலன் செய்ய முடியும். எனவே மக்கள் அத்தகையவர்களாகவேண்டும் என்று இயேசுநாதர் இவ்வுபதேசத்தின் மூலம் புகட்டுகின்றார்.

பேராசிரியர் மாக்ஸ்முல்லர்

(சுவாமி விவேகானந்தர் 1896ஆம் ஆண்டு பிரம்மவாதின் என்ற பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை)

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன

கடமையைச் செய்வதற்கு உனக்கு உரிமை உண்டு. அதன் பயனைப் பெறுவதற்கு உனக்கு உரிமை இல்லை என்பது கீதையின் போதனை. பிரம்மவாதின் பத்திரிகையின் குறிக்கோளும் அதுவே. ஆனால் உண்மையாகச் செயல்புரிகின்ற ஒவ்வொருவனும் அவன் பணியை விட்டுப் போவதற்கு முன்பு பிறரால் அறிந்து போற்றுதற்குரியவனாகின்றான். அதிலிருந்து அவன் தப்பிக்கமுடியாது.

நம் பணியின் துவக்கம் சிறப்பாக அமைந்தது. நம் நண்பர்கள் காட்டிய இடைவிடாத ஆர்வம் சொல்லுக்கு அப்பால்பட்டதாக இருந்தது. உண்மையான நம்பிக்கையும், தூய்மையான நோக்கமும் இறுதியில் வெற்றியைத் தரும். நம்பிக்கையும், தூய்மையும் உடையவர்கள் சிலராக இருப்பினும் அவர்கள் எல்லா இடையூறுகளையும் கடந்து நிச்சயமாக முன்னேறுவார்கள்.

தெய்வத்தினிடமிருந்து செய்தி வருகிறது என்று சொல்லும் உலகாயதர்களிடமிருந்து விலகியிருக்க வேண்டும். நண்பர்களே, அவர்களுக்கு அத்தகைய செய்தி வராது என்பது நம்முடைய கருத்தன்று. நாம் வசிக்கும் இவ்வுலகில் அப்படிக் கூறுபவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் காமம், காசு, புகழ் ஆகியவைகளின் ஆசையை மறைத்துவைத்திருப்பவர்களாகிறார்கள். பாக்கியுள்ள பத்துப்பேர்களுள் ஒன்பது பேர் மருத்துவர்களுடைய உதவியை நாடுபவர்களாக இருக்கிறார்கள். தத்துவ ஞானிகளின் ஆதரவைக்காட்டிலும் மருத்துவர்களின் ஆதரவே அவர்களுக்குப் பராமரிப்பாக அமைகின்றது.

நிலைத்த ஞானம் பெறுவதற்கு முதலில் ஒழுக்கம் அவசியம் ஆகிறது. ஆகவே முதலில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்கம் தனிப்பட்ட ஒருவருக்கு எவ்வளவு அவசியமோ பலபேர் சேர்ந்துள்ள ஒரு சங்கத்திற்கும் அது அவ்வளவு அவசியமாகிறது. ஆன்மீகத் துறையில் செல்லும் நாம் எடுத்துக்கொள்கின்ற ஒவ்வொரு முயற்சியையும் சந்தேகக் கண் கொண்டு உலகம் காண்கிறதே என்று நாம் கோபப்படக் கூடாது. அறியாமை மிகுந்த உலகம் எத்தனையோ தடவை ஏமாற்றத்துக்குள்ளாகி இருக்கிறது. ஒரு சமுதாயத்திற்கு லௌகீக புத்தி வளர்கின்ற அளவு நலம் தரும் இயக்கம் ஒன்று வளர்வதை அது சந்தேகக்கண்கொண்டு பார்க்கும். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமென்றால் அந்த இயக்கத்துக்கு அது பகைமையாக இருக்கும். அப்படி இருப்பது அந்த இயக்கத்துக்கும் நலனாக அமைகின்றது. சமுதாயத்துக்கு அந்த இயக்கம் ஓர் உண்மையை வெளியிட்டு அதைப்பரப்புவதற்காகவும் சமுதாயத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் அவ்வியக்கம் அமைந்திருக்குமானால் அதைத் தூற்றிய சமுதாயம் தூற்றுவதை விட்டுப் புகழ ஆரம்பித்துவிடும். சமுதாயத்தின் இகழ்ச்சிகள் எல்லாம் அன்பாக மாறிவிடும். இக்காலத்து மக்கள் சமுதாயப் பயனையோ, அரசியல் பயனையோபெறுவதற்குச் சமயத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த நோக்கம்கொண்டு இருக்கிறார்கள். இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மதத்தின் லட்சியம் மதமேயாகும். சமுதாயப் பயன் ஒன்றை அடைவதற்காக உதவும் மதம் மதமாகாது. அது வேறு எதுவாக வேண்டுமென்றாலும் இருக்கலாம். புலன் இன்பத்தை நுகர்வதைத் தவிர மனிதனுக்கு வேறு லட்சியம் இல்லை என்று கூறுவது தெய்வ நிந்தனை ஆகும். மனித நிந்தனையும் ஆகும். சத்தியம், தூய்மை, சுயநலமின்மை ஆகிய மூன்றும் எங்கு இருக்கின்றனவோ அங்கு எல்லா மேன்மைகளும் உண்டாகின்றன. அம் மூன்றையும் அனுஷ்டிப்பவர்களிடம் பேராற்றல் தோன்றுகிறது. அப்பேராற்றலை அழிப்பதற்கு மண்ணுலகிலோ, விண்ணுலகிலோ எந்தச் சக்தியும் இல்லை. தூய்மை, சத்தியம், சுயநலமின்மை ஆகிய மூன்றையும் பெற்றிருப்பவனைப் பிரபஞ்சம் முழுதும் எதிர்த்து நிற்பினும் அதோடு போரிடுவதற்கு அவன் வலிமையுடையவனாகின்றான்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் கொள்கைகளை விட்டுக்கொடுத்துச் சமாதானம் செய்துகொள்ளும் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நீங்கள் யாருடனும் பகைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் அனுகூலம், பிரதிகூலம் ஆகிய இரண்டிலும் உங்களுடைய கொள்கைகளில் நீங்கள் உறுதியாக இருக்கவேண்டும். பிறருடைய உதவியைப் பெறவேண்டும் என்ற ஆசையால் பிறருடைய அற்ப ஆசைகளுக்கு உங்களுடைய கொள்கைகளை விட்டுக்கொடுத்து விடக்கூடாது. நீங்கள் ஆத்ம சொரூபம். உங்கள் ஆத்மாவே இப் பிரபஞ்சத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்க உங்களுக்கு யாருடைய ஆதரவு தேவைப்படுகிறது? பொறுமையோடும், அன்போடும், உறுதியோடும் பொறுத்திருங்கள். இப்பொழுது உங்களுக்கு உதவியாளர்கள் வராவிட்டாலும் உரிய காலத்தில் உதவியாளர்கள் உங்களுக்கு வருவார்கள். ஏன் நீங்கள் அவசரப்படுகிறீர்கள்? மகத்தான காரியத்தைச் செய்வதற்குரிய உண்மையான சக்தி ஆரம்பத்தில் மறைந்துபட்ட நிலையில் தான் அமைந்து இருக்கிறது. வங்காளத்தில் குக்கிராமம் ஒன்றில் ஏழைப் பிராமணருக்குப் பிறந்த ஒரு சிறுவருடைய வாழ்வும், போதனையும் சில ஆண்டுகளுக்குள்ளாகத் தூர தேசங்களுக்குப் போய்ச்சேர்ந்தன. அத்தூர தேசங்களைப் பற்றி நம் முன்னோர்கள் கனவிலும் நினைத்திருக்க முடியாது. இங்ஙனம் அச்சிறுவருடைய வாழ்க்கையும், போதனைகளும் அத்தூர தேசங்களுக்குப் போகும் என்று எவரால் நினைத்திருக்க முடியும்? பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத்தான் நான் இங்குக் குறிப்பிடுகின்றேன். 'பத்தொன்பதாம் நூற்றாண்டு' என்ற பத்திரிகையில் பேராசிரியர் மாக்ஸ்முல்லர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதியிருக்கின்றார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவருக்குத் தேவையான விஷயங்கள் கிடைத்திருந்தால் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிப் பெரிய வாழ்க்கை வரலாறு ஒன்று எழுதுவதற்கு முன்வருவதில் அவர் பெருமகிழ்வு அடைந்திருப்பார். அவர் சாதாரண மனிதர் அல்லர். சில நாட்களுக்கு முன்பு நான் அவரைச் சந்தித்தேன். நான் அவருக்கு மரியாதை செலுத்தச் சென்றேன். ஸ்ரீ ராமகிருஷ்ணரை நேசிப்பவர் யாராக இருந்தாலும் அவரைச் சந்திக்க நான் விரும்புவேன். அவருடைய சமயம் இனம் நாடு ஆகியவை எதுவாக இருந்தாலும் அவரைச் சந்திக்க மேற்கொள்ளும் பயணத்தை நான் ஒரு புண்ணிய யாத்திரையாகக் கருதுவேன். "என்னிடம் பக்திகொண்டிருப்பவரிடம் பக்தியுடையவர்கள் என்னுடைய சிறந்த பக்தர்களாவார்கள்." இது பொய்யா மொழி அல்லவா?

பிரம்ம சமாஜத்துத் தலைவர் காலஞ்சென்ற கேசப்சந்திரசேன் என்னும் பெரியாருடைய வாழ்க்கையில் திடீர் மாறுதல் ஏற்பட்டதை மாக்ஸ்முல்லர் அறிந்திருந்தார். அம்மாறுதலுக்குக் காரணமாயிருந்த அகச்சக்தியைப் பற்றி மாக்ஸ்முல்லர் ஆராய ஆரம்பித்தார். அந்த ஆராய்ச்சி செய்தது முதல் மாக்ஸ்முல்லர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யராகவும், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்க்கையையும், போதனைகளையும் போற்றுபவராகவும் மாறிவிட்டார். "இன்றைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரை வழிபட்டு வருகிறார்கள்" என்று நான் பேராசிரியர் மாக்ஸ்முல்லரிடம் பகர்ந்தேன். "அத்தகைய மகானை அல்லாது, வேறு யாரை வணங்குவது என்று மாக்ஸ்முல்லர் பதிலளித்தார். பேராசிரியர் மாக்ஸ்முல்லர் அன்பே உருவானவர் என்று பகரலாம். அவர் திரு ஸ்டர்டியையும், என்னையும் தம்முடன் உணவு அருந்துமாறு கேட்டுக்கொண்டார். ஆக்ஸ்போர்டு நகரிலுள்ள பல கல்லூரிகளையும், பாட்லியன் என்னும் நூல் நிலையத்தையும் எங்களுக்குக் காட்டினார். எங்களுடன் ரயில் நிலையத்திற்கு வந்தார். இவ்வளவும் நான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யராக இருந்ததை முன்னிட்டு, அவர் செய்திருக்கிறார். "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சிஷ்யரை ஒவ்வொருநாளும் நான் சந்திக்க முடியாதே" என்று அவர் கூறிய மொழி இவ்வுண்மையை விளக்குகிறது.

மாக்ஸ்முல்லரின் சந்திப்பு உண்மையிலேயே எனக்கு ஆத்மீக விளக்கமாக இருந்தது. ஓர் அழகிய சிறு வீடு; அவ் வீட்டினுள் ஒரு அழகான தோட்டம்; நரைத்த தலையுடன் கூடிய ஒரு ரிஷி, எழுபது வயதாகியும் சுருக்கமில்

லாத குழந்தையின் நெற்றி போன்ற மிருதுவான நெற்றி, அமைதியும் அருளும் உடைய முகவிலாசம், ஆழ்ந்த ஆன்மீகத்தை வெளிப்படுத்தும் நெற்றியில் அமைந்துள்ள கோடுகள், பொறுந்தன்மை வாய்ந்த வாழ்க்கைத் துணைவி, கடுமையான உழைப்பு, மகிழ்ச்சியோடு கூடிய உணர்ச்சி, பேர் ஊக்கம், எதிர்ப்புகளையும், இகழ்ச்சிகளையும் வெல்லும் இயல்பு, பண்டைக்கால ரிஷிகளுடைய கருத்துக்களிடத்து ஆழ்ந்தமரியாதை, இத்தகைய மனிதர்; வீட்டுக்கு அருகில் மரங்களும், புஷ்பங்களும் நிறைந்த அமைதி, தெளிந்தவானம்—ஆகிய இவை என்னை இந்தியாவின் பொற்காலம் என்று சொல்லப்படுகின்ற பழங்காலத்துக்கு எடுத்துச் சென்றன. பிரம்மரிஷிகளும், ராஜ ரிஷிகளும், சிறந்த வானப்பிரஸ்தர்களும், அருந்ததிகளும், வசிஷ்டர்களும், வாழ்ந்த காலம் அக்காட்சியைக் கண்டவுடன் என் மனதில் எழுந்தது.

நான் ஒருமொழி வல்லுநரையோ, கற்றவரையோ காணவில்லை. பிரம்மத்தோடு ஒன்றித்துப் போய்விட முன்னேறிக்கொண்டிருந்த ஆத்மாவை, எங்கும் பரந்துள்ள பரப்பிரமத்தோடு ஒன்றித்துவிட ஒவ்வொரு கணமும் விரிந்து கொண்டே வந்த ஹிருதயத்தை நான் கண்டேன். எல்லாரும் பொருளற்ற விஷயங்களில் தங்களைக் கொடுத்துத் தங்கள் வாழ்க்கையைப் பாலைவனம்போன்று ஆக்கிக்கொண்டார்கள். ஆனல், மாக்ஸ்முல்லரோ வற்றாத இன்ப ஊற்று ஒன்றைப் பெற்றுவிட்டார். அவருடைய நெஞ்சம் பரத்துக்காகத் துடித்துக்கொண்டிருந்தது. आत्मानं वै विजानथ अन्यां वाचं विमुञ्चथ—ஆத்மானம் வை விஜானத அன்யாம் வாசம் விமுஞ்சத "ஆத்மனை மட்டும் அறியுங்கள். வேறு பேச்சுக்களையெல்லாம் விட்டொழியுங்கள்" என்ற உபநிஷதக் கருத்தின் ஒளியைப்பற்றிக்கொண்டார்.

உலகத்தையே ஆட்டிப்படைக்கவல்ல உலகியல் அறிவும், தத்துவஞானமும் அவரிடம் இருந்தன. அவை ஆத்மாவை அறிவதற்கு அவருடைய உள்ளத்தை மேலும், மேலும் உயர்த்திச் சென்றன. அவருடைய அபர வித்தையானது அவருக்குப் பரவித்தையைப் பெறப் பயன்பட்டது. உண்மையான பணிவு கல்வியின் மூலம் வந்தமைகின்றது.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்பது வள்ளுவர் வாக்கு.

உயர்நிலை அடைவதற்கு வழிகாட்டாத அறிவினால் யாது பயன்?

இந்தியாவின் மீது அவர் கொண்டிருந்த பேரன்புதான் என்னே! அவர் இந்தியாவின் மீது கொண்டிருந்த அன்பில் நூற்றில் ஒருபங்கு அன்பாவது என் தாய் நாட்டின்மீது எனக்கு உண்டாகவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவருடைய உள்ளம் பேருள்ளமாக இருந்தது. அவருடைய மனம் தீவிரமாகச் செயல்பட்டு வந்தது. ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் இந்தியக் கருத்துலகில் அவர் மனதைச்செலுத்தி வாழ்ந்து வந்தார். மேலும் சம்ஸ்கிருதத்தில் ஆழ்ந்து மூழ்கியவராகவும் அவர் இருந்தார். சம்ஸ்கிருத இலக்கியத்தில் அவர் ஆழ்ந்து மூழ்கியவராக இருந்தமையால் தம்மை முழுவதையும் அதில் உள்ள கருத்துப்படி அழகுறச் செய்துகொண்டார்.

வேதாந்திகளுள் எல்லாம் பெரிய வேதாந்தியாக அவர் இருந்தார். வேதாந்தத்தின் உண்மைகளை எல்லாம் அவர் சரியாக அறிந்துகொண்டார். வேதாந்தம்தான் மதங்களுக்கு எல்லாம் ஒளி தரக்கூடியதென்பதை அறிந்தார். எல்லா மதங்களுக்கும் வேதாந்தம் பொது ஆகிறது. வேதாந்தத்தைத்தான் எல்லா மதங்களும் அனுஷ்டித்து வருகின்றன என்பதை அவர் அறிந்திருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அவருக்கு எவ்வாறு புலப்பட்டார்? பழங்கால இந்தியத் தத்துவத்தை விளக்கிக் காட்டுபவராகவும், பழங்கால இந்தியாவின் தோற்றமாகவும், எதிர்காலத்தில் எல்லா நாடுகளுக்கும் ஆன்மீக ஒளியை எடுத்துச்செல்லும், எதிர்கால இந்தியா எப்படி இருக்கப்போகிறது என்பதற்கு முன்னோடியாகவும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருக்குப் புலப்பட்டார். வைரத்தின் மதிப்பை வைர வியாபாரிதான் அறிவான் என்பது முதுமொழி. ஆனல் மேனாட்டு ரிஷியான மாக்ஸ்முல்லர் இந்தியக் கருத்து என்னும் வானத்தில் தோன்றிய ஒவ்வொரு புது நட்சத்திரத்தையும் இந்தியர்கள் உணருவதற்கு முன்பே அறிந்து பாராட்டினர் என்பது வியப்புக்குரிய விஷயமல்லவா!

நீங்கள் எப்பொழுது இந்தியாவிற்கு வருவீர்கள் என்று நான் அவரைக் கேட்டேன். இந்தியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் முன்னோர்களின் எண்ணங்களை அறிந்து நன்ருக விளக்கம் செய்து வரும் உங்களை மனமார வரவேற்பார்கள் என்று நான் கூறினேன். நான் கூறியதைக் கேட்டதும் அம்முதியோருடைய முகத்தில் ஒளி வீசியது. அவர் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. அவர் தலையைச் சிறிது அசைத்தவராக அவருடைய வாயிலிருந்து வார்த்தைகள் மெதுவாக வந்தன. "நான் இந்தியாவுக்கு வருவேனேயானல் இந்த நாட்டிற்கு மீண்டும் திரும்பிவரமாட்டேன். என்னுடைய சரீரத்தை நீங்கள் அங்குதான் தகனம் செய்ய வேண்டும்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினர். அவருடைய புனிதம் நிறைந்த சித்தத்தில் சேர்த்து வைத்திருந்த புனித சம்ஸ்காரங்களுக்குள் மேலும் கேள்வி கேட்பதானது அனுமதியின்றி நுழைவதுபோல் தெரிந்தது.

तच्चेतसा स्मरति नूनमबोधपूर्वं ।
भावस्थिराणि जननांन्तरसौहृदानि ॥

தச்சேதஸா ஸ்மரதி நூனமபோதபூர்வம்
பாவஸ்திராணி ஜனனாந்தரஸௌஹ்ருதானி

முன்பல பிறவிகளில் தன் நெஞ்சில் வேர் விட்டு நிலைத்திருக்கிற நட்புகளை எல்லாம் தன் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிருர் என்று ஒரு கவிஞர் கூறியிருப்பது அவர் விஷயத்தில் பொருத்தமாக இருந்தது.

அவர் வாழ்க்கை இவ்வுலகத்துக்கு அருள் வாழ்வாக அமைந்திருக்கிறது. அவருடைய வாழ்வு நீண்டகாலம் இவ்வுடலோடு இருந்து பல்லாண்டு, பல்லாண்டு இவ்வுலகுக்கு அவர் பயன்படுமாறு அமைவது ஆகுக.

அன்புதான் ஆட்சி புரியவேண்டும். அன்புக்கு அனைவரும் கட்டுப்பட்டாக வேண்டும். அன்பு உள்ள இடத்தில் பிணக்குக்கு இடமில்லை. அன்புள்ள இடத்தில் அனைத்தும் சுமுகமாக நடைபெறும். அன்னையின் அருளால் அனைத்தும் சுமுகமாக நடந்துகொண்டு இருக்கின்றன. அன்னை அனைவருடைய உள்ளத்திலும் அன்பைத் தந்திருக்கிருள். ஆகையால் அன்னையின் காரியம் சிறப்பாக நடந்துகொண்டு இருக்கிறது. அன்னையின் காரியத்தில் நாம் உண்மை உள்ளவர்களாக இருப்போமேயானல் எந்தத்தவறும் நிகழ்ந்து விடும் என்று அஞ்ச வேண்டுவதில்லை. அன்னையை மறந்தால் அக்கணமே நாம் ஆபத்துக்குள்ளாவோம். ஆகையால் அன்னையின் காரியம் செய்கிறோம் என்ற எண்ணத்தைச் சதா ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

நீங்கள் அனைவரும் அன்னையின் அருள்புதல்வர்கள் ஆவீர்கள். நீங்கள் தன்னடக்கம் பழகி வரவேண்டும். உங்கள் விருப்பத்துக்கேற்ற ஆத்மசாதனை செய்யலாம். மூன்று நாட்களுக்குத் தனித்திருந்து சாதனை செய்து உங்கள் உள்ளத்தைச்சோதித்துப் பார்க்கலாம். நாள் முழுவதும் சிலர் பட்டினி இருக்கலாம். இன்னும் சிலர் இரவு முழுவதும் பிரார்த்தனையிலும், தியானத்திலும் கழிக்கலாம். இன்னும் சிலர் இருபத்துநான்கு மணி நேரமும் மௌன விரதம் இருக்கலாம். இவைகள் எல்லாம் மன அடக்கத்திற்குப் பயன்படுகின்றன. சித்துக்களில் நாட்டம் செலுத்தக்கூடாது. சித்துக்கள் ஆத்மானபூதிக்குத் தடையாக இருக்கின்றன. எனவே ஆத்ம சாதகர்கள் சித்துக்களில் கவனம் செலுத்தக்கூடாது. சித்துக்கள் எல்லாம் மயக்கத்தை உண்டுபண்ணுபவைகள். ஆத்மசாதகர்கள் அம்மயக்கத்தில் அகப்படாமல் இருக்கவேண்டும். சித்துக்களின் மூலம் உலக மக்களை மயக்கலாம். ஆனல், கடவுள் சாட்சாத்காரம் செய்வதற்குச் சித்துக்கள் பயன்படா. சித்துக்களில் அகப்படாதவர்கள் பாக்கியவான்கள். ஆத்மசாதனத்தில் சித்துக்கள் வந்தமைவது சாதனையின் வளர்ச்சிக்குத் தடையென்றே கருதவேண்டும்.

—*சுவாமி துரியானந்தர்*

அறத்தாறு

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 20-1-75 அன்று மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[258ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்க்கை சம்பந்தமான பிரச்னைகள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். அவைகளுள் முக்கியமானவற்றை ஆராய்ந்து பார்த்து அடிப்படைக் கோட்பாடுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கைக்கு அவ் அடிப்படைக் கோட்பாடுகள் நன்கு பயன்படுபவை ஆகின்றன. எல்லாத் தொழில்களும் மேன்மை வாய்ந்தவைகளாகும். மேலான தொழில் கீழான தொழில் என்பது இல்லை. எல்லாத் தொழில்களின் வாயிலாகவும் மனிதன் நன்கு வாழ்ந்திருக்கலாம். எல்லாத் தொழில்களையும் ஆத்ம பரிபாகத்துக்கும் பயன்படுத்தலாம். தன்னலமற்றுத் தொழில்களைச் செய்பவன் நல்ல குடிமகன் ஆகின்றான்.

பொதுப்பட சுகஜீவனம் செய்வது சிறந்தது என்ற கருத்து மக்களுக்கிடையில் இருந்து வருகிறது. பாடுபட்டு உழைப்பது மட்டமானது என்று கருதுகிறார்கள். மக்களுக்கிடையில் உள்ள இக்கருத்து மாறி அமைவது நல்லது. சுகஜீவனம் செய்து கொண்டு சும்மா இருப்பது மட்டமானது; உழைத்துப் பாடுபடுவது மேலானது என்ற கருத்து மக்களிடத்து உண்டாக வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கைத் தத்துவத்தை நாம் உள்ளபடி அறிந்தவர்கள் ஆகின்றோம். உலகில் நாம் வாழ்ந்திருப்பது விண்காலம் போக்குவதற்கு அன்று. சுகஜீவனம் பண்ணுவதற்காக உலகில் நாம் வாழ்ந்திருக்கவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு நல்ல துறையில் நம்முடைய ஆற்றலைப் பயன்படுத்துகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நம் ஆற்றல் வளர்ந்து கொண்டே போகின்றது. "இயல்வது கரவேல்" என்பது ஔவையின் வாக்கு. அரிய பெரிய செயல்களை நம்மால் செய்ய முடியும். அவற்றை நாம் செய்யாது நம்மிடம் மறைத்து வைப்போமானால் நாம் முன்னேற்றம் அடைய முடியாது. **Expansion is Life; Contraction is Death** என்பது விவேகானந்தர் வாக்கு. நம்முடைய திறமைகளை எல்லாம் பயன்படுத்துகின்ற அளவு வாழ்வு விரிவு அடைகின்றது. சுகஜீவனம் செய்து கொண்டு சும்மா இருப்பவர்களுடைய வாழ்வு சுருங்கிக் கொண்டே போகின்றது.

ஒருவன் தீமையை எதிர்க்கின்றான். மற்றொருவன் தீமையை அமைதியாக ஏற்றுக்கொள்கின்றான்; அல்லது அதற்கு ஆதரவு தருகின்றான். இவர்களுக்கிடையில் யாருடைய செயல் அறமானது? யாருடைய செயல் அறத்துக்குப் புறம்பானது என்று முடிவு செய்வது சிரமமானது. சில இடங்களில் கேட்டுக்கு இடம் தருவது அறமாகத் தோன்றுகிறது. நலம் எப்பொழுதுமே பாராட்டத்தக்கதாயிருக்கிறது. கேடு அமைகின்ற இடத்து அக்கேட்டை ஆமோதிப்பதா அல்லது நிராகரிப்பதா என்னும் கேள்வி எழுகின்றது. கேட்டை ஆமோதிப்பதன் மூலம் சில இடங்களில் மேன்மை அடைகின்றோம். வேறு சில இடங்களில் கேட்டை நிராகரிப்பதன் மூலம் மேன்மையடைகின்றோம். அதில் அவ்வளவு சிக்கல் இருக்கின்றது. உலகைப்பற்றிய அடிப்படை உண்மை ஒன்றை நாம் அறிந்திருக்க வேண்டும். இவ்வுலகம் அடியோடு துன்பம் நிறைந்ததுமன்று; இன்பம் நிறைந்ததுமன்று; இன்ப துன்பங்கள் கலந்திருப்பதுதான் இவ்வுலகம். இவ்வுலக வாழ்வு நமக்கு நித்தியமானதன்று. ஆகையால் நமக்குக் கிடைத்துள்ள நேரத்தை வீணாக்குவது பொருந்தாது. எந்த வேளையில் மரணம் இந்த வாழ்வை முடிவுக்குக் கொண்டு வரும் என்பது நமக்குத் தெரியாது. நமக்கு அமைந்துள்ள கடமையை முறையாகச் செய்து கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களாகின்றோம்.

இவ்வுலக வாழ்வில் வரும் துன்பத்தை நாம் அறவே தடுத்து நிறுத்த முடியாது. துன்பம் வரும்பொழுது நாம் அதை எப்படி ஏற்றுக் கொள்கின்றோம் என்பதில்தான் நம் பண்பாடு வெளியாகிறது. நம்முடைய தேசிய பொக்கிஷமாக இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்கள் இருக்கின்றன. காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் அவ்விரண்டு நூல்கள் எல்லா மொழிகளிலும் அந்தந்த மாகா

ணங்களில் தோன்றிய பெருமக்களால் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவ்விரண்டு நூல்களை ஆராய்வது நம் வாழ்க்கைத் தத்துவத்தை ஆராய்வதாகிறது. அவற்றை ஆராய்கின்ற அளவு நம் ஜீவிதத்தில் அவற்றை எப்படிப் பயன்படுத்துவதென்பது நமக்கே விளங்குகின்றது. அவ்விரண்டும் நம் தேசியப் பண்பாட்டுக்கு என்றென்றும் களஞ்சியங்களாக இருக்கின்றன. கேடு, நலன் ஆகிய இரண்டும் அவ்விலக்கியங்களில் இடம் பெற்றிருக்கின்றன. கேட்டுக்கு எந்தச் சந்தர்ப்பங்களில் இடம் கொடுக்கலாம் என்பதற்கும், எந்தச் சந்தர்ப்பங்களில் கேட்டை நிராகரிக்கலாம் என்பதற்கும் அவற்றிலிருந்து விடை கிடைக்கின்றது. இராமனுக்குப் பட்டாபிஷேக ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பொழுது தசரதன் இராமனிடம் பகர்ந்ததாவது: "இராமா, உனக்குப் பெரிய பொறுப்பு ஒன்று தரப்படுகின்றது. இப்பொறுப்பை நன்கு நிர்வகிப்பதற்கு ஏற்ற நல்ல மனப்பான்மை பெறுவதற்கு நீயும், சீதாபிராட்டியும் பட்டினி இருந்து பிரார்த்தனை செய்து உங்களை ஆயத்தப்படுத்துங்கள். ராஜ்யப் பொறுப்பு என்பது சுகஜீவனம் செய்வதன்று. குடிமக்களைப் பராமரிக்கும் பெரிய பொறுப்பு அது ஆகும். அதற்கு உங்களை நன்கு ஆயத்தப்படுத்துங்கள்." இராமன் மனமுவந்து 'சரி' என்று அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். ஒரு நாளில் நிலைமை முற்றிலும் மாறி அமைகிறது. மறுநாள் கைகேயி தந்தையின் பிரதிநிதியாக இருந்துகொண்டு வனம் போகவேண்டுமென்று இராமனுக்கு உத்தரவு போடுகின்றாள். இராமன், அத்தீமையை எதிர்ப்பதற்கு மாறாக அதை ஏற்றுக்கொள்கின்றான். அன்றைக்கு இராமன் நாட்டை ஆள்வதா, காட்டுக்குப் போவதா என்ற பிரச்னையை எழுப்பியிருந்தால் கைகேயி, மந்தரை நீங்கலாக அயோத்தி மக்கள் அனைவரும் இராமன் நாடாள வேண்டுமென்றுதான் கூறி இருப்பார்கள். இராமன் அப்பொழுது பொது மக்களுடைய அபிப்ராயத்தைக் கேட்கவில்லை. கைகேயியின் சொற்படி ஆரண்யம் செல்வதற்கு ஆயத்தமாக இருந்தான். தனக்கு வந்த தீமையை இராமன் தீமையாக எடுத்துக் கொள்ளவில்லை.

கைகேயி தன் மகன் பரதனுக்கு நலம் செய்து விட்டதாக எண்ணினாள். ஆனால் பரதன் கைகேயியின் திட்டத்தை அறவே எதிர்த்தான். கைகேயியின் செயல் அடாத செயல் என்று அதற்குச் சம்மதம் தர மறுத்துவிட்டான். இராமன் இல்லாத அயோத்திக்குள் நுழைவதில்லை என்று சொல்லி இராமனை அழைத்து வர ஆரண்யத்துக்குப் புறப்பட்டுவிட்டான். ஆரண்யத்தில் இராமனுக்கும், பரதனுக்கும் இடையில் இராஜ்யத்தைக் குறித்துப் பேச்சு வார்த்தை நடந்தது. "இராஜ்ஜியம் மூத்தவனுக்குத்தான் உரியது. அந்தத் தர்மத்திலிருந்து பெற்றோர்கள் பிசகிவிட்டார்கள். எனவே, நான் இராஜ்ஜியத்தை ஏற்கமாட்டேன்" என்று பரதன் பகர்ந்தான். "பெற்றோர்கள் தங்களுக்குச் சொந்தமானதை எந்த மகனுக்கு வேண்டுமானாலும் தரலாம். அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. அதைக் குறித்துக் கேள்வி கேட்பதற்கு உனக்கு உரிமை இல்லை" என்று இராமன் பகர்ந்தான். "ஐதிகமாக இராஜ்ஜியம் மூத்தவனுக்குத்தான் உரியதாக வந்திருக்கிறது. அந்த முறையிலிருந்து என் தாய் பிசகிப் போய்விட்டாள். எனவே நான் இராஜ்ஜியத்தை ஏற்கமாட்டேன்" என்றான் பரதன். "தாய் தந்தையாரின் சொற்படி நாம் நடந்துகொள்ள வேண்டும். தாய் தந்தையரின் சொல்லை மீறிப்போவதை நான் ஆமோதிக்கமாட்டேன். நீயும் அவர்களை மீறிப்போகலாகாது" என்றான் இராமன். "தாய் தந்தையர்களுடைய சொற்படி நடந்து கொள்ளும் பெருமை உனக்கு இருக்கட்டும். தாய், தந்தை சொற்படி நடவாது அவர்களை மீறிப்போன சிறுமை எனக்கு இருக்கட்டும். நான் உன்னுடைய சிம்மாசனத்தில் ஒருநாளும் உட்காரமாட்டேன்" என்றான் பரதன். இங்கு இராமன் தீமையைப் பொறுக்கின்றான். பரதன் தீமையை எதிர்க்கின்றான். இதில் யார் செய்தது சரி என்னும் கேள்வி எழுகிறது, இது பெரிய பிரச்னையாகிறது. இப்படிப் பல சிக்கல்கள் வருகின்றன. இதற்கு விடை கட்டுரையின் முடிவில் காண்போம்.

இராமன் காடு செல்வதை அயோத்தி மக்கள் அனைவரும் ஆட்சேபிக்கின்றனர். ஆனால் பெற்றோரின் கட்டளைப்படி இராமன் தன் கட

மையைச் செய்ய ஆயத்தமாக இருக்கின்றான். இராமன் வசிஷ்டரிடத்தில் பகர்ந்ததாவது: "கடல் வற்றிப்போய்விடலாம், இமயமலையில் பனியில்லாமல் போய்விடலாம், சூரியன் தன் பிரகாசத்தை இழந்துவிடலாம், தந்தையின் சொல்லை நிறைவேற்றும் பொருட்டுப் பதினான்கு ஆண்டுகள் நான் வனவாசம் செய்வதை யாரும் தடுத்து நிறுத்தமுடியாது." பரதன் பகர்ந்ததாவது: "இராமா, நீ என்ன குற்றம் சாட்டினாலும் சரி, நான் உன் சிம்மாசனத்தில் உட்கார மாட்டேன். பதினான்கு ஆண்டுகள் நான் உன் தொண்டனாக இருந்து பிறகு ஆட்சியை நான் உன்னிடம் ஒப்படைத்துவிடுகின்றேன்." இங்ஙனம் சொல்லிக்கொண்டு கதறி அழுது கொண்டு போகின்றான். பரதனுடைய செயல் இராமனுடைய உள்ளத்தை மிகவும் தொட்டதெனினும் அவனுக்கு அமைந்த கடமையை விட்டுப் பிசகுவதில்லை என்பதில் இராமன் உறுதியாக இருக்கின்றான். கடமை எவ்வளவு கடினமானது என்பதை இங்கு நாம் அறிகின்றோம்.

வனவாச வாழ்க்கையில் இராமனும், லட்சுமணனும் சீதையை இழந்தபின் கிஷ்கிந்தைக்குச் செல்கின்றார்கள். ஆங்கு, சுக்ரீவனோடு இராமன் நட்புக்கொண்டான். சுக்ரீவனுடைய நிலையை அறிந்து அவனுக்கு இராஜ்ஜியத்தைத் தருவதாகவும் சுக்ரீவனோடு உடன்படிக்கை செய்துகொண்டான். மறைந்திருந்து வாலியின் மீது இராமன் அம்பு எய்தான். இராம பாணம் வாலியின்மீது பாய்ந்தது. இராம பாணம் ஒருநாளும் வீண்போகாது. அது தர்மத்தை விட்டு ஒருநாளும் பிசகாது. ஆனால், இங்கு வாலியின் மீது அது ஏவப்பட்ட முறை மறைந்திருந்து செய்த செயலாக இருக்கிறது. தன் நெஞ்சைப் பிளந்த இராமபாணத்தைத் தாங்கிப்பிடித்து வாலி பார்க்கின்றான். அதில் இராம முத்திரை இருக்கிறது. "இவன்தான் சக்கரவர்த்தியின் திருக்குமாரனோ? இவன் தான் அறம் வளர்த்த நம்பியோ? இதுதான் அவனுக்கு அறமோ?" என்று வாலி எண்ணுகின்ற பொழுது அவன்முன் கிருபைசொட்டுகிற பாங்கில் இராமன் நிற்கின்றான். அவர்களுக்கிடையில் சம்பாஷணை நிகழ்கின்றது.

வாலி: இராமா, நான் உன் இராஜ்ஜியத்தில் ஆசைகொண்டு உன்மீது படையெடுத்தேனா? ஏன் இந்த அடாத செயலை நீ செய்தாய்?

இராமன்: உன்போன்ற அக்கிரமசாலிகளைத் தண்டிப்பது என்னுடைய கடமையாகும்.

வாலி: எனக்கும், சுக்ரீவனுக்குமிடையே உள்ள தகராறு எங்கள் குடும்ப விவகாரத்தைப் பொறுத்ததாகும். எங்களுக்கிடையில் நாங்கள் சண்டை போட்டுக்கொள்கின்றோம். அதில் நீ ஏன் தலையிடவேண்டும்?

இராமன்: வீட்டுத் தகராறாக இருக்கலாம்; அல்லது பொதுநலத் தகராறாக இருக்கலாம். யாரொருவன் தீங்கு செய்கின்றானோ அவன் மீது நடவடிக்கை எடுத்தாகவேண்டும். தம்பியைப் பாதுகாப்பது தமயனுடைய கடமையாகும். தம்பியைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அவனிடம் நீ நடந்துகொண்ட போக்கு சரியன்று. தம்பியின் மனைவியை அபகரித்துக் கொண்டு அவனை இராஜ்ஜியத்திலிருந்து விரட்டி ஓட்டிய உன் செயலுக்கு உன்மீது நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

வாலி: நாங்கள் குரங்கினங்கள். எங்கள் சௌகர்யப்படி நாங்கள் நடந்துகொள்ளலாம்.

இராமன்: நீங்கள் குரங்கு இனம் என்றால் விலங்கினம் ஆகிறீர்கள். விலங்குகளை எச்சரிக்கையின்றி நான் வேட்டையாடலாம். ஆனால் நீ வேதங்களைக் கற்றறிந்தவன். நான்கு சமுத்திரங்களிலும் நீராடி நீ சந்தியாவந்தனம் பண்ணுகின்றாய். தத்துவங்களை நன்றாக நீ ஆராய்ந்தவன். உடலமைப்பில் மனிதனாக இல்லாவிட்டாலும் மன அமைப்பில் நீ பெரியவன். பெரியவன், சிறியவன் என்பது மன அமைப்பைப் பொருத்திருக்கிறது. நீ கற்றறிந்த விவேகி. நீ செய்தது சரியன்று.

வாலி: இராமா, நீ உன் மனைவியை இழந்ததோடு விவேகத்தையும் இழந்துவிட்டாய். நீ உன் மனைவியை இழந்த செய்தியை என்னிடம் ஒருவார்த்தைகூடச் சொல்லவில்லை. உன் மனைவியை எடுத்துக்கொண்டு போனது யாரென்று உனக்குத் தெரியுமா?

இராமன்: இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போனான் என்று ஜடாயு மூலம் நான் கேள்விப்பட்டேன்.

வாலி: என்னிடம் நீ ஒருவார்த்தை சொல்லி

யிருந்தால் காரியம் சுலபமாக முடிந்திருக்கும். இராவணனுக்கு நான் செய்தி சொல்லி அனுப்பினல் அவன் பறந்தோடி வந்து சீதையை உன் பாதத்தில் வைத்து விட்டு உன்னை வீழ்ந்து நமஸ்கரித்து உன்னிடம் அவன் மன்னிப்புக் கேட்பான். இதைச் செய்யாது நாடில்லாத தம்பிக்கு நாடு தேடிக்கொடுத்து அவன் மூலம் சீதையைத் தேடிப்பெற முயல்கின்றாய். இச் செயல் நீ மனைவியை இழந்ததோடு, விவேகத்தையும் இழந்துவிட்டாய் என்பதைக் காட்டுகிறது.

இராமன்: ஒருவன் திருட்டுத்தனமாக அன்னியனுடைய மனைவியைத் திருடிக்கொண்டு போகின்றான். மற்றொருவன் பகிரங்கமாக அன்னியனுடைய மனைவியைக் கொள்ளையடிக்கின்றான். இவர்களுள் யாருடைய குற்றம் பெரியது?

வாலி: பகிரங்கமாக அன்னியனுடைய மனைவியைக் கொள்ளையடித்தவனுடைய குற்றம் தான் பெரியது.

இராமன்: நீ, பகிரங்கமாக உன் தம்பியின் மனைவியைப் பறித்துக்கொண்டாய். இராவணன் திருட்டுத்தனமாக அன்னியன் மனைவியைத் தூக்கிக்கொண்டு போயிருக்கின்றான். இராவணனுக்கு மரணதண்டனை என்பதை நான் தீர்மானம் செய்து விட்டேன். இனி, உனக்கு மரணதண்டனையைத் தவிர வேறு எதைத் தருவது?

வாலி: இராமா, நீ எச்சரிக்கையில்லாது என்மீது அம்பைத் தொடுத்திருக்கிறாய். இது அறமாகுமா?

இராமன்: உனக்கு எச்சரிக்கை வந்தது. நீ பெற்ற வரத்தில் உனக்கு இருந்த செருக்கினல் நீ அந்த எச்சரிக்கையை மறந்துவிட்டாய். உனக்கு எச்சரிக்கை வந்ததா, இல்லையா என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார்.

(வாலி சிந்தித்துப் பார்த்தான். மனைவி தாரா எச்சரிக்கை செய்தது அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அவ் எச்சரிக்கையைத் தான் செருக்கினல் ஏற்றுக் கொள்ளாததையும் அறிகின்றான்.)

வாலி: நீ, ஏன் என்னை மறைந்திருந்து அடித்தாய்? நீ அப்படிச் செய்தது நியாயமா?

இராமன்: நீ, இந்திரனிடம் பெற்ற வரம் ஒன்று உண்டு. அதன்படி உன்முன் எதிரியாக வந்து நிற்பவன் பலத்தில் பாதி உனக்கு வந்துவிடும். நான் உன்முன் எதிரியாகவந்து நின்றால் என்பலத்தில் பாதியை உனக்குத்தந்தாகவேண்டும். க்ஷத்திரியன் ஒருவன் எதிரிக்குத் தன் பலத்தில் பாதியைக் கொடுப்பது தர்மமாகாது. எதிரியைத் தோற்கடிப்பதுதான் க்ஷத்திரிய தர்மம். ஆகையால், உன்மீது மறைந்திருந்து அம்புபோட்டு இப்பொழுது நான் உன்னுடைய எதிரியாக அல்லது உன்னை ஆட்கொள்கின்ற முறையில் உன்முன் நிற்கின்றேன்.

வாலி: இராமா, உன்னுடைய மறக்கருணையை நான் என்னென்று சொல்வேன்! கொடூரம் செய்வதுபோன்று நீ என்னை இப்பொழுது ஆட்கொண்டு இருக்கின்றாய். என்னிடம் உள்ள அக்ஞான இருள் இப்பொழுது அகல்கிறது. நான் செய்த தவறை இப்பொழுது உணர்கின்றேன்.

(இப்பொழுது சுக்கிரீவனுக்கு அண்ணன் மீது இரக்கம் வந்துவிட்டது. சுக்கிரீவன் ஓடி வந்து, வாலியைப்பார்த்து "அண்ணா, நான் மடத்தனமாக உன்னை இந்த நிலைக்குக்கொண்டு வந்து விட்டேன். நான் இக்குற்றத்துக்காகப் பட்டினி கிடந்து சாவேன்" என்று கூறுகின்றான்.)

வாலி: இராமனுக்குக் கைங்கரியம் செய்கின்ற பாக்கியம் எனக்கில்லை. அது உனக்குக் கிட்டியிருக்கிறது. என்னுடைய சரீரத்தை விட்டுப் பிராணன் போவதற்கு முன்பு நான் அணிந்திருக்கின்ற தங்கச் சங்கிலியை எடுத்து நீ அணிந்துகொள். என் சரீரம் சவம் ஆவதற்குள் நீ அதை எடுக்காவிட்டால் அதன் சக்தி போய்விடும். நான் சுயநலத்துக்காக அதைப் பயன்படுத்திக் கெட்டுப்போய்விட்டேன். நீ, இராம காரியத்துக்காக அதைப் பயன்படுத்து.

(இராமனைப் பார்த்து) "மறக்கருணை என்றால் இதுவன்றோ மறக்கருணை! என்னைக் கொல்வதுபோன்று வெளியில் காட்டி, சாஸ்வதமான முக்தி என்னும் சாம்ராஜ்ஜியத்தை இராமா! நீ எனக்குக் கொடுத்திருக்கின்றாய். இன்றிருந்து நாளை அழிந்துபோகும் இம்மண்ணுலக ஆட்சியைத் தம்பிக்குக் கொடுத்திருக்கிறாய். கடினமான நடவடிக்கை எடுப்பது போன்று என்னை ஆட்கொண்டுள்ள உன்

கருணைக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்!"

அறத்தாறு எவ்வளவு கஷ்டமானது என்பதை வாலியே இங்கு ஒத்துக்கொள்கின்றான். வாலி வதை போன்று இருந்த செயலை வாலி மோட்சம் என்று அவனே ஒத்துக்கொள்கின்றான். இராமபாணம் ஒருநாளும் வீண் போவதில்லை. வாலி விஷயத்தில் அது பிரச்னைக்கு இடமில்லாது வாலியைத் திருத்தி அமைத்த செய்தியை அவனே ஒத்துக்கொள்கின்றான்.

இலங்கை மீது இராமன் படையெடுத்துப் போகின்றான். இந்தச்செய்தி இராவணனுக்கு எட்டியது. இராவணன் உடனே சபைகூட்டி என்ன செய்யலாம் என்று ஆலோசித்தான். சபையில் கும்பகர்ணன் பகர்ந்ததாவது: "முதலில் மந்திரிசபையைக்கூட்டிஆலோசனைசெய்து இராவணா, நீ செயலில் ஈடுபட்டிருக்கவேண்டும். நீ இதற்கு மாறாகச்செயலில் ஈடுபட்டு அகப்பட்டுக்கொண்ட பின் மந்திராலோசனை செய்கின்றாய். போனது போகட்டும். அந்த அற்ப மானுடர்கள் இருவரையும் கசக்கிப்பிழிந்து ஒழித்துத் தள்ளிவிடுகின்றேன். நீ, சீதையை வைத்து இஷ்டம்போல் அனுபவி." விபீஷணன் முறை வந்தபோது அவன் பகர்ந்ததாவது: "அண்ணா, நீ சீதையை இலங்கைக்குக்கொண்டுவந்த நாள் முதல் ஸ்ரீலங்கையில் ஸ்ரீ தேய்ந்துகொண்டிருக்கிறது. இலங்கையில் கேடுகள் தலையெடுத்து வந்துகொண்டிருக்கின்றன. நமக்குக் கேடு காலம் வந்துவிட்டது. சீதையைத் தூக்கிக்கொண்டு வந்ததன் மூலம் நீ இலங்கைக்கு அழிவைக் கொண்டு வந்திருக்கின்றாய். சீதையைத் திருப்பி இராமனிடம் ஒப்படைத்தால் இராமன் உன்னை மன்னிப்பான். இலங்கையும் அழிவினின்று பாதுகாக்கப்படும். நான் இலங்காபுரி அழிந்துபோவதற்கு ஒரு நாளும் சம்மதிக்கமாட்டேன்.'' "உன்னைக் கொன்று விடுவேன்" என்று இராவணன் விபீஷணனைப் பார்த்துக் கூறினான். "என்னைக் கொல்ல உன்னால் முடியாது" என்று விபீஷணன் கூறினான். விபீஷணன் கூறியதில் பெரிய தத்துவம் அடங்கியிருக்கிறது. விபீஷணன் சத்வ குணத்தின் சொரூபம் ஆகின்றான். இராவணன் இரஜோகுணத்தின் சொரூபம் ஆகின்றான். கும்பகர்ணன் தமோகுணத்தின் சொரூபம் ஆகின்றான். விபீஷணன் தன்னை இராவணன் கொல்ல முடியாது என்று கூறியதில் உள்ள தத்துவம் இரஜோகுணம் சத்வ குணத்தைக் கொல்ல முடியாது என்பதாகும். விபீஷணன் மேலும் இராவணனிடம் பகர்ந்ததாவது: "நீ என்னைக் கொல்ல முடியாது. உன்னுடைய நலத்திற்காகவும், நாட்டின் நலத்துக்காகவும் நான் உனக்கு எச்சரிக்கை செய்கின்றேன். நான் சொன்னபடி நீ நடந்துகொண்டால் இலங்காபுரி பாதுகாக்கப்படும். நீ அப்படி நடந்துகொள்ளாவிடில் இலங்காபுரியின் நலத்தை முன்னிட்டு நான் இராமனுக்குத் துணையாக இருந்து உன்னை எதிர்த்துப் போர் புரிந்து அழிக்க முயல்வேன். சரீரத்தில் தோன்றிய நோய் உடன் பிறந்தது என்று அதைக் காப்பாற்றக் கூடாது. நம் சரீரத்திலுள்ள நோய் நமக்கு எதிரியாகும். நீ இலங்காபுரிக்கு நோயாக வந்திருக்கின்றாய். எனவே உன் போக்கில் போக நான் இடம் தரமாட்டேன். இராமனுடன் இருந்து உன்னை ஒழிப்பதற்கு முயல்வேன்.'' விபீஷணன் இங்ஙனம் பகர்ந்ததில் பெரிய வேதாந்த தத்துவம் இருக்கிறது. சத்வகுணம் பரமனுடைய அருளைச் சார்ந்திருந்து ஜீவாத்மன் குணாதீதத்திற்குப் போகத் துணை புரிகிறது.

இராமாயணத்தில் மூன்று முக்கியமான தலைமைப் பட்டணங்கள் வருகின்றன. அயோத்தி, கிஷ்கிந்தை, இலங்கை என்பன அம்மூன்று பட்டணங்கள் ஆகும். அம்மூன்று இடங்களிலும் இராமன் தம்பிகளுக்கே இராஜ்ஜியங்களை உரியதாக்குகின்றான். அயோத்தியில் தனக்குரிய இராஜ்ஜியத்தைத் தன் தம்பி பரதனுக்கு உரியதாக்கினான். கிஷ்கிந்தையில் வாலிக்குரிய இராஜ்ஜியத்தை அவன் தம்பி சுக்கிரீவனுக்கு உரியதாக்கினான். இலங்கையில் இராவணனிடமிருந்து இராஜ்ஜியத்தை எடுத்து அவன் தம்பி விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து விபீஷணனை இலங்காபுரிக்கு அரசனாக்கினான்.

இராமாயணத்தோடு இடையிடையே மகாபாரதத்தையும் சீர் தூக்குவது அவசியமாகிறது. இராமாயணத்தில் விபீஷணன் ஒரு அற்புதமான பாத்திரமாக இருப்பது போன்று மகாபாரதத்தில் பீஷ்மர் ஒரு அற்புதமான பாத்

திரமாக இருக்கின்றார். பீஷ்மருடைய பேரப் பிள்ளைகளான பாண்டவர்களும், துரியோதன தியர்களும் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டு இருந்தார்கள். பீஷ்மரிடம் துரியோதனன் உதவி கேட்டான். பீஷ்மரைத் தன்னுடைய சேனைக் குத் தலைவராக இருக்க வேண்டுமென்று கேட் டுக்கொண்டான். "இயல்வது கரவேல்" என்ற கோட்பாட்டுக்கு ஒப்பத் துரியோதனன் கேட்ட தற்குப் பீஷ்மர் ஒத்துக்கொண்டார். ஆனால், துரியோதனனுக்கு உண்மையை உள்ளபடி எடுத்து விளக்கினார். "துரியோதன, நீ என்னிட முள்ள ஆற்றலைக்கேட்கின்றாய். என்னிடமுள்ள ஆற்றலைக் கரவாது உனக்குக் கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், நீ வெற்றி அடையமாட்டாய். அறத்தாற்றுக்கும்,உனக்கும் வெகுதூரம். நீ இம்மியளவும் தர்மத்தைக் கையாளவில்லை. நீ அதர்மமே வடிவெடுத்தவ னாக இருக்கின்றாய். கண்ணனுடைய அருளுக்கு நீ பாத்திரமாகவில்லை. பாண்டவர்கள் தர்மத் தைப் பின்பற்றுகின்றார்கள். நீயோ அதர்மமே வடிவெடுத்தவனாக இருக்கின்றாய். இறைவனு டைய அருளும், தர்மமும் எங்கு இல்லையோ அங்கு வெற்றி இல்லை. தர்மத்தைக் கடைப் பிடிக்காதவனும், இறைவன் அருளுக்குப் பாத் திரமாகாதவனும் ஆரம்பத்தில் வெற்றி அடை பவன் போல் விளங்கினாலும் இறுதியில் அழிந்துபட்டுப்போவான்." பீஷ்மரும், துரியோ தனனும் சபதம் செய்கின்ற பாங்கில் பேசிக் கொண்டார்கள். "வஞ்சகமில்லாது பீஷ்ம ராகிய நீங்கள் உங்கள் ஆற்றலை எல்லாம் பயன்படுத்தி எனக்காகப் போர் புரியுங்கள். நான் வெற்றியடைந்து காட்டுகிறேன்." இங் ஙனம் துரியோதனன் பகர்ந்தான். "உனக்காக என் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்திப் போர் புரிகின்றேன். உயிரையும் உனக்காக நான் கொடுக்கின்றேன். ஆனால், துரியோதன நீ வெற்றியடைய மாட்டாய்'' இங்ஙனம் பீஷ்மர் பகர்ந்தார்.

இங்குப் பீஷ்மரையும், விபீஷணனையும் சீர்தூக்கினால் இருவர்களின் செயல்களுக் கிடையில் பெரிய முரண்பாடு இருப்பது போன்று தெரிகிறது. பீஷ்மர் கேட்டுக்கு உதவி புரிந்தார். விபீஷணன் கேட்டை எதிர்த்து நின்றான். பீஷ்மர் செய்தது சரி என் றால் விபீஷணன் செய்தது தவறாகின்றது. பீஷ்மர் கேட்டுக்கு ஆதரவு தர விபீஷணன் அதை எதிர்த்து நிற்கின்றான். ஒருவர் தீமையை எதிர்த்து நிற்க, மற்றொருவர் தீமைக்கு ஆதரவு தரும் பாங்கில் உயிரையும் கொடுக்க ஆயத்த மாய் இருக்கின்றார். "அறத்தாறு இதுவென வேண்டா, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந் தான் இடை" என்பதற்கேற்ப அறத்தாற்றை இப்பொழுது நாம் எப்படித் தீர்மானம் பண்ண முடியும்?

இராமாயணத்தில் இராமனைக் காட்டுக்குப் போகவேண்டுமென்று கைகேயி கூறியதும் இராமன் மகிழ்ச்சியோடு காட்டுக்குப்போனான். இராமன் இளமை முதல் அரண்மனையில் வாழ்ந் தவன். திடீரென்று அவனுக்கு ஆரண்ய வாழ்க்கை வந்து அமைந்தது. ராமன் அரண் மனை வாழ்க்கையையும், ஆரண்ய வாழ்க்கை யையும் சமமாக எடுத்துக்கொண்டான். ஆனால் பாண்டவர்கள் சிறுவயதில் பெற்றோர் களுடன் வனத்தில் வாழ்ந்து வந்தார்கள். பாண்டவர்களை வனத்தில் விட்டுவிட்டுப் பெற் றோர்கள் காலமாகி விட்டார்கள். அவர்கள் ரிஷிகளால் காப்பாற்றப்பட்டு வயது வந்த தும் அஸ்தினபுரத்தில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்கள். முறைப்படி யுதிஷ்டிர னுக்கு யுவராஜா பட்டாபிஷேகம் செய்யப்பட் டது. பண்பிலும், கீர்த்தியிலும் அவன் அதி வேகம் மேலே வந்துகொண்டிருந்தான். துரி யோதனன் அதைப் பார்த்துத் தாங்கமுடியாத பொறாமைப்பட்டான். பாண்டவர்களை எப் படியாவது ஒழித்துவிட வேண்டுமென்று அவன் தீர்மானம் செய்தான். துரியோதனன் தன் தந்தையிடம் இரகசியமாகப் பகர்ந்ததாவது: "அப்பா, உங்களுக்குக் கண் இல்லை. ஆகை யால், நீங்கள் சிம்மாசனத்தில் உட்கார முடிய வில்லை. நான் அனாதையாகப் போய்விட்டேன். எனக்குரிய ராஜ்யத்தை உங்கள் தம்பி மகனுக் குக் கொடுத்துவிட்டீர்கள். அவன், கீர்த்தியும், செல்வாக்கும் பெற்று வருகின்றான். நான் அடிமையாக இருப்பதா?" அதற்குத் திருதராஷ் டிரன் அளித்த பதிலாவது: "மகனே, அது என்னுடைய உள்ளத்தையும் உறுத்திக் கொண்டு இருக்கிறது. அதற்கு ஏதாவது வழி செய்தாகவேண்டும். (தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-144

836. वीर माता வீர மாதா—வீரர்களுக்கு அன்னையாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னையின் வழிபாடு தக்ஷிணச்சாரம், வாமாச்சாரம் என இரண்டு பாங்குகளில் அமைந்திருக்கிறது. வாமாச்சார வழிபாட்டில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. அவைகள் முறையே பசுபாவம், வீரபாவம், திவ்யபாவம் எனப் பெயர் பெறுகின்றன. வீரபாவத்தை முறையே செய்து சாதிக்கின்றவன் நல்ல வீரனாகின்றான். எதற்கும் அஞ்சான். உலகமே பிரளயத்தில் தவிடுபொடியானாலும் அவன் மனம் தளரான். ஆத்ம சாதகனுடைய உறுதிப்பாட்டை அலசி ஆராய்தல் பொருட்டு அன்னை பராசக்தி தடைகளையும் விக்னங்களையும் வேண்டியவாறு அமைக்கிறாள். பயங்கர வடிவெடுத்து ஆத்ம சாதகன் குழம்பிப் போகும்படிச் செய்கிறாள். ஆனால் இந்த இடைஞ்சல்களுக்குத் தீவிரமான சாதகன் ஒருபொழுதும் அஞ்சுவதுமில்லை, அசைந்து போவதுமில்லை. தான் கொண்டுள்ள தீர்மானத்தின்படியே தீவிரமாகச் சாதனத்தில் ஈடுபடுகின்றான். அத்தகைய திண்ணிய வழிபாட்டின் வாயிலாக வழிபடுபவன் நல்லதொரு வீரனாகின்றான். வீரியமே வடிவெடுத்தவனாக அவன் விளங்குகின்றான். எக்காரணத்தை முன்னிட்டும் தான் மேற்கொண்டுள்ள இலட்சியத்தினின்று அவன் பிசகுவதில்லை. வஜ்ராயுதத்துக்கு ஒப்பாக அவன் நடந்து கொள்ளுகின்றான். அத்தகைய அதிதீவிர சாதகனுக்கு அன்னையாகிய அம்பிகை தாயாக அமைந்திருப்பதால் அவள் வீர மாதா எனப் போற்றப் பெறுகிறாள்.

தர்ம யுத்தம் ஒன்று உருவெடுக்குங்கால் மகிழ்வுடனும், ஊக்கத்துடனும் அந்தத் தர்ம யுத்தத்தில் பங்கு பூணுபவன் வீரனாகிறான். தர்மத்தைப் பாதுகாப்பதிலேயே அவன் கண்ணும் கருத்துமாயிருப்பதனால் அவனுடைய வீரியம் போர்க்களத்தில் பன்மடங்கு அதிகரிக்கிறது. அந்த வீரனுக்கு உயிர் வாழ்ந்திருப்பதும், போர் புரிந்து மடிந்து போவதும் ஒன்றேயாம். போர்க்களத்தில் வெட்டுண்டு தன்னுடைய உடல் கீழே வீழ்வது அவனுடைய கருத்துக்கு வருவதில்லை. அறம் காத்தல் ஒன்றிலேயே அவனுடைய சித்தவிருத்தி முழுதும் ஈடுபட்டிருக்கிறது. அத்தகைய வீராவேசத்துடன் போர்க்களத்தில் மடிகிற ஒருவன் வீர சொர்க்கத்தைப் பெறுகிறான். அடுத்த பிறவியில் இன்னும் பன்மடங்கு அதிகம் வீரியம் வாய்க்கப் பெற்றவனாகப் பிறப்பெடுக்கிறான். அத்தகைய வீரனுக்கு அன்னை பராசக்தி தாயாய் இருப்பதால் அவள் வீரமாதா எனப் போற்றப்பெறுகிறாள்.

837. वियत्प्रसुवे வியத்ப்ரஸூவே — ஆகாசத்தை உண்டுபண்ணுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஆகாசத் தத்துவத்தைச் சரியாக அறிந்து கொண்டால் அது பர தத்துவத்தை அறிந்து கொண்டதற்கு நிகராகின்றது. ஐந்து மஹா பூதங்களுள் ஆகாசம் முதல் பூதமாகிறது. அது பரமாத்மசொரூபத்திலிருந்து தோன்றிவந்திருப்பதால் ஆத்ம சொரூபத்தன் பாங்குகள் பல அதனிடத்து அமைந்திருக்கின்றன. பரமாத்ம தத்துவம் எங்கும் நிறைபொருளாக இலங்குகின்றது. அது இடத்தில் கட்டுப்படாதது. அதே விதத்தில் ஆகாசமும் எங்கும் நிறைபொருளாக அமைந்திருக்கிறது. இடம் ஆகாசத்தில் இடம் பெறுகிறது; அது வரம்பு கடந்ததால் எந்த இடமும் அதைத் தன்னுள் அடைத்துக்கொள்ள முடியாது. இந்த ஆகாசத்தினின்று வாயு, அக்னி, அப்பு, பிருதிவி ஆகிய ஏனைய நான்கு பூதங்களும் வந்துள்ளன. காற்றைச் சுவாசிப்பதன் மூலம் பொருள்படுத்துகிறோம். அக்னியை ஸ்பரிசத்தால் உணருகிறோம். அப்புவைச் சுவைத்து அறிகிறோம்.

நிலத்தை அதில் இடம்பெற்று அறிகிறோம். ஆனால் ஆகாசத்தையோ எந்த இந்திரியத்தைக் கொண்டும் பொருள்படுத்த முடியாது. அந்த அளவில் அது ஆத்மாவுக்கு ஒப்பானது. இனி, அம்பிகைக்கும் அவளிடத்திருந்து தோன்றி வந்துள்ள ஆகாசத்துக்குமிடையில் ஒரு வித்தியாசம் உண்டு. அவள் சித்ஆகாசம். மற்றது ஜட ஆகாசம். ஜடஆகாசத்தைச் சரியாக அறிந்துகொள்ளவல்ல ஆத்மசாதகன் அடுத்த

படியாகச் சிதாகாசத்தை அறிந்துகொள்ள வல்லவனுகின்ருன். இக்காரணத்தை முன்னிட்டே அம்பிகை வியத்ப்ரஸூவே என்று விளக்கப்பெறுகிருள்.

838. ஸுகுந்தா முகுந்தா — முக்தியைக் கொடுப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பந்தபாசத்தை உண்டுபண்ணுகிற அதே அம்பிகை ஜீவாத்மன் பரிபாகம் அடைந்து வருகிறபொழுது முக்தியை நல்குகின்ருள். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். மரம் ஒன்றில் தக்க பருவம் வருகிற பொழுது பிஞ்சுகள் வடிவெடுக்கின்றன. அப் பிஞ்சுகளை மரமானது காம்புகளின் வாயிலாகப் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. காம்புகளின் வாயிலாக அப்பிஞ்சுகளைப் போஷித்தும் வருகிறது. பிஞ்சுகள் முதிர்ந்து காய்களாகிப் பக்குவமாகின்றபொழுது அவைகளைப் பற்றிப் பிடிக்கும் காம்புகள் தளர்வு உறுகின்றன. இதே பாங்கில் ஜீவாத்மாக்கள் ஆத்மபரிபாகம் அடையும் வரையில் 'ராகஸ்வரூப பாசாட்யா' வாக அன்னை பராசக்தியிருந்துகொண்டு உலக வாழ்க்கை முறையில் ஜீவாத்மாக்களைப் பேணி வருகிருள். உலக வாழ்க்கையில் வைத்துள்ள மயக்கம் தெளிவடைகிற பொழுது ஜீவாத்மாக்களைக் கட்டிப்பிடிக்கும் தளை தளர்வுறுகிறது. முக்திக்கு அச்சீவர்கள் தகுதியுடையவர்கள் ஆகிருர்கள். அத்தருணத்தில் அம்பிகை முகுந்தாவாகவிருந்துகொண்டு அச்சீவர்களைப் பந்த பாசத்தினின்று விடுவித்து முக்தியாம் பெருநிலையில் கொண்டு சேர்க்கின்ருள்.

முகுந்தா என்னும் சொல் மஹாவிஷ்ணுவின் சகோதரி எனவும் பொருள்படுகிறது. பரமாத்மா மும்மூர்த்திகளாகத் தன்னைப் பிரித்து வைத்துக்கொள்ளுகிற பொழுது பரமாத்மாவுக்கு அபின்னமாயிருக்கும் பராசக்தியும் தன்னை மூன்று சொருபங்களாகப் பிரித்துக் கொள்கிருள். முகுந்தா என்பது இந்த மூன்று சொருபங்களில் ஒன்ரும். ஏனைய இரண்டு சொருபங்கள் உமா தேவியாகவும், சரஸ்வதி தேவியாகவும் அமைந்திருக்கிருர்கள். துர்க்கா—லக்ஷ்மீ—சரஸ்வதீ மயமாக அன்னை பராசக்தி அமைந்திருக்கிருள் என்பது ஐதிகம்.

839. ஸுக்தி நிலயா முக்தி நிலயா— முக்திக்கு இருப்பிடமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

முக்திக்குப் படித்தரங்கள் பல உள. அவைகள் ஐந்து படித்தரங்களாக வடிவெடுக்கின்றன. அவைகள் முறையே சாலோக்ய, சாமீப்ய, சாரூப்ய, சாரூஜ்ய, கைவல்ய முக்திகள் எனப்படுகின்றன. தூர தேசத்திலிருக்கும் பிரசித்தி பெற்றுள்ள பிரமுகன் ஒருவனைக் காண விரும்பினல், காண விரும்புகிறவன் முதன் முதல் அந்தப்பிரமுகன் வசிக்கின்ற நாட்டுக்குச் செல்ல வேண்டும். அச் செயல் சாலோக்யம் எனச் சொல்லப்படுகிறது. அப்பிரமுகன் வசித்து வருகிற உலகு அல்லது பிரதேசம் என அது பொருள் படுகிறது. அடுத்தபடியாக அப்பிரமுகன் வாழ்ந்து வருகின்ற இடத்தை அணுகவேண்டும். அதாவது அவனுக்குச் சமீபத்தில் போகவேண்டும். சமீபத்தில் போகும் செயல் சாமீப்யம் எனப் பகரப் பெறுகிறது. இந்த முறையில் ஜீவாத்மன் பரமாத்மனுக்குச் சமீபத்தில் வந்து அந்தப் பரமாத்மனையே எண்ணிக்கொண்டிருப்பானுகில் அமைப்பில் அல்லது வடிவத்தில் அந்தப் பரமாத்மன் மயமாக ஜீவாத்மன் திருந்தியமைகின்ருன். வைகுண்டத்தில் வசித்து வருகின்ற வைஷ்ணவர்கள் அனைவரும் விஷ்ணுவின் வடிவத்தை எடுத்திருக்கிருர்கள் என்பது ஐதிகம். இந்நிலை சாரூப்யம் எனச் சொல்லப்படுகிறது. நாடப்படுகிற பொருளின் உருவத்தில் நாடுபவன் திருந்தியமைகின்ருன். ஆதலால் அது சாரூப்யம் எனச் சொல்லப்படுகிறது. சமுத்திரத்தை எட்டுகிற நதி தன் வடிவத்தை இழந்து சமுத்திரமயமாக மாறுகிறது. அங்ஙனம் பரமாத்மனில் ஒன்றுபடுகிற ஜீவாத்மன் தன்னுடைய வியக்தியை இழந்து பரமாத்மன் மயம் ஆகின்ருன். அந்நிலை சாயுஜ்யம் எனச் சொல்லப்படுகிறது. இறுதியாகச் சென்று அடைதல் என்னும் கோட்பாடும் அடிபட்டுப் போகிறது. பொருள் யாண்டும் தன்மயமாயிருக்கிறது. அப்படித் தன்மயமாயிருக்கும் நிலைக்குக் கைவல்ய முக்தி நிலை என்று பெயர். எல்லா நிலைகளிலும் அன்னை பராசக்தியே ஆதாரமாகவும், ஆதேயமாகவும் இருப்பதால் அவள் முக்தி நிலயா எனப் போற்றப் பெறுகிருள்.

840. मूलविग्रहरूपिणी மூலவிக்ரஹ ரூபிணீ - அனைத்துக்கும் ஆதிமூலமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

நாம் வாழ்ந்து வரும் நிலவுலகில் நம்முடைய வாழ்க்கைக்கு இன்றியமையாத நீர் ஆனது வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர் பெற்று விளங்குகிறது. ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர், குட்டை நீர், குழாய் நீர், குடத்து நீர், பாண்ட நீர் இப்படியெல்லாம் பெயர் பெறுகிறது. இத்தனை விதமான பெயர் பெற்றுள்ள நீர் வகைகளெல்லாம் மழைநீரின் வெவ்வேறு தோற்றங்களாம். பின்பு மழை நீரோ கடலினின்று ஆவியாகக் கிளம்பி வானத்திலே வெவ்வேறு விதமான மேகங்களாகச் சஞ்சரித்துப் பிறகு மழையாகப் பொழிகிறது. இத்தனை விதமான நீர் வகைகளுக்கு மூலவிக்ரஹமாயிருப்பது கடல். அதே விதத்தில் அன்னை பராசக்தி பலப்பல வடிவங்களில் விளங்கிக்கொண்டிருக்கிறாள். அவள் பாலா என்றும் பகளா என்றும், ச்யாமா என்றும், சாம்பவி என்றும், துர்க்கை என்றும், ராஜராஜேஸ்வரி என்றும் இப்படியெல்லாம் அழைக்கப்பெறுகிறாள். இத்தனை விதமான வடிவங்களை அவள் விளையாட்டாக எடுத்துக்கொள்ளுவதால் அவள் லலிதாம்பிகை எனவும் இயம்பப் பெறுகிறாள். இவை யாவும் ஒரே மூர்த்தியின் பலப்பல சொரூபங்கள் என்னும் கோட்பாட்டை மூலவிக்ரஹரூபிணீ என்னும் நாமம் விளக்கிக் காட்டுகிறது.

841. भावज्ञा பாவக்ஞா — பாவனைகளை அறிபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மனதில் உண்டாகும் விதவிதமான எண்ணங்களும், உணர்வுகளும், முடிவுகளும் வெவ்வேறு விதமான பாவங்கள் அல்லது மனநிலைகள் எனப் பொருள்படுகின்றன.

ஜீவகோடிகள் உயிர்வாழ்ந்திருப்பது ஒருவித பாவம், அதன் பாவனையாகிறது. நான் இருக்கிறேன் என்னும் எண்ணம் வெவ்வேறு தரங்களில் ஜீவர்களிடத்து இருந்து வருகிறது. அத்தகைய இருப்பு பாவம் எனப்பகரப் பெறுகிறது. ஒவ்வொரு ஜீவனும் தன்னுடைய இருப்பைப் புறச்செயல்கள் மயமாக விளக்குகிறது. மனிதன் பேசுகிறான், நாய் குரைக்கிறது, கழுதை கத்துகிறது, குதிரை கனைக்கிறது, யானை பிளிறுகிறது, மயில் அகவுகிறது, குயில் கூவுகிறது, வண்டு ரீங்காரமிடுகிறது. இங்ஙனம் ஒவ்வொரு ஜீவனும் செய்கின்ற புறச்செயல்கள் அந்தந்த ஜீவனுடைய பாவங்கள் அல்லது பாவனைகள் ஆகின்றன. அடுத்தபடி ஒவ்வொரு ஜீவனுக்கும் தனித்தனி இயல்பு இருக்கிறது. மனிதன் திட்டம் போடுகிறான். மீன் நீந்துகிறது. பறவை பறக்கிறது. புழு பூமியைக் குடைகிறது. கரையான் உலர்ந்த மரங்களை அரிக்கிறது. தேள் கொட்டுகிறது. சர்ப்பம் தீண்டுகிறது. புலி பாய்ந்து பிடிக்கிறது. யானை துதிக்கையைத் தூக்கி மரக் கிளைகளை ஒடிக்கிறது. இங்ஙனம் அந்தந்த ஜீவனுக்குரிய இயல்பு அதனதன் பாவம் எனப்படுகிறது. பாவம் என்று சொல்லுவதை அதனதன் ஸ்வதர்மம் எனக் கருதுவதும் பொருந்தும். மாறியமைதல் என்பது ஜீவர்களின் செயல். மானுட சிசு ஒன்று பல்லில்லாது பிறந்து பிறகு பல்லைப் பெறுகிறது. தவளை நீரில் வாழ்வதாக வாழ்வைத் துவக்கிப் பிறகு நிலத்திலும் வாழ வல்லதாகிறது. வண்ணத்துப்பூச்சி புழுவாக வாழ்வைத் துவக்கி அழகிய பட்டுப்பூச்சியாகத் திருந்தியமைகிறது. நாய்க்குட்டி கண்ணில்லாது பிறந்து பிறகு கண்ணைப் பெறுகிறது. மயில் குஞ்சு அழகு அற்றதாக வாழ்வைத் துவக்கி அழகு உற்றதாக மாறியமைகிறது. இங்ஙனம் மாறுபடுகிற செயல்கள் அனைத்தும் அந்தந்த ஜீவனுடைய பாவம் அல்லது பாவனையாகிறது.

இதற்கெல்லாம் மேலாக ஆத்மசாதகன் ஒருவன் தான் படைத்துள்ள உலக வியவகாரங்களையெல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டுப் பராசக்தியின் வழிபாட்டிலேயே தன் கருத்தைச் செலுத்தி வருகிறான். அதன் வேகத்துக்கும் ஆழத்துக்கும் ஏற்ப அவனுடைய பாவனை தெய்விகபாவனையாகத் திருந்தியமைகிறது. அதைக் குறித்து அன்னை பராசக்தி அகமகிழ்வு எய்துகிறாள். அவனுடைய பாவனையை மேலும் அவள் ஆழ்ந்ததாக்கி அனுக்கிரஹம் பண்ணுகிறாள்.

இத்தனைவிதமான உயிர்வகைகளின் இத்தனைவிதமான பாவனைகளை அன்னை பராசக்தி அறிந்துகொண்டிருப்பதால் அவள் பாவக்ஞா எனப் பகரப்பெறுகிறாள்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (250) ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மைஇகழ்வார்ப் பொறுத் தல் தலை'' என்று பொறையுடைமையில் சொன்ன வள்ளுவர்பிரான் ''தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு'' என்று அடக்கமுடைமையில் சொல்லுவது முதல் குறளுக்குச் சற்று விலகி நிற்பதாகத் தோன்றுவதால் சாத கன் எங்ஙனம் கர்மம் ஆற்றுவது?

முரண்படுவன போன்று தென்படும் இவ்வி ரண்டு குறள்களின் கோட்பாடுகளுக்கு நிகராக ஔவையார் இயற்றியுள்ள ஆத்திசூடியில் 'ஏற்பது இகழ்ச்சி' 'ஐயம் இட்டு உண்' என்று இரண்டு கோட்பாடுகள் இருக்கின்றன. ஐயம் ஏற்றுக்கொள்ளுவது இகழ்ச்சிக்குரிய செய லென்று கருதி அதை ஏலாது எல்லாரும் விட்டுவிட்டால் பிறகு ஐயம் இடுவது எப்படி? ஆக இவ்விரண்டுக்குமிடையில் முரண்பாடு இருக்கிறதல்லவா என்னும் கேள்வியைப் பலர் அடிக்கடி கிளப்பிக்கொண்டே இருக்கின்றனர். ஆனால் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இவ் இரண்டு மேலாம் உரைகளில் உள்ள உட் பொருள் நன்கு விளங்கும். மானுடன் ஒருவன் எப்பொழுதும் கொடையாளியாக இருந்து பழகவேண்டும். பிறரிடமிருந்து யாசகம் ஏற்று உயிர் வாழும் மனப்பான்மை அவனுக்கு வர லாகாது என்பதுவே இவைகளின் உட்பொரு ளாம். 'ஐயம் இட்டு உண்' என்று ஆன்றோர் கள் சொல்லியிருப்பதனாலேயே உலகத்தவர் கள் எல்லாரும் கொடையாளிகள் ஆய்விட மாட்டார்கள். கொடை வள்ளலாக இருப்ப வர்கள் உலகில் மிகச் சிலர். உலோபிகளாக இருப்பவர்கள் உலகில் பலபேர். அடுத்தபடி யாக ஏற்பது இகழ்ச்சி என்னும் ஆணைக்கு உட்பட்டுப் பிறரிடமிருந்து ஐயம் ஏலாது தங்க ளைத் தாங்களே சார்ந்திருந்து தாங்களே நேர்மையாக உழைத்துப் பொருள் சம்பாதித்து வாழ்பவர்கள் உலகில் மிகச் சிலர். சமுதா யத்தில் எப்பொழுதுமே வறியர்களாகவிருந்து கொண்டு ஐயம் ஏற்று உண்ணும் கூட்டம் ஒன்று இருந்துவரும். திருடிப் பிழைக்கும் கூட்டம் ஒன்று இருந்து வரும். பிறரை ஏமாற்றிப் பொருள் திரட்டும் கூட்டம் ஒன்று இருந்துவரும். சிறிய பணிவிடைக்கு ஏராள மாகப் பிரதிபலன் கேட்கும் கூட்டமும் உலகத் தில் இருந்து வருகிறது. இத்தகைய உலகில் நேர்மையாக வாழ விரும்புகிற மனிதன் பிறரிட மிருந்து யாசகம் எதையும் தேடலாகாது. தன் தரத்துக்கேற்றவாறு தன்னை நாடுபவர்க்குப் பொருளை வழங்கவேண்டும் என்பது கோட் பாடு. இதைச் சரியாக அறிந்து கொள்பவர் களுக்கு இக்கூற்றுக்களில் முரண்பாடு இல்லை.

இதே விதத்தில் பொறுமை பழகுகிறவர்கள் தனக்குத் தீங்கு செய்கிறவர்களை நொந்து கொள்ளாது அன்னவர்களுக்கு நலன் புரிவதி லேயே கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும். ஆனால் உலகத்தில் இருக்கிறவர்கள் எல்லாரும் அத்தகைய மனம் படைத்தவர்கள் அல்லர். சிலர்க்குச் செய்த தீங்கை அவர்கள் ஒருபொழு தும் மறக்க முடியாது. அந்தத் தீங்கை எண்ணி எண்ணி வருந்திக்கொண்டே இருப்பார்கள் என்னும் உலகத்தவர்களுடைய இயல்பை

> தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
> நாவினால் சுட்ட வடு

என்ற குறள் மூலம் வெளிப்படுத்துகின்றார். இதற்குச் சான்றாகப் பாண்டவர்களை எடுத்துக் கொள்ளலாம். துரியோதனன் பாண்டவர்களைச் சபையில் வைத்து அவமானப் படுத்தியதைத் தர்மராஜாவாகிய யுதிஷ்டிரன் அவமானமாக எடுத்துக்கொள்ளவில்லை, துரியோதனனை நொந்துகொள்ளவுமில்லை.

> அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

ஆனால் அவர் தம்பி பீமன் துரியோதனன் செய்த தீங்கைச் சதா ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்து தக்கசந்தர்ப்பம் கிடைத்தபோது துரியோதனனைத் தொடையில் அடித்துக் கொன்று பழிக்குப் பழி வாங்கினான்.

உலகத்தில் பலப்பல இயல்பு படைத்தவர் கள் இருக்கிறார்கள். அவர்களுக்கிடையில் சாஸ்திரங்கள் புகட்டுகின்ற கோட்பாடுகளுள் யாருக்கு எது பொருந்தும் என்பதைக் காணு தல் கற்றவர்களுடைய கடமையாம்.

கேள்வி : (251) தங்கள் பங்குனி மாத தர்மசக்கரத்தில் நோயால் கஷ்டப்படும் உயிர்களை வேதனையின்றி மரணம் சம்ப விக்கச் செய்யலாம். அது ஜீவகாருண்ய மாகும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். யார் அப்படி மரணம் ஏற்படுத்துவது? அவதிப் படுவோரை வேதனையின்றி மேலுலகம் அனுப்பும்முறை நம் தர்மத்திற்கு அடுக் காது. எந்த மருத்துவனும் இதைச் செய்யமாட்டான், எப்படிச் சட்டமானது குற்றம் செய்தோரைத் தண்டிப்பதற்கு மட்டும் அல்லாது அதற்கு மேல் நிரபராதி களைக் காப்பதற்கும் உள்ளதோ, அதே போன்று மருத்துவரும் நோயாளிகளைக் காப்பதற்கு மட்டுமல்ல. நோயுற்றோரைக் கொன்றுவிடவும் கூடாது. எவன் ஒருவ னுக்கு ஆக்கும் வல்லமை உண்டோ அவனே அழிக்கவும் செய்யலாம். அவன் ஆண்டவன் ஒருவனே. உடல் நோயால் துன்பப்படுபவரை வேதனையின்றி உயிர் எடுத்தல் உகந்த உபாயம் என்றால் logical conclusion முடிவில் உள்ளத்தில் நயவுற்றோரையும், அங்கஹீனர், முதி யோர், பித்தர் ஆகியவரையும் exterminate பண்ணுவதும் சரியாகிவிடும்.

வாழ்வு, சாவு ஆகிய இரண்டு பகுதிகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. பிரபஞ்ச அமைப்பில் மரணமிலாப் பெருவாழ்வு இல்லை. அது பிரபஞ்சத்திற்கு அப்பாற் பட்டது. அத்தகைய முக்தியை அறிஞர் நாடு கின்றனர். ஆனால் உடல் எடுத்தவர்களுள் பெரும்பான்மையோர் உடல் வாழ்க்கையி லேயே பற்று வைத்திருக்கின்றனர். அதன் பொருட்டுக் கணக்கற்ற பிறவிகளை அவர்கள் எடுத்து வருகின்றனர். உடல் எடுத்திருப்ப வர்கள் ஒரு நாள் உடலை விட்டுப் பிரிந்தாக வேண்டும். ஆகவே ஜனனமும், மரணமும் இன்றியமையாதவைகளாம். வாழ்வையும் மாய் வையும் முறையாக ஆராய்ச்சி பண்ணுதல் அத்யாத்ம வித்தையாகும். வாழ்வாங்கு வாழத் தெரியாதவர்கள் செத்தவர்களுக்கு நிகராகின் றார்கள். வாழ்வாங்கு வாழ விரும்புகிறவர்கள் எப்படி எப்படி எல்லாம் வாழலாம் என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். அதற்குமேல் அன்னவர்கள் வாழ்வு சரியாக அமையாவிட் டால் என்னென்ன பாங்குகளில் அதை விரை வில் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ப தையும் அறிந்து கொள்ளவேண்டும். முடிவுக் குக் கொண்டு வருவதைக் குறித்து என்றைக் கும் அபிப்பிராய வித்தியாசங்கள் ஏராளமாக இருந்து வருகின்றன. நவீன யுத்த முறை பழங்கால யுத்த முறை போன்றது அன்று. அக்காலத்தில் போர் புரிந்தவர்களே எதிரி களைக் கொன்று வந்தனர். இன்றைக்கோ எதிரி களின் சமுதாயத்திலிருக்கும் ஆடவர் மகளிர் குழந்தைகள் ஆகிய அனைவரையும் அணுசக்தி யின் துணைகொண்டு துடைத்துத் தள்ளுகின் றனர். இது ஆமோதிக்கத்தகாதது எனினும் இத்தகைய போராட்டம் தடுக்க முடியாத பாங் கில் உலகில் இருந்து வருகிறது. இனி ஜீவ காருண்யத்தில் பல முறைகள் இருக்கின்றன. மருத்துவ உலகம் அடைந்திருக்கிற முன்னேற் றத்தை அனுயாச மரணத்திற்கு நன்கு பயன் படுத்தலாம் என்னும் கொள்கை உலகெங்கும் அதிவேகம் பரவி வருகிறது. ஒவ்வொரு கொள் கைக்கும் ஆமோதிப்பும், எதிர்ப்பும் இருந்து வருவது இயல்பு. துன்பத்தைத் துடைத்து இன்பத்தை வளர்க்கக் கையாளும் முறை ஒவ் வொன்றும் ஆமோதிப்புக்குரியதாகும். உலக அமைப்பில் ஒவ்வோர் உயிரும் மற்ற உயிர் வகைகளை உணவாகப் பயன்படுத்தி வாழ்ந்து வருகின்றது. நிலைத்திணை, இயங்குதிணை ஆகிய இரண்டு திணைகளுக்கும் உயிர் உண்டு. நிலைத்திணையாகிய மரம், செடி, கொடி, பயிர் பச்சை ஆகியவைகள் பரஸ்பரம் ஒன்றுக் கொன்று உணவாகின்றன. அதற்கு மேல் நிலைத்திணை இயங்குதிணை ஆகிய இரண்டும் ஒன்றையொன்று கொன்று உணவாக்கி வாழ்ந்து வருகின்றன. அப்படிச் செய்யாவிட் டால் அவைகள் தாமே மடிந்துபட்டுப்போம். பிற உயிரை உண்டாக்க வல்லவனே பிற உயிரை மாய்க்கத் துணியலாம் என்னும் கொள்கை இயற்கையின் நடைமுறையோடு ஒத்ததன்று. அனந்தங்கோடி உயிர்கள் ஒன்றை யொன்று கொன்று தின்று வாழ்ந்து வருகின் றன. அவைகளுக்கு உயிரை உண்டுபண்ணத் தெரியாது. கொலைமயமாயுள்ள உலகில் எத் தகைய கொலையில் துன்பம் குறைந்திருக்கிறது என்பதே முக்கியமான கோட்பாடாகும்.

கபீர்தாஸின் ஞான அமுதம்

(திரு. V. S. நரசிம்மன்)

நமது நாட்டில் தோன்றிய மகான்களில் கபீர்தாஸ் ஒருவர். தமது ஞான அனுபவத்தால் ஞானம், பக்தி, குரு அருள், சாதனை முறை, சத்சங்கம் எனப் பல தத்துவக் கருத்துக்களைப் பாமரர்களும் எளிதில் உணரும்படியாகப் பாடியுள்ளார். தோஹா (ஈரடிச் செய்யுள்) என்ற பாக்கள் ஹிந்தி இலக்கியத்தில் சிறப்பிடம் வகிக்கின்றன. அவர் இயற்றிய இக்கவிதைகள் பேதங்களைக் கடந்து சாதகர்கள் அனைவருக்கும் பயன்படும் முறையில் அமைவதை ஈண்டுக் காண்போம்.

குருவின் மகிமை :

குருவருள் இன்றித் திருவருள் இல்லை. சீடனுக்குக் குரு பக்தி இல்லையெனில் முன்னேற்றமும் இல்லை. அஞ்ஞானம் எனும் இருளையகற்றி ஞானம் என்ற ஒளியைத் தரும் ஆசானுக்கு என்ன கைம்மாறு தருவது? குருவை மும்மூர்த்தியின் சொருபமாக வழிபாடு செய்வது நமது பண்பாடு. பூவுலகத்தைக் காகிதமாக எடுத்து, மரம் ஒன்றை எழுதுகோலாக்கி ஏழு சமுத்திரங்களின் நீரை மையாகக்கொண்டு, வர்ணிக்க முயற்சி செய்தாலும் குருவின் பெருமையை எழுத இயலாது " என்பது கபீர்தாஸின் கூற்று.

சப் தரதீ[1] காகத் கரும் லேகனி சப் பநராய்[2] !
சாத் சமுந்த கீ மசி கரும் குரு குண லிகா ந ஜாய்!!

(1. பூமி. 2. மரம்.)

ஞானத்தின் சிறப்பு :

ரிஷி மூலம், நதி மூலம் பார்க்கக்கூடாது என்பது ஆன்றோர் மொழி. ஞானியின் சிறப்பு அவர் அடைந்த பரிபாகத்தில் உள்ளது; அவர் பிறந்த ஜாதியில், மதத்தில் இல்லை. கத்தி ஒன்றை வாங்கும் போது, அதன் கூர்மை, ஆக்கப்பட்டுள்ள உலோகம் ஆகியவற்றை ஆராய வேண்டும். அதனை விடுத்து, கத்தி வைக்கப்பட்டுள்ள தோல் உறையைப் பொருத்து அதனை மதிப்பிடலாமா? அது போன்றே, ஞானியை மூடி இருக்கும் தோல் உறையைக் (சரீரத்தை) கவனிக்காதே. அவரிடம் ஞானத்தையே நாடு. அதனைப் பற்றியே பேசு.

ஜாதி ந பூசோ ஸாதுகீ பூசி லீஜியே ஞான் !
மோல்[1] கரோ தர்வார்[2] கா படா ரஹன் தோ ம்யான்[3]!)

(1. விலை. 2. கத்தி. 3. மேலுறை.)

முறையற்ற வழிபாடு :

சாதகர்களின் தன்மையைச் சில கவிதைகளில் காண்போம். வெளிவேஷம் தரித்து, ஆடம்பரத்துடன் செய்யப்படும் பூஜையும், ஜபமும் மனதைத் தூய்மைப் படுத்துவதில்லை. சாதகர்களிடம் ரஜோகுணம் மேலோங்கி இருப்பதையே இது உணர்த்தும். புறக்கரணங்களை அடக்கி, அந்தக்கரணத்தில் இந்திரிய விஷயங்களைப்பற்றிச் சிந்தித்து இருப்பவன் கபடன் (मिथ्याचारः) என்று கீதை உரைக்கின்றது. "உன் கையில் ஜபமாலை உருட்டப்படுகின்றது; நாவோ மந்திரத்தை ஜபிக்கின்றது; ஆயின் மனதோ பத்துத்திக்குகளிலும் அலைகின்றது. இது முறையான வழிபாடு அன்று" கபீர்தாஸ் சித்திரிக்கும் கபடனின் வழிபாடு இது.

மாலா தோ கர்[1] மே பிரை, ஜீப் பிரை முக மாஹி !
மநுவாந் தோ தஸ் திஸி பிரை யஹ் தோ சுமிரன்[2] நாஹி !!

(1. கை. 2. நல்ல வழிபாடு.)

நல்ல கிரியை :

மனதில் உள்ள மாசுகளை நீக்குவதற்காக முயற்சி செய்யவேண்டும். அதற்கெனத் தவம் புரியவேண்டும். இறைவனிடம் பிரார்த்தனை செய்து, தமது தலைமுடியைக் காணிக்கையாகத் தருவது ஒரு கிரியை ஆகும். பிரார்த்தனையின் ஒரு பகுதியாகவே இச்செயல் அமையவேண்டும். புறச் சடங்குகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து, அந்தரங்க சுத்தியை அறவே புறக்கணித்தல் தவறு. 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்' என்ற குறளும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது. சடங்குகள் இன்றியமையாதவை. அரிசி மணியைக் காப்பாற்றும் உமியைப்போல நமது தத்துவங்களை அவை பாதுகாக்கின்றன. சடங்குகளின் தனித்தன்மையை உணர்ந்து, அவற்றிற்கு உரிய இடத்தை மட்டுமே தரவேண்டும் என்ற கருத்தை வெகு அழகாகக் கபீர் எடுத்துரைக்கின்றார். "தலையில்

உள்ள கேசம் மனிதனைப் பார்த்துக் கூறுகின்றது. வீணே எதற்கு அடிக்கடி தலையை மழித்து விடுகின்றாய். விஷய வாசனைகளையே உன் மனம் நாடி அலைகின்றதே! அதனை 'மழிக்க மாட்டேன்' என்று கூறி வீணே வாழ்வது எதற்காக?"

கேசன் கஹான் பிகாரியா ஜோ முண்டை[1] ஸௌ பார்!
மன கோ க்யோன் நஹிம் முண்டியே, ஜாமேம் விஷய பிகார்!!

(1. மொட்டையடிப்பது)

முறையான தேர்வு :

வாழ்க்கையை வெவ்வேறு கோணங்களில் இருந்து யோகியும், போகியும் ஆராய்கின்றனர். 'மற்றவர்களுக்கு இரவாக இருப்பது யோகிக்குப் பகல்; மற்றவர்களுக்கு எது பகலோ அதுவே அவனுக்கு இரவு' என விரோதாபாச அலங்காரமாக பகவத்கீதை இருவரின் இயல்பைச் சித்திரிக்கின்றது. 'தஸ்மாத் யோகீ பவ-எனவே நீ யோகி ஆவாய்' என்று பன்னிப் பன்னிப் பார்த்தனுக்கு உரைக்கின்றார் பரந்தாமன். 'அடைதற்கரிய மானிடப் பிறவியை எய்தியபின் இறைவனை அடைவதே உயர்ந்த லட்சியம்' என்பார் பரமஹம்ஸர். 'ஆத்ம ஞானம் பெறாது, வீணே இப்பிறவியைக் கழிப்பவன் தன்னைத் தற்கொலை செய்து கொள்கின்றான்' என்பது ஆச்சாரியார் சங்கரரின் மதம். யோகம், போகம் இரண்டின் தன்மைகளையும் சீர்தூக்கி நல்ல முறையில் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதே ஞானிகளின் போதனை. இதனையே கபீர்தாஸ் அவர்களும் எடுத்துரைக்கின்றார். "அன்னமும் கொக்கும் ஒரு சேரப் பறந்து மானஸரோவர் என்ற தடாகத்தை அடைந்தன. நீரில் மூழ்கி கொக்கு மீன்களைத் தேடியது; அன்னமோ ஆழ்ந்து சென்று முத்துக்களைச் சேகரித்தது."

ஹம்ஸா பகுலா[1] நக் ஸா மானஸரோவர் மாஹி!
பகா டண்டோரை மாசளி[2] ஹம்ஸா மோதி[3] காஹி!!

(1. கொக்கு. 2. மீன். 3. முத்து.)

மானசரோவர் நமது மனதைக் குறிக்கின்றது. அகத்தே ஆழ்ந்து மூழ்கி தெய்வீகச் சிந்தனைகள் என்னும நல் முத்துக்களைத் தேடுபவர் அன்னத்தைப் போன்றோர்; விஷய சுகங்களாகியவிருத்தி மனதில்மேலோங்கி இருப்பவர்கள் மீன்களைத் தேடும் கொக்குப் போன்றவர்கள். எளிய கற்பனைமூலம் யோகி, போகி ஆகியோர் இடையே இலங்கும் வித்தியாசத்தை நுணுக்கமாக, தெளிவாக விளக்கியுள்ளார்.

கொள்வன கொள் :

யோகம், போகம் ஆகியவற்றை இன்னும் ஒரு கவிதை விளக்குகின்றது. எறும்புக் கூட்டமொன்று தமக்குத் தேவையான உணவை நாடிச் செல்கின்றது. அரிசியும், பருப்பும் அருகருகே இருப்பதை ஒரு எறும்பு பார்த்தது. அரிசியை முதலில் எடுத்துச் சென்றது. 'பருப்புத் துகளைப் பின்னர் எடுக்கலாம்' என்று எண்ணியது போலும்! கபீர் இக்காட்சியைக் கண்டு உரைக்கின்றார். "எறும்பின் நடத்தையைக் காண். இரண்டும், (அரிசியும் பருப்பும்)ஒருசேர எடுக்க இயலாது. எனவே ஒன்றை எடு. மற்றதை விடு." சாதாரண நிகழ்ச்சியாகப் பாடியுள்ளதை நாம் சூக்ஷ்மமாக ஆராய வேண்டும். எறும்புக் கூட்டத்தைப் போன்று நாம் தேவைகளை நாடி அலைகின்றோம். போகத்திற்கு உதவும் பொருள்கள், யோகசாதனைக்கான நியமங்கள் இரண்டும் ஒருசேர உலகில் உள்ளன. அரிசியும், பருப்பும் போல இரண்டையும் மேற்கொள்ள முடியாது. 'சிறிது போகம், சிறிது யோகம்' என வாழ்க்கையை அமைக்க இயலாது.யோகத்தைப் பின்பற்று,போகத்தை உதறிவிடு;அன்றேல்போகத்தில்ஆழ்ந்துவிடு,யோகத்தை மறந்துவிடு. இந்த உயர்ந்த தத்துவத்தையே இக்கவிதை தன்னுள் அடக்கியுள்ளது. சிரேயஸ், பிரேயஸ் என்ற இரண்டும் மனிதனை ஈர்க்கின்றன. சிரேயஸைத் தேர்ந்தெடுத்துச் சிறப்புற வாழ்வோன் மேன்மகன் ஆகின்றான் (ஸாதுர்பவதி). ஆயின் இன்பத்தை விரும்பி பிரேயஸை நாடுபவன் பந்தத்தில் மூழ்கும் அவிவேகி ஆகின்றான் என்ற கடோபநிஷத்தின் கருத்தைக் கபீர்தாஸ் எதிரொலிக்கின்றார் போலும்!

சீன்டி[1] சாவல்[2] லை சலீ பிச் மேம் மிலகயி தால்![3]
கஹ கபீர தோ[4] நா மிலை இக் லே தூஜீ[5] டார்!![6]

(1. எறும்பு. 2. அரிசி. 3. பருப்பு. 4. இரண்டும். 5. மற்றதை. 6. உதறு.)

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் :

நற்குணங்களைக் கடைப்பிடிப்பவர்தாம் பக்தியிலும், ஞானத்திலும் மேலோங்கி இருக்க முடியும். சாதகனுக்கு அஹங்காரத்தை விடப்

பெரிய எதிரி எதுவுமில்லை. பல சிறப்புக்கள் வாய்க்கப்பெறினும் அகந்தை என்ற ஒரு இழி குணம் சாதகனை அழித்துவிடும். அடக்கமோ அமரருள் உய்க்கும். பணிவுபாராட்டத்தக்க நற் பண்பு. இதன் பெருமையைக் குறித்துக் கபீர் பாடுகின்றார். 'ஒரு தலையை வைத்துக்கொண்டு மனிதன் காட்டும் அகம்பாவத்தைப் பார். இலங்கை வேந்தனாகிய இராவணன் பத்துத் தலைகளும் இருபது புஜங்களும் படைத்திருந் தும் அழிந்ததை நீ உணரவில்லையா." இரா வணனின் சோக முடிவை மனதிற்கொண்டு அகம்பாவத்தை ஒழித்து, பணிவோடு இரு என்பது கருத்து.

ரக் ஸீஸ்[1] கா மானவா கர்தா பஹுதக் ஹீஸ்![2]
லங்காபதி ராவண் கயா பீஸ் புஜா தஸ் ஸீஸ்!!
(1. தலை. 2. கர்வம்.)

பருவத்தே அன்றிப் பழா :

எந்த ஒரு செயலுக்கும் பலன் குறித்த காலத் தில் தான் கிடைக்கும். பருவத்தேயன்றிப்பலன் கிட்டாது. ஆத்ம சாதனையில் சாதகன் வெகு சீக்கிரம் பலனை எதிர்பார்க்கிறான். எத்த னையோ பிறவிகளில் சேர்க்கையான கர்மவினை அவ்வளவு எளிதில் தீராது. ஆத்ம சாதனை யும், ஈசன் அருளும் இன்றி வேறு குறுக்குவழி (Short cut for success) இதற்குக் கிடை யாது. நாரதமுனிவர் ஈசனைக் காணச் செல் லும் போது, இரண்டு ரிஷிகளைக் கண்டார். 'எங்களுக்கு எப்போது முக்தி கிட்டும் என ஈசனை வினவி வாருங்கள்' என்று நாரதரை அவர்கள் வேண்டினர். திரும்பி வரும்போது நாரதர் ஒருவரைப் பார்த்து, 'உமக்கு இன்னும் மூன்று பிறவிகளில் முக்தி' என்றார். 'ஐயோ! இன்னும் மூன்று பிறவிகளா?' என்றுரைத்துச் சோர்ந்து அமர்ந்தார் அவர். அடுத்தவரைப் பார்த்து, 'இதோ இருக்கின்ற மரத்தில் எத் தனை இலைகள் உள்ளனவோ அத்தனை பிறவிகளுக்குப் பிறகே தங்களுக்கு முக்தி கிட்டும்' என்றார் நாரதர். இதைக் கேட்டதும் பரவசமுற்று அவர் ஆனந்தக் கூத்தாடினர். 'இவ்வளவு பிறவிகள் தாமா? எப்படியேனும் எனக்கு முக்தி கிட்டும் என்று ஈசன் கருணை புரிந்துள்ளாரே' என்று மகிழ்ந்தார். ஈசன் காட்சி தந்து, 'மனதை வென்ற உமக்கு இக் கணமே முக்தி' என்று அருளினர். 'காலேன ஆத்மனி விந்ததி—உரிய காலத்தில் தனது ஜீவ இயல்பை வெற்றி கொள்கிறான்' என் பது கீதை. தியான முறையை விளக்கும் போது, 'சனை: சனை: உபரமேத் புத்யா த்ருதி க்ருஹீதயா—திடமான புத்தியோடு படிப்படி யாக மனதில் அமைதியை உண்டாக்க வேண் டும்' என பகவான் உரைக்கின்றார். இந்த வேதாந்தக் கருத்தை எளிய முறையில் தமக்கே உரித்தான பாணியில் கபீர் விவரிக்கின்றார். 'மானுடா, அனைத்தும் மெல்ல மெல்ல நிகழும். தோட்டக்காரன் தண்ணீரை ஊற்றிக்கொண்டி ருந்தாலும், வசந்த காலத்தில் தானே பூக்கள் நன்கு மலரும்?" அடுத்தடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி—எடுத்த கருமங்கள் ஆகா' என்ற முதுரையை மனதிற்கொண்டு, நமது கருமத்தைச் செவ்வனே செய்து இறைவனின் அருளைப் பொறுத்து 'பலன் கிட்டினும் சரி, கிட்டாதாயினும் சரி' என்ற கர்மயோகியின் மனநிலையை இக்கவிதை உணர்த்துகின்றது.

தீரே தீரே ரே மனு தீரே சப் குச் ஹோய்!
மாலீ சீஞ்சை[1] ஸோ கடா, ருது[2] ஆயே பல் ஹோய்!!
(1. நீர் பாய்ச்சுதல். 2. பருவம்)

உலகோரியல்பு :

யோகம், போகம் இரண்டும் உலகில் கிடைக் கின்றன; யோகியாக இருப்பதே விவேகியின் செயல் என்று கண்டோம். ஆயின் போகத்தை நாடுவதே உலகோரியல்பு. 'ஆயிரத்தில் ஒரு வரே என்னை அடைய முயற்சி செய்கின்றார்' என்று ஸ்ரீ கிருஷ்ணர் உரைக்கின்றார். நல்ல மார்க்கத்தில் பற்று வருவது அரிது; தீய மார்க் கத்திலோ எளிதில் பற்று வருகின்றது. உல கோரியல்பை மிக அற்புதமாகக் கபீர் விளக்கு கின்றார். 'நல்ல பாலை விற்க வேண்டுமாயின், தலையில் சுமந்து தெருத் தெருவாக அலைய வேண்டும். ஆயின் கள்ளை விற்பவன் சிறிதும் சிரமப்படாது, உட்கார்ந்த இடத்திலேயே தனது வேலையை முடிக்கின்றான். தூய மார்க் கத்திலே எவரும் நம்பிக்கை கொள்வதில்லை. ஆயின் தீய மார்க்கத்திற்கோ உலகமே சரணடைகின்றது."

ஸாஞ்சே[1] கோயிநபத ஐகு[2] ஜுடே ஜக பதியாய்!
கலீ கலீ கோரஸ்[3] பிரை மதிரா[4] பைட காய்!!
(1. தூய்மை. 2. நம்பிக்கை. 3. பால். 4. கள்.)

ம்ருத்யோர் முக்ஷீய மரம் :

மரணத்தைப்பற்றிய எண்ணம் நமது மனதில் அழுத்தமாக எழுவதில்லை. அனைவரையும் வழி அனுப்பிக் கொண்டிருக்கும் நாமும் ஒருநாள் அந்நிலையை அடைவோம் என்ற எண்ணம் வருவதேயில்லை.' 'உலகிலேயே மிகவும் ஆச்சரியமானது எது?' என்று யக்ஷன் தர்மபுத்திரரைக் கேட்கின்றார். 'நாள் தோறும் உயிரினங்கள் யமனுலகம் சென்று கொண்டே உள்ளன. எனினும் 'தாம் மட்டும் அசையாது இவ்வுலகில் இருப்போம்' என்று மக்கள் எண்ணுகின்றனர். இதைக் காட்டிலும் வேறு அதிசயம் யாது?' என்று தருமர் பதில் உரைக்கின்றார். கபீர்தாஸ் இந்தக் கருத்தை வலியுறுத்திப் பேசுகின்றார். ஒருவர் தம் நண்பரையோ உறவினரையோ கண்டதும் 'சௌக்கியமா? நலமா?' என்று கேட்கின்றார். இப்படிக் குசலம் பேசிக் கொண்டே இருப்பவர் எவரும் நிரந்தரமாக உலகில் இருந்ததில்லை. மூப்பும், யமபயமும் உள்ளவரை மனிதனே உனக்குக் குசலம் எப்படிக் கிடைக்கும்?

குசல் குசல் ஹி பூச்தே ஜக்மேம் ரஹா ந கோய்!
ஜரா[1] மூயி[2] ந பய முஆ[3] குசல் கஹாம் தே தோய்!!

(1. மூப்பு. 2. மரணம். 3. நீங்குதல்.)

உள்ளத்தே உறையும் நசன் :

'கட்டைவிரல் அளவாக இப்புருஷன் ஆத்மவின் இருதய ஆகாசத்தில் விளங்குகின்றான்' என்பது கடோபநிஷத். இறைவனைப் புறத்தே தேடக் கூடாது. (பிரசவம்) இது அகத்தே நிகழ வேண்டிய செயல் (பிரதிப்ரசவம்). இது அறிய வேண்டுவது அன்று (அபிக்ஞ); உணர வேண்டியது(பிரத்யபிக்ஞ). இந்த உண்மையை அறியாதவரை இங்கும் அங்கும் வீணே அலைந்து திரிய வேண்டியதுதான். வேதாந்தம் சிறந்த உவமைகளால் இத் தத்துவத்தை உணர்த்துகிறது. தனக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற பொக்கிஷம் தனது காலடியில் புதையுண்டு இருப்பதை அறியாது, நடந்து திரியும் மனிதனைப் போல் நாம் இருக்கின்றோம். கஸ்தூரி மான் நறுமணம் கமழும் கஸ்தூரியைத் தானே உண்டாக்குகின்றது. அதன் தோற்றுவாயைக் கண்டறிய பல திக்குகளில் ஓடுகின்றது. தான் புறத்தே தேடும் வஸ்து தன்னிடமே உள்ளது என்பதை அது அறிவதில்லை. அதுபோன்று தனது இதயத்தே பிரகாசிக்கும் பேரின்ப சொருபத்தை அகக்கண் கொண்டு நோக்காது, மாயையினால் மயங்கி, புறத்தே தேடி அலைகின்றோம். "பூவில் நறுமணம் போல், உனது சுவாமி உன்னிடமே இருக்கின்றார். கஸ்தூரியைத் தேடி அலையும் கஸ்தூரி மான் போல் அடிக்கடி வீணே ஏன் அலைகின்றாய்?" என்கிறார் கபீர்.

தேரா ஸாஈ[1] துச்ஞ மேம் ஜ்யோம் பஹுபன்[2] !
[மே பாய்[3]
கஸ்தூரி கா மிரக்[4] ஜ்யோம்[5] பிர் பிர் டுண்டை[6] காய்!!

(1. சுவாமி. 2. மலர். 3 நறுமணம். 4. மான். 5. அதுபோல். 6. தேடுதல்.)

உபதேசிக்கத் தகுதி :

தெய்வீக வாழ்க்கையில் அகங்காரத்தை அடக்கி நிலைபெற்று இருப்பவர் அரிது. சாதனையில் சிறிது முன்னேற்றமோ, தெய்வீக அனுபவங்களோ அடைந்தபின் சாதகன் தன்னைப்பெரியவனாகக் கருதத் தலைப்படுகின்றான். ஒரு சிலர் அவனைப் போற்றிப் புகழ்ந்து துதிபாடவும் செய்கின்றனர். தன்னைச் சுற்றி ஒரு கூட்டம் வளர்ந்தபின் ஞான குருவாக மாறி, வெகு சீக்கிரம் உபதேசிக்கவும் தொடங்குகின்றான். ஆன்மீகப் பாதையில் இத்தகைய ஆசான்கள் அதிகம்; ஆயின் அறிவுரைப்படி நடக்கும் சீடன் தான் அரிது! 'குரு மிலேன் லாகோன் லாக், சிஷ்ய ந மிலே ரக்' என்று பழமொழி உள்ளது. அனுபவமற்ற குருவிடம் சிக்கிய பக்குவமற்ற சீடனின் கதி யாது? நீர்ப்பாம்பு தன்னால் விழுங்க இயலாத தவளையைக் கவ்விக்கொண்டால் இரண்டிற்கும் மரண அவஸ்தை தானே? 'ஈசுவரனின் அனுமதியைப் பெறாது எவரும் உபதேசம் செய்யக் கூடாது' என்பார் பரமஹம்சர். சாதகன் முதற்கண் உபதேசத்தின்படி நடக்கவேண்டும் என்கிறார் கபீர்தாஸ். "உனது தாகத்தைத் தீர்த்துக் கொள்ள உன்னிடம் தண்ணீர் இல்லை; ஆனால் ஏனையோருக்குப் பால் வழங்கத் தலைப்படுகின்றாய். உனதுமனமோ சலனத்தோடு அலைகின்றது; ஆயின் தீரனைப் போல் புறப்பட்டு விட்டாய்"

பாணி மிலை ந ஆப்கோ, ஔரன்[1] பகஸத் க்ஷீர்[2] !
ஆபன் மன நிஸ்சல நஹீம் ஔர் பந்தாவத் தீர்!!

(1. மற்றோர். 2. பால்.)

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

18. கம்பன் கண்ட திரிசடையின் கனவு :

சீதை தன் மேனியில் தோன்றிய சில நல்ல நிமித்தங்களைத் தாயினும் இனியவளான திரிசடையிடம் கூறி அவற்றிற்குப் பலன் என்ன என்று வினவுகின்றாள். அந்நிமித்தங்களின் பலனையும், அவற்றிற்கு ஆதாரமாகத் தான் கண்ட கனவினையும் கூறிச் சீதைக்கு உற்சாகமூட்டுகின்றாள் திரிசடை. திரிசடையின் தெளிவுரையைக் கேட்கலாம் :

"தேவீ! உனக்கு மங்களம்! நீ கூறிய நிமித்தங்களினால் உன் கணவனை விரைவில் அடைவாய் என்று தேற்றமாகிறது. உன் மேனியில் ஏற்பட்டுள்ள நிமித்த மாற்றங்களை நானே பார்க்கின்றேன். உன்னுடைய மேனி இதுகாறும் இருந்த மங்கிய நிலையிலிருந்து மாறி ஒளி பொருந்தியதாக விளங்குகின்றது. உன் முகம் பொங்கிவரும் பெரு நிலவெனக் காட்சியளிக்கின்றது. அதோ பார்! உன் செவிகளுக்கு அருகே 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'யானவண்டு ஒன்று யாழினும் இனிய இசையை எழுப்பிக்கொண்டு உன் காதில் ஏதோ ஒரு செய்தியை எடுத்துச் சொல்ல முயல்வது போன்று பறந்துகொண்டிருக்கிறது! இதன் பலன், உன் ஆருயிர் நாயகனிடமிருந்து ஒரு தூதுவன் உனக்கு நல்ல செய்தி கொண்டுவரப் போகின்றான் என்பதாகும்.

"ஜானகீ! உனக்கு ஏற்பட்ட நன்னிமித்தங்கள் நல்ல பலனைத் தரப்போவது உறுதி! என்னை நீ எழுப்பியபோது உறக்கத்தில் நான் கண்ட கனவே இதற்குச் சான்றாகும்! நீ தூங்குவதில்லையாதலின் நல்ல நிமித்தங்கள் கனவு மூலம் உனக்கு வர வழியில்லை. எனவே நான் கண்ட கனவைச் சொல்கின்றேன் கேள்! பொய்மை மாந்தர் நிறைந்த இவ் இலங்கையில் கூடக் கனவுகள் பொய்யாவதில்லை.

"மாசில்லாத கற்புத் தெய்வமே! எங்கள் அண்ணல் ராவணன் தன் தலைகள் பத்திலும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு, சிவந்த ஆடையணிந்து கழுதைகளும் பேய்களும் பூட்டிய தேரில் அமர்ந்து தென்திசை நோக்கிச் சென்றான். அவனைப் பின்பற்றி ஏனைய உறவினரும் அரக்கரும் அத்திசையிலேயே சென்றனர். சென்றவர்கள் யாரும் திரும்பி வரவில்லை.

"அன்னையே! இலங்கையின் அழிவை முற்பட உரைக்கும் துர்நிமித்தங்களையும் கண்டேன்! ராவணன் மாளிகையில் நாள்தோறும் வளர்க்கப்படும் ஆகவநீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி ஆகிய மூன்று ஓமாக்கினிகளும் அவிந்துபோய்விட்டன! வைரம்போன்று ஒளி வீசும் அவன் மாளிகை வானிலிருந்து விழுந்த இடியினால் தாக்குண்டு பொடிப் பொடியாகியது; பெண் யானைகள் மதநீர் ஒழுகப்பெற்றவையாயின; யாரும் அடிக்காமலேயே முரச வாத்தியங்கள் பேரொலி எழுப்பின; மேகக் கூட்டம் எதுவும் இன்றியே வானம் இடி இடித்து முழங்கிற்று; விண்மீன்கள் வெடித்து மண்மீது உதிர்ந்து விழுந்தன; பகலின்றி இரவுநேரத்தில் சூரியன் பிளவுபட்டதுபோன்று எரிந்துகொண்டிருந்தான்; இலங்கையின் 'காயத்தால் பெரிய, வீரம் கணக்கிலாத' மாந்தர்கள் சூடிய கற்பக மாலைகள் புலால் நாற்றம் எடுத்தன; 'செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகராகிய' இலங்கை முழுவதும் சுழல ஆரம்பித்தது; எட்டுத் திசைகளும் நெருப்புப் பற்றி எரிந்தன; இங்குள்ள கற்பகச் சோலைகள் தீக்கிரையாகிக் கருகின; மங்களகரமான பூர்ண கலசங்கள் விரிந்து உடைந்தன; இருள் ஒளியை விழுங்கியது; அரசர்க்கும் மக்களுக்கும் அபசகுனமான கந்தர்ப்ப நகரம் ஆகாயத்தில் தோன்றி மறைந்தது; தோரணங்கள் முறிந்து விழுந்தன; வலிமை மிக்க வாரணங்களின் தந்தங்கள் வலுவிழுந்து ஒடிந்தன; அறவோராகிய அந்தணர் பிரதிஷ்டை செய்த பூர்ண கும்பங்களிலுள்ள நன்னீர் கள்ளாக மாறிப் பொங்கியது; சந்திரனை உடைத்துக்கொண்டு நட்சத்திரங்கள் விண்வெளியில் புறப்பட்டன; தண்ணீர் பொழியும் கருமேகங்களிலிருந்து இரத்தமாரி பெய்தது; தண்டம், சக்கரம், வாள், வேல், வில் முதலிய ஆயுதங்கள் தாமாகவே ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டன; இலங்கை மாத

ரின் மங்கலத் தாலிகள் தாமாகவே கழன்று கீழே விழுந்தன; மயன்மடந்தையாகிய மண்டோதரியின் பின்னப்பட்ட அழகிய கூந்தல் தானாகவே அவிழ்ந்து விளக்கின் நெருப்பில் பட்டுக் கருகிப்போயிற்று.

"வனிதையர் திலகமே! இறுதியாக நீ என்னை எழுப்பியபோது நான் கண்டு கொண்டிருந்த கனவுக்காட்சியைக் கேட்பாயாக! இரண்டு சிங்கங்கள் புலிக்கூட்டத்தின் துணையுடன் ஒரு காட்டிற்கு வந்து, அங்கிருந்த மதம் பிடித்த யானைகளை வளைத்து, நெருக்கி, அழித்து அவ்வனத்தைப் பிணக்காடாகச் செய்தன! பின்னர், அவ்வனத்தில் இருந்த மயில் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஒப்பில்லாத ஒரு பட்டணத்தை அடைந்தது. திருமகள் போன்ற தெய்வப்பெண் ஒருத்தி ஆயிரம் திருவிளக்குகளை அங்கையில் ஏந்தி ராவணன் மாளிகையினின்றும் புறப்பட்டு என் தந்தையான விடணன் அரண்மனையை அடைந்தாள். அவ்வாறு அப்பெண் விடணன் மாளிகையில் நுழைந்ததைக் கனவில் கண்டு கொண்டிருந்தபோதுதான் நீ என்னைத் துயில் எழுப்பிவிட்டாய்! அதனால் அந்தக் கனவு தடைப்பட்டு நின்று போய்விட்டது!"

தாய் சொல்லும் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் சீதை திரிசடையின் கனவு வர்ணனையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ராமனைப் பிரிந்த நாள் முதல் இந்தப் பத்து மாதங்களாக வஞ்சக அரக்கரின் நஞ்சனைய சொற்களைக் கேட்க வேண்டியிருக்கின்றதேயென்று நெஞ்சம் உருகியவள், பிரிவுத்துயரம் என்பதே ஒரு உருவம் எடுத்து வந்ததோ என்னும்படியான தோற்றம் கொண்டவள், இனிமேலும் தனக்கு விடுதலை கிடைக்குமோ என்று ஏங்கி ஏங்கி அந்த நம்பிக்கையை இழந்துகொண்டிருப்பவள், இவ்வளவு காலம் கழித்து, புயலில் சிக்கிய மரக்கலத் தளபதி பறவையைக் கண்டது போன்று தனக்கு நேர்ந்த நன்னிமித்தங்களைக் கண்டு சிறிது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்திருந்தாள். அதற்கு அரண் செய்வதுபோன்று திரிசடையின் கனவு ராமனின் வரவையும் ராவணனின் வீழ்ச்சியையும் குறிப்பிட்டதால் அளவுகடந்த ஆர்வத்துடன் அக்கனவுச் செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

திரிசடை சொல்லச் சொல்லச் சீதையின் உள்ளம் விவரிக்க முடியாத இன்பமான கற்பனை உலகில் மிதந்துகொண்டே சென்றது. சிங்கங்கள் இரண்டு என்பது ராம-இலக்குவரைக் குறிக்கும் என்பதையும், யானைக்கூட்டமென்பது அரக்கர்கூட்டம் என்பதையும், மயில் தன்னையே குறிக்கும் என்பதையும் சீதை எளிதில் புரிந்துகொண்டாள். ஆனால் 'புலிக்கூட்டத்தின் துணை' என்பது புரியவில்லை. அதே போன்று திரிசடை குறிப்பிட்ட தூதுவன் வருவான் என்பதும், சீதைக்குத் தெளிவாக விளங்கவில்லை. இந்த விஷயங்கள் கனவின் பிற்பகுதியில் விளக்கமாகும் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்த சீதைக்குத் திடீரென்று கனவு நிறைவுறாமல் தடைப்பட்டுவிட்டது பெரிய அதிர்ச்சியாகிவிட்டது. அதுவும் தான் அவசரப்பட்டுத் திரிசடையை எழுப்பியதால்தான் அக்கனவு தடைப்பட்டுவிட்டது என்று தெரிந்தபோது சீதை துடித்துப்போய்விட்டாள். தன் வாழ்வில் யோசிக்காமல் அவசரப்பட்டுச் செய்த செயலால் தான் இந்தக்கதிக்கு ஆளானோம் என்ற நினைவே சீதையை அணு அணுவாகத் துளைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், மீண்டும் தன்னுடைய அவசரச் செயலினால் திரிசடையின் கனவும் பாதியில் நின்று போய் விட்டதை உணர்ந்தபோது சொல்லொணாத துயரத்திற்கு ஆளானாள் சீதை. எப்படியும் திரிசடையின் கனவு முழுவதையும் தெரிந்து கொண்டால் தான் தன் மனம் ஓரளவு நிம்மதியடையும் என்று பேரார்வம் கொண்ட சீதை, பாமர மக்களும் நினைத்துப் பார்க்காத, யாரும் எதிர்பாராத வேண்டுகோளைவிடுக்கின்றாள் திரிசடையிடம்.

"தாயே! அந்தக் கனவின் மீதியையும் கண்டு எனக்குச் சொல்வாயாக! அதற்காக இன்னும் சிறிது நேரம் உறங்குவாயாக!" என்ற சீதையின் கோரிக்கையைப் படிக்கின்றபோது அவள் மனநிலை இருந்த வண்ணமும் அதனை நமக்குப் படம் பிடித்துக் காட்டும் கம்பனின் கவி வண்ணமும் நம்மை மெய் சிலிர்க்கச் செய்கின்றன. கம்பனின் கை வண்ணத்தைக் காண்போம்.

" பொன்மனை புக்க அப்பொருவில் போதினில்
என்னை நீ உணர்த்தினை; முடிந்ததுஇல் " என,
" அன்னையே! அதன் குறை காண் !" என்று
[ஆயிழை,
" இன்னமும் துயில்க!" என, இரு கை கூப்பினள்.
— காட்சிப்படலம் 53.

[பொன்மனை புக்க—விடணனுடைய அரண்மனையில் புகுந்த; அப்பொருஇல் போதினில்—அந்த ஒப்பில்லாத சமயத்தில்; ஆயிழை-சீதை; உணர்த்தினை—துயில் எழுப்பினாய்; முடிந்தது இல்—கனவு முடியவில்லை; அன்னை-திரிசடை.]

தடைப்பட்ட கனவை முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தினால் திரிசடையை மீண்டும் தூங்கும்படி கரம் கூப்பிச் சீதை வேண்டிக்கொள்கின்றாள் என்றால் அவள் மனம் பட்ட துயரத்தின் அளவை யாரால் வரையறுக்க முடியும் ?

இங்குச் சீதாப் பிராட்டி சாதாரண ஜீவ தத்துவத்தை விளக்குபவளாக இருக்கின்றாள். எனவே சீதை திரிசடையின் கனவுகளைக் கேட்டு ஆறுதல் அடைகின்றாள். பொதுவாக ஜீவர்கள் எதிர்காலத்தைப்பற்றி மனக் கோட்டை கட்டிக்கொண்டு இருப்பார்கள். எதிர்காலம் தங்களுக்குச் சிறப்பாக அமையும் என்று எண்ணிக்கொண்டு இருப்பார்கள்.சீதையும் திரிசடையின் கனவு தன் எதிர்காலத்தை விளக்குவதாக எண்ணியதால் திரிசடையின் கனவின் முழுமையையும் அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகின்றாள். ஆகையால், திரிசடையை இன்னும் சிறிதுநேரம் உறங்கி முழுக்கனவையும் கண்டுஅதை எடுத்துச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றாள். துயரத்திற்கு ஆளாகி இருக்கும் மனதின் நிலையைச் சீதையின் செயல் விளக்கிக்காட்டுகிறது.

தூங்கிக் கொண்டிருந்த அரக்கியர் கூட்டம், சீதை-திரிசடை உரையாடலைக் கேட்டோ, அல்லது தாமாகவோ, திடுமென விழித்துக் கொண்டது. ராவணன் கட்டளைக்கு மாறாகத் தூங்கி விட்டோமே என்ற பதற்றத்துடன் துயிலெழுந்த அரக்கியர் கீழே விழுந்து கிடந்த தங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சீதை இருப்பிடத்தை நெருங்கிச் சூழ்ந்து கொண்டனர்.

19. பேய்களும் அஞ்சும் உருவங்கள்:

சீதாப்பிராட்டியைக் காவல் செய்த அரக்கியர் பற்றிய வர்ணனை வான்மீகத்திலிருப்பது போன்றே கம்பனிலும் காணப்படுகின்றது. சாதாரண மனித உடல் அமைப்புக்களுக்கு மாறுபட்ட உருவ அமைப்புடன் காட்சியளிக்கின்றனர் இவ் அரக்கியர்.

வயிற்றில் வாயுடையவர்கள்; நெற்றியில் ஒரு கண் இருப்பவர்கள்; யானையும் யாளியும் துயில் கொள்ளும் அளவு இடைவெளியுடைய பல் வரிசை கொண்ட மலைக்குகை போன்ற வாயுள்ளவர்கள்; பத்துக் கைகளும் ஒரு தலையும் கொண்டவர்கள்; இருபது தலைகளும் இரண்டு கைகளும் பெற்றிருப்பவர்கள்; கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை உடுத்திய நஞ்சுண்டனும் கண்டு நடுங்கும் உருவத்தினர்; குதிரை முகம், நரிமுகம், புலிமுகம், நாய் முகம் கொண்டவர்கள்; கண்கொண்டு காண முடியாத அளவு கொடூரமானவர்கள்; பெண் என்று உருவம் எடுத்து வந்த எமன் போன்றவர்கள்; இப்படிப்பட்ட அரக்கியரைத் தான் சீதையின் காவலுக்கென்று ராவணன் ஏற்பாடு செய்திருந்தான். இலங்கையின் அரக்க மாதர் நல்ல அழகு உடையவர்தாம். ராவணனின் அரண்மனையிலுள்ள பெண்டிர் மிகவும் அழகுள்ளவர்கள் தாம். இருப்பினும் ராவணன் சீதையின் காவலுக்கென்று இவ்வாறு பேய்களும் அஞ்சும் உருவங்களை வைத்திருப்பதற்குக் காரணம் சீதையை வருத்தித் தனக்குப் பணிய வைப்பதற்காகத்தான். அனுமன் அசோகவனத்துள் நுழைந்தபோது இந்தப் பெண் பேய்கள் தாம் சீதையைச் சுற்றிக் காவலுக்கு இருந்தன.

இதுவரை அசோகவனச் சீதையின் உடல் இருந்த நிலையினையும் உள்ளம் துடித்த துடிப்பினையும் ஆதி கவியான வால்மீகியும் தமிழ்க் கவியான கம்பரும் எவ்வாறு நமக்கு விளக்கியருளினர்கள் என்பதைக் கண்டோம். இருவரில் கம்பன் சீதையின் மனப் போராட்டங்களை அழகாக எடுத்துரைப்பதையும் தெரிந்து கொண்டோம். இனி, சீதையைத்தேடி அசோக வனத்துள் நுழைந்த அனுமன் சீதையைப் பார்த்ததையும், அவள்தான் சீதை என்று உறுதிசெய்து கொண்டதையும் அடுத்த பகுதியில் காண்போம்.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

3. பட்டுப்பூச்சியும், ஜீவன்முக்தர்களும்:

நூல்களில் விலையுயர்ந்தது பட்டு நூலாகும். நாம் பயன்படுத்தும் பட்டுத் துணிகள் பட்டுப் பூச்சிகளின் கூட்டுப்புழுப் பருவத்தில் கிடைக்கும் பட்டு இழைகளினால் தயாரிக்கப்பட்டதாகும். சீனாவும் ஜப்பானும் பட்டு உற்பத்தியில் தலைசிறந்த நாடுகளாக விளங்குகின்றன. தற்போது பாரதத்திலும் இத் தொழில் சிறப்புற்று விளங்குகிறது.

பட்டுப் பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சியில் முட்டைப் பருவம் (Egg), கம்பளிப் புழுப் பருவம் (Larva), கூட்டுப் புழுப் பருவம் (pupa), முதிர்ந்த பட்டுப்பூச்சி (Imago) என நான்கு பருவங்கள் காணப்படுகின்றன. கருவுற்ற பெண் பூச்சி முசுக்கொட்டை இலைகளின் அடிப்புறம் சுமார் 300 முட்டைகளை ஒருகொத்தாக இடுகின்றது. சூரிய வெப்பத்தால் முட்டைகள் பொரிககப்பட்டுக் கம்பளிப்புழுக்கள் (Caterpillars) வெளி வருகின்றன. முசுக்கொட்டை இலைகளைத் தம் வாயிலுள்ள வெட்டும் பற்களால் துரிதமாக உண்ணத் தொடங்குகின்றன. இதனால் இவற்றின் உடல் பருத்து நான்கு முறை தோலுரிதல் (Ecdysis) நடைபெறுகின்றது.

கூட்டுப் புழுப் பருவத்தில் கம்பளிப் புழு தான் உண்ணுவதை நிறுத்திக்கொண்டு செடியின் கிளை ஒன்றின் ஒரு மூலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. பின்பு அதன் உமிழ் நீர்ச் சுரப்பிகளிலிருந்து சுரக்கப்பட்ட ஓர் ஒட்டும் திரவம் நாக்கில்ருந்து ஒரு துளை மூலம் வெளியேற்றப்படுகின்றது. அந்த ஒட்டுந் தன்மையுள்ள திரவம் வாயிலிருந்து வெளிவந்தவுடன் காற்றுப்பட்டதனால் நீண்ட இழையாக மாறிக் கம்பளிப் பூச்சியின் உடலைச் சுற்றி நன்றாகச் சுற்றப்படுகிறது. இதுவே அதற்குக் கூடாக அமைகின்றது. இதுபோன்ற கூடு அமைக்கும் பணி மூன்று அல்லது நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெற்ற பின்பு கம்பளிப் பூச்சியின் உடலைச் சுற்றித் தடித்த முட்டை வடிவமான மஞ்சள் நிறமுள்ள ஒரு கூடு அமைகின்றது. ஒரு பூச்சியில் இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பட்டு நூலின் நீளம் சுமார் 300 மீட்டர்கள் இருக்கும். சுமார் பதினைந்து நாட்களுக்குள் கம்பளிப் பூச்சி பழுப்பு நிறமுள்ள கூட்டுப் புழுவாக உரு மாறுகின்றது.

பட்டுநூல் எடுப்பவர்கள் இம்மாதிரியாகக் கூட்டுப்புழு பருவத்தில் கூட்டுப் புழுக்களைச் சேகரித்து அவற்றைக் கொதிநீரில் இட்டுக் கூட்டுப் புழுக்களை முதலில் கொன்றுவிடுகின்றனர். கூட்டுப் புழுக்களை இவ்வாறு கொல்லாவிடில் அவை வளர்ச்சியடைந்து பட்டு நூலினாலான கூட்டினை அறுத்துக்கொண்டு வளர்ந்த பூச்சிகளாக வெளிவந்துவிடும். இவ்வாறு கூட்டுப் புழுப் பருவத்தில் கிடைத்த பட்டு இழைகளை எடுத்துத் திரித்துப் பட்டு நூலாக மாற்றுவார்கள். கூட்டுப் புழுக்களைச் சேகரிக்கும்பொழுது சில புழுக்களைக் கொல்லாமல் விட்டு வைப்பார்கள். அவ்வாறு விட்டுவைத்த புழுக்கள் முதிர்ச்சியடைந்து பட்டுப் பூச்சிகளாகக் கூட்டை உடைத்துக்கொண்டு வெளி வருகின்றன. பட்டுப் புழு (Pupa) தான் கட்டிய கூண்டிலேயே கட்டுண்டு சாகிறது. அப்படி உலகத்தவர் தாங்கள் உண்டுபண்ணிக்கொண்ட உலகப்பற்று என்னும் கூண்டிலேயே கட்டுண்டு மடிகின்றனர். ஏதோ சில பட்டுப் புழுக்கள் தாங்கள் கட்டிய கூண்டை உடைத்துக்கொண்டு பட்டுப்பூச்சிகளாக வெளியே வருகின்றன. அதே விதத்தில் சில ஜீவர்கள் உலகப்பற்று என்னும் கூண்டை உடைத்துக் கொண்டு வெளியில் வந்து ஜீவன் முக்தர்கள் ஆகிறார்கள்.

"உலக வியவகாரங்களில் கட்டுண்டிருப்பவர்கள் கூட்டுப்புழுவுக்கு நிகர் ஆகின்றார்கள். வாழ்வில் விரக்தியடைந்து அன்னை பராசக்தியிடம் 'அம்மா, நீதான்வேண்டும்' என்று கதறியழுகிறவர்களுக்கு அனுக்கிரகம் செய்ய அவள் விரைந்தோடி வருகிறாள். அப்போதுதான் நாம் உலக பந்தபாசம் என்னும் கூட்டை உடைத்துக் கொண்டு பட்டுப்பூச்சி போன்று ஜீவன் முக்தர்களாக வெளியில்வருகின்றோம்."

—ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

(சுவாமி துருவானந்தர்)

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை:

இயற்கையில் நாம் காண்கின்ற உயிர்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இணைந்து வாழ்வதைக் காணலாம். உயிர் இனங்களை ஆராய்ந்து பாருங்கள். ஈ, எறும்பு, பூச்சி, மற்றும் வண்டினங்கள் அனைத்தும் தங்கள் இனங்களோடு சேர்ந்து வாழ்ந்து வருகின்றன. பறவைகளை ஆராய்ந்து பார்த்தால் கிளியினங்கள் காக்கை இனத்துடனோ அல்லது கழுகு இனத்துடனோ சேருகிறதா? விலங்குகளை ஆராய்ந்து பார்த்தால் பன்றி இனங்கள் தங்கள் கூட்டத்தோடு தங்கள் போக்கில் வாழ விரும்புமே யொழிய ஒரு நாளும் பசுக் கூட்டத்தோடோ, மற்ற இனங்களோடோ சேரா. பசுக் கூட்டமும், மான் கூட்டமும், தங்கள் பிறவிக் குணத்துக்குண்டான இயல்போடு கூடிய தங்கள் இனத்தோடுதான் சேர்ந்து வாழ விரும்பும். இது ஊர்வன, நடப்பன, பறப்பன ஆகிய எல்லா ஜீவராசிகளுக்கும் பொருந்தும். ஆனால் மனிதன் மட்டும் இதற்கு முற்றிலும் வேறுபட்டவன். அது எப்படி என்பதை ஆராய்வோம். பறவைகள் சில தங்கள் இனத்திலிருந்து பிரிந்து தனியே சென்றால் வேறு இனத்துப் பறவைகளோ, விசுவாசமுள்ள தங்கள் இனத்துப் பறவைகளோ கொன்றுவிடும். தங்கள் இனத்தை விட்டுப் பிரிந்து சென்ற ஒற்றை யானையைக் கூட்டமாக உள்ள மற்ற யானைகள் கொன்றுவிடும். தங்கள் இயல்புக்கு மாறாகப் போகும், தன்னிச்சையாகச் செயல்படும் அவைகளை அந்த இனங்கள் வாழ விடுவதில்லை.

நூறு புலிகளை ஆராய்ந்து பார்த்தால் புலியினுடைய இயல்புகள் எல்லாம் ஒரே மாதிரியாகத் தென்படும். நூறு நரிகளை ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் தன்மையனைத்தும் ஒரே மாதிரியாகத் தென்படும். நூறு நாய்களை ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் தன்மைகளனைத்தும் ஒரே மாதிரியாகத் தென்படும். ஆனால் நூறு மனிதர்களை ஆராய்ந்து பார்த்தால் நூறு பேர்களும் நூறுவிதமாகத் தென்படுவார்கள். புலி இயல்பு படைத்த மனிதன் உண்டு. நரியைப் போன்று பிறரைத் தந்திரமாக ஏமாற்றிப் பிழைக்கும் மனிதன் உண்டு. நன்றி மறவாத நல்ல குணம்படைத்த நாய் போன்ற இயல்பு படைத்த மனிதன் உண்டு. அரக்க இயல்பு படைத்த மனிதன் உண்டு. தெய்வ இயல்பு படைத்த மனிதன் உண்டு. இத்தகைய பல்வேறு இயல்பு படைத்த மனிதர்கள் எப்படி ஒற்றுமையாக ஒன்று கூடிவாழ்வார்கள்?

> "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
> ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
> நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
> ஞானம் வந்தால்பின் நமக்கெதுவேண்டும்?"

என்று பாரதி பாடுகிறார். இன்று உலகெங்கும் எல்லாரும் ஒருவகையில் ஒற்றுமையாக இருக்கிறார்கள். விரும்பிய ஊதியம் கிடைக்க வேண்டும் என்றால் வேலைக்குப் போகாது தொழிலாளர்கள் ஒன்று சேர்கிறார்கள். உரிமைக் குரல் எழுப்புகிறார்கள். இதில் மட்டும் ஒன்றுகூடினால் உற்பத்தி பெருகிவிடுமா?

பள்ளிக்கோ, கல்லூரிக்கோ சென்று படித்து முன்னேறவேண்டும் என்ற எண்ணம் இல்லாத மாணவர்கள் ஒன்று சேர்ந்து சிறிய பிரச்னைகளைக் கூடப் பெரிதுபடுத்தி ஸ்டிரைக் செய்கின்றனர். அதை முன்னிட்டுக் கல்வி நிலையங்களை மூடவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த நிலை நீடித்தால் மாணவர்கள் முறையான கல்வியைப் பெறமுடியுமா?

இன்றைய நிலையில் மாணவன் ஒருவன் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு ஆகும் செலவைக் கணக்கிட்டுப் பார்த்தால் அந்தத் தொகையை மூலதனமாக வைத்துக்கொண்டு ஒரு வியாபாரத்தையே ஆரம்பித்து விடலாம். ஆண்டுதோறும் படித்துவிட்டு வேலையில்லாமல் பெருகுகிற கூட்டம் கோடிக்கணக்காகக் கூடுகிறது. உடலால் உழைக்க இன்றையபடித்த இளைஞன் வெட்கப்படுகிறான். படிக்காது இருந்தாலும் அமைந்த வேலையைப் பார்த்துக்கொண்டு பட்டினி கிடக்காது காலம் தள்ளுவான். எந்த வேலையும் செய்யலாம் என்ற எண்ணம் இக்கால மாணவர்களிடம் கிடையாது.

தங்களைப் படிக்கவைக்கப் பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை மாணவ மாணவிகள் நினைத்துப் பார்ப்பதில்லை. நினைத்துப் பார்த்தால் எதற்கெடுத்தாலும் ஸ்டிரைக், மறியல் என்று இறங்கி தங்கள் படிப்பைக் கெடுத்துக் கொள்வார்களா? வழியில் செல்லுகிற ஒருவனை லாரியோ அல்லது ஏதாவது பஸ் முதலிய வாகனங்களோ அடித்துக் காயப்படுத்திவிட்டால் அந்த வாகன உரிமையாளர் மீது வழக்குத் தொடுத்து காயம்பட்ட, அல்லது மாண்டுபோன ஆளுக்கு நஷ்ட ஈடு தரும்படி கோருவார்கள். அதுதான் நியாயம் என்று சட்டம் படித்தவர்கள் எவரும் ஒப்புக்கொள்வார்கள். பெற்றோர்கள் வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி, அல்லது வீடு நில புலன்களை விற்றாகிலும், அல்லது கடன் வாங்கியோ ஏதாவது வழிகளில் பணம் சேர்த்துத் தங்கள் மகனை, மகளைப் பள்ளியிலும், கல்லூரியிலும் படிக்க வைக்கின்றனர். இன்றைய நிலையில் எதற்கெடுத்தாலும் ஆசிரியர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர். தங்கள் கிளர்ச்சிக்கு அப்பாவி மாணவ மாணவிகளையும் இதில் ஈடுபடும்படித் தூண்டுகின்றனர். தங்களுடைய விருப்பு, வெறுப்பை, குறை நிலையைத் தங்களோடுதான் ஆசிரியர்கள் வைத்துக் கொள்ளவேண்டுமேயன்றிச் சிந்தனையாற்றல் இல்லாத சிறுவர்களைத்தூண்டினால் கல்வி ஸ்தாபனங்கள் நடைபெறாது போகும். ஊர் சுற்றித் திரிய விரும்பும் சிறுவர்களுக்கு அது கொண்டாட்டமாக யிருக்கலாம். ஆனால் தங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை எண்ணிப் பெருமை பெறும் பெற்றோர்களுக்கு அது ஏமாற்றமளிக்கும என்பதை ஆசிரியர் உலகம் நினைத்துப்பார்க்க வேண்டும். ஸ்டிரைக் செய்தால் கல்வி ஸ்தாபனங்கள் ஒழுங்காக இயங்காது. மாணவர்கள் படிக்காவிட்டால் நன்கு பரீட்சை எழுதமுடியாது. சரியாகத் தேர்வு எழுதாத மாணவன் தோல்வியுறுவது திண்ணம். அந்தத்தோல்வியால் பெற்றோர்கள் அடைகிற பொருள் நஷ்டம் எவ்வளவு? லாரி, பஸ், காரில் அடிபட்டு ஒருவன் விழ்ந்தால் அதற்கு நஷ்டம் கேட்டுப்பெறுவதுபோன்று மாணவர்கள் தேர்ச்சியில் தோல்வியுற்றால், ஸ்டிரைக்கில் ஈடுபட்டுத் தன் படிப்பைக் கெடுத்துக்கொண்டால், சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மீதோ, ஸ்டிரைக்கைத் தூண்டிய மற்றவர்கள் மீதோ எந்தப் பெற்றோர்களாவது வழக்குத் தொடர முன் வருவார்களா? அந்த அளவு விழிப்பு நிலை இன்னும் நம் நாட்டில் ஏற்படவில்லை. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்பது கோட்பாடு. அதை வைத்தே 'ஆச்சாரிய தேவோ பவ' என்ற கொள்கையும் பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை நிலவி வருகிறது. எரிகிற விளக்கு ஒன்றிருந்தாலும் போதும் அணைந்துபோயுள்ள மற்ற விளக்குகளையெல்லாம் எரிய வைக்கலாம். அத்தகைய நல்ல ஆசிரியர் ஒருவருடன் மாணவர்கள் இணக்கம் வைத்தால் அவர்களின் வாழ்க்கையே சிறப்பாக அமையும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இன்றைய நிலையில் தனித்த நிலையில் இருந்து யாரும் எதையும் சாதிக்க முடியாது. உலகெங்கும் சங்கம், யூனியன், கிளப், மன்றம், கழகம் என்று ஒன்றுகூடித் தங்கள் கோரிக்கைகளை ஒரே மனதாகக் கேட்கின்றனர். கூட்டாகக் கூடி சேர்ந்து விரும்பியதைப் பெறுவதில் குற்றமில்லை. ஆனால் எத்தகையதைப் பெறுவதற்கு அதைப் பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் அறியாதிருக்கிறோம். அரக்கர்களுடைய அக்கிரமங்களை ஒழித்துக்கட்டத் தேவர்கள் ஒன்றுகூடிப் பகவானிடம் முறையிட்டனர். மஹாவிஷ்ணு ராமாவதாரம் எடுத்து இராவணன் முதலிய ஏனைய அரக்கர்களை மாய்த்தார்.

வெள்ளையர்களுடைய கொடுமையிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக வாழ நம்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மகாத்மாகாந்தியின் தலைமையில் எதிர்த்தனர். தூய சாத்வீகமான இந்தப் போராட்டத்தின் முன் ஆற்றல் பொருந்திய வெள்ளையரின் கொட்டம் எடுபடவில்லை.

இன்று மனிதன் தெய்வ நம்பிக்கையோடு உழைத்து முன்னேற விரும்புகிறான். அவனுடைய நம்பிக்கைக்கு சோதனைகள் சிற்சில சமயங்களில் ஏற்படுகின்றன. இவன் தெய்வீக வாழ்க்கையில் முழுப்பிடிப்புஉள்ளவனா? இல்லையென்றால் ஏதேனும் ஒரு காரியத்தை நிறைவேற்ற மட்டிலும் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டு பிறகு அவரை மறக்கும் இயல்பு உடையவனா? என்பதை உணர்த்திக் காட்டவே இந்தச்

சோதனைகள் புறவுலகிலிருந்து வருகின்றன.

பஞ்சம் பிழைக்க வந்தகுடும்பம் ஒன்றுவேலை தேடி ஒரு ஊருக்குவந்தது. சிலர் ஒரு நல்லமனிதரின் வீட்டைச் சுட்டிக் காட்டி 'அங்கு போனால் நிச்சயம் வேலை கிடைக்கும்' என்று சொன்னார்கள். தன்னிடம் வந்து பிழைக்க வழிகேட்ட ஏழைக் குடும்பத்திற்கு அந்த நல்லவர் வேலை வாய்ப்புக் கொடுத்தார். அவர் வீட்டிலே உள்ள தோட்டங்கள், பண்ணை வேலை முதலியனவற்றில் ஒவ்வொரு வரும் வேலை செய்தனர். வேலையில்லாது தவித்த தங்களுக்கு நல்ல உணவும், நல்ல உடையும், வசதியான வீடும், மற்ற இதர வசதிகளும் செய்து தந்த அந்த நல்லவருக்கு எந்த வகையில் தங்கள் நன்றியைச் செலுத்துவது என்று தெரியாது அந்தக் குடும்பத்தார் அனைவரும் விசுவாசமாக, சிரத்தையோடு அந்த நல்லவர் பண்ணையில் வேலைசெய்து வந்தனர். இதைப் பார்த்த மற்ற தோட்டத்து வேலைக்காரர்கள் அந்தக் குடும்பத்தாரைப் பார்த்து "அந்த மனிதருக்கு ஏன் இவ்வளவு பாடுபட வேண்டும்? ஒரு நாளைக்கு இத்தனை மணி நேரம்தான் வேலை செய்வது என்று இருப்பதை விட்டு விட்டு இரவும் பகலும் வீணைக் கஷ்டப்பட்டு உழைக்கிறீர்களே. சரியான அசடுகள் நீங்கள்! உங்களைப் போன்ற பைத்தியக்காரர்கள் இருப்பதால்தான் இவர்கள் சீக்கிரம் பணக்காரர் ஆகின்றனர். இதோ எங்களைப் பாருங்கள். எங்களுக்குக் கொடுத்த வேலையைச் செய்கிறோம். சம்பளம் வாங்குகிறோம். அதைவிட்டு எஜமானன் மீது என்ன விசுவாசம் வேண்டிக் கிடக்கிறது? சுகமாக உண்டு, உறங்கி வாழ்நாளைக் கழிப்பதற்கு நமக்கு மட்டும் உரிமையில்லையா? இருக்கும் வரை சுகபோகத்தில் மூழ்கியிருப்போம். எஜமானன் கண்டித்தால் நாங்கள் வேலை செய்ய மாட்டோம் என்று ஒரேகுரலில் மறியல் செய்து எஜமானரும் மற்றவர்களும் எங்களைப் பார்த்து ஸ்தம்பிக்கும்படி செய்வோம்" என்று அவர்கள் மனதிலிருந்த எஜமான விசுவாசத்தையும் தூயஉழைப்பையும் தங்கள் சொல் சாமர்த்தியத்தால் எவ்வளவு மாற்ற முடியுமோ அவ்வளவும் செய்தார்கள். அந்தக் குடும்பத்தாரின் மனநிலையும் அந்தத் தீயஎண்ணம்கொண்ட வேலையாட்களைப் போன்றே மாறத்தொடங்கியது. அதன் விளைவாகத் தொடர்ந்து, ஊக்கத்தோடு செய்து வந்த வேலைகள் மந்தமாகத் தொடங்கின. தங்கள் எஜமானரை வெறுத்தனர். குடும்பத்தார் அனைவரும் தங்கள் வீட்டில் அதிக நேரம் தங்கி சோம்பலுற்றுக் காலம் கழிக்கத் தொடங்கினர். வேலையில் அக்கரையில்லாது வெறுமனே உண்டு உறங்கிக் காலங் கழிக்கும் குடும்பத்தாரின் புதிய மனநிலையை அந்த நல்ல மனிதர் அறிந்துகொண்டார். இடையிலே சில விஷமிகளால் அது தூண்டப்பட்டது என்பதைப் புரிந்துகொண்டார். பிறகு தன் காரியஸ்தரிடம் கூறி வீட்டையும், பண்ணையையும், வேலைக்காரர்களையும் கவனித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு ஒரு மாத யாத்திரை புறப்பட்டுப் போய்விட்டார். தங்கள் யஜமானர் ஒரு மாத யாத்திரை போன செய்தி கேட்ட இந்தக் குடும்பத்தார் மகிழ்ந்து மேலும் சோம்பலுற்று இருந்தனர். இதனை அறிந்த காரியஸ்தன் அவர்களை உடனே வீட்டைக் காலிபண்ணச் சொல்லி, வேலையும் கொடாது, உணவும் கொடாது துரத்தியடித்துவிட்டான். பட்டினிகிடந்து மறுபடியும் நடுத்தெருவில் நிற்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. இதற்கெல்லாம் காரணம் ஏற்கனவே வாழ்வு கொடுத்துக் காப்பாற்றிய அந்த நல்லவருக்குத் துரோகம் செய்ததுதான் என்பதை அறிந்தனர். ஒருமாத காலமாக எங்கு போனாலும் யாரும் வேலையோ, உணவோ எதுவும் தரவில்லை. அவர்களைத் தீயவழியில் தூண்டிவிட்ட பக்கத்துத் தோட்டத்து வேலைக்காரர்களையும் ஒரு குவளை கஞ்சிக்குக் கெஞ்சினார்கள். ஒருவனும் கொடுக்கவில்லை. அப்போதுதான் அவர்களுக்குப் புத்தி வந்தது. நன்றியுள்ள அந்த நல்லமனிதரை ஒதுக்கினோம்; வெறுத்தோம். அவர் உணவை உண்டு, அனுபவித்து வேலை செய்து அவரை ஏமாற்றினோம். இதற்கெல்லாம் காரணம் அந்தக் கெட்ட மனம் படைத்த துஷ்டரின் சொல் கேட்டதால்தான் என்று தாங்கள் அறியாமல் செய்த பிழையை எண்ணி நொந்து அந்தப் பெரியவர் யாத்திரை முடித்து வரும்வரை பிச்சை எடுத்து கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தனர். அவர் வந்தவுடன் நடந்த விஷயங்களைக் கூறித் தாங்கள் செய்த தவறை மன்னிக்கும்படி அழுது வேண்டினர். அந்த நல்ல மனம் படைத்

தவரும் அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொண்டு அவர்களுக்கு முன்பு எத்தகைய பாங்கில் உதவினுரோ அதேபோன்று அன்போடு கவனித்தார். இனி அந்தக் குடும்பம் மறுபடியும் நெறிதவறிச் செல்லுமா?

இன்றைக்கு நம் நாட்டில் தெய்வீக வழிபாட்டில் ஈடுபட்டு வரும் பலருக்கு ஒரு சோதனை ஆரம்பித்துள்ளது. நாஸ்திக பிரச்சாரத்தால் சிலர் அவர்களைத் தெய்வீக வாழ்க்கையிலிருந்து பிரித்துச் சீரழிக்கவேண்டும் என்று எண்ணுகின்றனர். அதற்கு எத்தனையோ பகுத்தறிவு வாதங்களை ரசிக்கும் பாங்கில் சொல் ஜாலத்தால் காட்டுகின்றனர். நமக்கு நல்ல உடல், மனம் கொடுத்து உலகை சிருஷ்டித்து, நமக்கு வேண்டிய மழை, சூரிய ஒளி, உணவுப் பொருள்கள் கொடுத்து நம்மைக் காப்பாற்றி வருகிறவரை நாம் வெறுத்து ஒதுக்கும்படியான மட்டமான வாசகங்களைக் கூறி அவர் செய்த நன்றியை மறக்கச் செய்கின்றனர். ஒன்றும் தெரியாத பாமர உள்ளங்கள் அவர்கள் வலையில் விழுந்து அவர்கள் போடுகிற கோஷங்களுக்கு 'ஜே' போடுகின்றனர். பணம் ஒன்றே அவர்கள் வணங்கும் தெய்வம். 'கடனை வாங்கி உடம்பைத் தேற்று. கடன் காரன் வந்தால் நிமிர்ந்து காட்டு'— இதுவே இவர்களுடைய பகுத்தறிவு சித்தாந்தம். விவேகானந்தர் கூறினுர்: 'மூப்பு, பிணி, துன்பம், துயரம், மரணம் இருக்கும் வரையில் இறைவனைப்பற்றிய நம்பிக்கையும் மனித மனத்தில் ஆழ்ந்து இருக்கும்' என்ருர். இது எல்லா நாட்டினருக்கும் பொருந்தும்; எல்லா சமயத்தினருக்கும் பொருந்தும். மேற்கண்ட உபாதைகள் உலகில் தோன்றுகிற எல்லா ஜீவர்களுக்கும் வரத்தான் செய்கின்றன. வள்ளுவரைப் பச்சைத் தமிழர் என்றும், திருக்குறளை வேதம் என்றும் கூறுபவர்கள் எண்ணிப் பார்க்கட்டும். பணம் எவ்வளவு படைத்திருந்தாலும் உலகம் தருகிற சுகபோகங்கள் எவ்வளவு இருந்தாலும் மனக் கவலையை மாற்ற அவைகளால் முடியாது என்று கூறி இறைவனுடைய திருவடி பற்றினுர்க்கன்றி வேறு யார்க்கும் இயலாது என்பதை திருக்குறளே தெளிவுறுத்துகிறது.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

இறைநாட்டம் உடைய அன்பர்கள் அனைவரும் ஒன்று சேருக. நல்வாழ்க்கை வாழ்க, மற்றவரை, ஏழையரை, கதியற்றவரை, அனைவரையும் நம்மோடு சேர்த்து ஏற்றத்தாழ்வு இல்லாவண்ணம் செய்துகொள்ளுவோமாக. இறைநாட்டம் என்பது என்ன! எங்கோ ஒரு கோயிலில்தான் கடவுள் இருக்கிருர். அவரை வணங்கினுல்தான் அது கடவுள் வழிபாடு என்று ஆகிவிட்டால் அது புரோகித தந்திரம் (Priest craft) ஆகிவிடும். ஈசன் தான் இத்தனை உயிர்கள் சொருபமாக இருக்கிருன். அந்தந்த உயிர்களிடம் கொள்ளுகிற இணக்கம் தான் நம்மை மேலானவனுகவோ கீழானவனுகவோ ஆக்குகிறது. "இறைவனை எங்கு போய்த் தேடுகிருய்? பட்டினியால் வாடுகிற ஏழைகளிடத்தும், நோய், துன்பம், வறுமையால் வாடுகிற ஆதரவு அற்றவர்களிடம் போய் கடவுளைப்பார்" என்ருர் விவேகானந்தர். ஆகவே அவர்களை நேசித்து அவர்களை உயர்த்துவோமாக. நாட்டில் நம்மவரிடையே ஒற்றுமையில்லாதிருந்ததால் வெளிநாட்டார் நம்மை அடிமை ஆக்கினர். புறச் சமயங்கள் உள்ளே ஊடுருவி நமது தூய கலாச்சாரத்தை, பண்பைக் கெடுத்தன. ஒற்றுமையாக இருந்திருந்தால் உலக நாடுகளுக்கே நம் நாடு, நம் சமயம் வழிகாட்டும் என்பதில் ஐயமுண்டோ? இந்த விஞ்ஞான யுகத்தில் கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்று வித்தைகள் நடத்துவது, விபூதி தருவித்தல், பழம் தருவித்தல் முதலிய செப்படி வித்தைகள் செய்து பாமரமக்களை ஏமாற்றி பிழைக்கும் கூட்டம் பெருகிவருகின்றன. பால்மணம் அறியாத பச்சிளங் குழந்தைகளை பரமன் பெயரைச் சொல்லி பலியிடுவது இன்றும் நடக்கும் பெரிய அக்கிரமமன்ருே?

சமய வாழ்க்கையால் ஒருவன் நல்லொழுக்கம் அடையப் பெறுவானுனல் அச்சமயத்தைப் பின் பற்றுவது மூடத்தனம் ஆகுமா? கண்மூடிக் கொள்கைகளெல்லாம் மண்மூடிப் போகவேண்டும் என்ருர் வள்ளலார். சமயத்தின் பெயரால், குலத்தின் பெயரால் நடக்கும் அக்கிரமங்கள் அழிந்து அனைவரும் ஒருதாய் மக்கள் என்ற கொள்கையில் எல்லாரும் அன்போடு, ஒற்றுமையாக, வாழும் அந்நன்னுளை விரைவில் எதிர் பார்ப்போமாக.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

நாம் அழிந்துபோகிற இந்த உடலோ, அந்தக்கரணமோ அல்ல. அழிவற்றதும், அழிந்து போகிற இப்பொருள்களையெல்லாம் வைத்துக் கொண்டு அளவற்ற லீலைகள் புரிவதும் ஆகிய ஆத்மாவே நாம். இதை நிரூபிக்கவே, உணர வைக்கவே இத்தனை உபாயங்களால் விளக்குகிறார்கள். உலகில் ஒரு வஸ்துவை அறிய வேண்டும் என்றால் அதற்கு மூன்று உபாயங்கள் உண்டு. அவையாவன: 1. உத்தேசம் 2. லக்ஷணம் 3. பரீக்ஷை. ஒரு வஸ்துவின் பெயரை மாத்திரம் சொல்லுவது உத்தேசம். வஸ்துவின் வாஸ்தவமான ரூபத்தை அறிவது லக்ஷணம். வஸ்துவின் ரூபத்தைத்தெரிந்துகொள்ளும் விசாரணையே பரீக்ஷை எனப்படுகிறது. பதினேழு அவயவங்களின் பெயரைச்சொன்னதினாலேயே அந்தக்கரணம் என்பதைப்பற்றி ஒரு உத்தேசமான அறிவு ஏற்பட்டுவிட்டது. இனி அதன் லக்ஷணத்தை அறிந்துகொள்வோம்.

அவ்யாப்தி, அதிவியாப்தி, அஸம்பவம் என்னும் மூன்றுவித தோஷங்களற்று ஒரு பொருளுக்கு மட்டும் உரிய விசேஷகுணம், தன்மை, அமைப்பு அதன் லக்ஷணம் ஆகும். அவ்யாப்தி: லக்ஷியம்—லக்ஷணம் என்று வைத்துக்கொண்டு இதை விளக்குகிறார்கள். ஒரு லக்ஷணத்தால் குறிப்பிடப்படுகிற லக்ஷ்யத்தில் சிலவற்றில் அந்த லக்ஷணம் இல்லாமல் இருந்தால் அது அவ்யாப்தியாகும். ஒரு பொருளுக்கு ஒரு லக்ஷணம் சொல்லுகிறோம். அந்த லக்ஷணம் அதே வகை பொருள் வேறு ஒன்றில் இல்லாமல் இருக்கலாம். கருப்பு நிறமுள்ளது பசு என்று சொன்னால் கருப்பு நிறம் எல்லாப் பசுக்களுக்கும் இல்லை என்பது பிரத்யக்ஷம். சிகப்பு, வெள்ளை, இருநிறங்கள்கலந்தது எல்லாவகைப் பசுக்களுக்கும் உள்ளன. இந்தத்தோஷம் அதாவது முரண்பாடு, பொருந்திவாராதது அவ்யாப்தி எனப்படுகிறது. ஆகையால் கருப்பு நிறம்பசுவின்பொதுலக்ஷணமன்று. அதிவியாப்தி: நாம் சொல்லுகிற ஒரு லக்ஷணம், லக்ஷியமல்லாதவற்றிலும் இருக்குமானால் அது அதிவியாப்தி தோஷம் எனப்படுகிறது. நான்கு கால்கள் உள்ளது பசு என்று சொன்னால் நான்கு கால்கள் உள்ள பிராணிகள் எத்தனையோ உள்ளன. ஆகையால் இது பசுவின் தனிப்பட்ட, அதை மட்டும் சுட்டக்கூடிய லக்ஷணமாகாது. இது அதிவியாப்தி தோஷம் எனப்படுகிறது.

அஸம்பவம் : நாம் சொல்லுகிற லக்ஷணம் லக்ஷியம் முழுவதிலுமே இல்லாமல் இருப்பது. ஒரு குளம்பு உள்ளது பசு என்று சொன்னால் ஒரு குளம்பு உள்ள பசுவே இல்லையாதலால் இது அஸம்பவ தோஷமுள்ளது. இதுவும் பசுவின் லக்ஷணமாகாது. திமில் முதலியவைகளுடன் கூடியது பசு என்றால் இதுவே பசுவின் லக்ஷணமாகும். திமில் எல்லாப்பசுக்களிலும், கால்நடைகளிலும் இருப்பதாலும் அதைத் தவிர வேறு விலங்குகளுக்குத் திமில் இல்லாததாலும் இது மூன்றுவித தோஷங்கள் அற்ற தனிப்பட்ட தர்மமானதாலும், லக்ஷணமானதாலும், இதுவே பசுவின் சரியான லக்ஷணமாகும்.

இதேபோல ஞானேந்திரியங்களுக்கு லக்ஷணம் சொல்ல முடியுமா? சொல்லமுடியும். ச்ரோத்திரேந்திரியம் (காது) என்றால் என்ன? திக் என்ற அதிஷ்டான தேவதையால் (அதிஷ்டான தேவதை என்றால் அதன் யஜமானன், அதை நடத்துகிற, நிர்வகிக்கிற சக்தி என்று பொருள்) ஏவப்பட்டுக் காதுடன் சேர்ந்த ஆகாசத்தில் இருந்துகொண்டு, பல பாஷைகள், வேத சாஸ்திரங்கள், இனிய இசை, பயங்கர ஓசை ஆகியவைகளை இது இப்படிப்பட்டது என்று அறியும், உணரும் இந்திரியம் ச்ரோத்திர இந்திரியம் ஆகும். இதைப் பரீக்ஷை செய்வது எப்படியெனில் சரீரத்தில் காது என்கிற ஓட்டை இருக்கும் இடத்தில் உள்ள ஆகாசமே சப்தத்தைக் கேட்கிறது என்று சொல்ல முடியாது. ஸ்தூல காது, அதனுடைய மூளையோடு இணைக்கப்பட்டுள்ள நரம்புகள், மூளை இவைகள் எல்லாம் சப்தத்தைக் கேட்கவில்லை. ஆழ்ந்த தூக்கம், மூர்ச்சை அடைந்திருக்கும் வேளை, இந்த ஸ்தூல சரீரத்தை இந்த ஜன்மத்தில் பிரக்ஞை காரி உமிழ்ந்துவிட்ட வேளை (மரணம்) ஆகிய வேளைகளில் முன் குறிப்பிட்ட

அவயவங்கள் யாவும் அப்படியே இருந்தும் சப்தம் கேட்கப்படுவதில்லை, உணரப்படுவ தில்லை. இந்தச் சப்தத்தைக் கேட்பது யார்? அதைப் பலவிதமான ஓசைகளாகப் பாகுபடுத்து வது யார்? அதைக் கேட்டுப் பாகுபடுத்தி உணருவது சுரோத்திர இந்திரியம். இதே விஷ யத்தை த்ருக்–திருச்ய (பார்ப்பவன்–பார்க்கப் படும் பொருள்) விசாரத்தில் பார்ப்பவன் ஆத்மாவே என்று நிருபிக்கப்படுகிறது. அங்கு இந்திரியங்களைப் பற்றிய விளக்கம், விசாரம் இல்லை. பார்ப்பதும், கேட்பதும் யாவும் ஆத்மாவே. ஆத்மாவின் சன்னிதியில் இந்திரி யங்கள் யாவும் தம்தம் செயல்களைச் செய் கின்றன, ஆத்மாவினுல் அவைகள் இயக்கப்படு கின்றன. அந்தச் செயல்களை அறிபவன், பாகு படுத்துபவன் ஆத்மா. ஆகையால் ச்ரோத்திர இந்திரியம் என்பது ஆகாசத்தைக்காட்டிலும், ஸ்தூலசரீர அவயவங்களைக் காட்டிலும், வேரு னது என்பது நிருபணமாகிறது.

த்வக் இந்திரியம் என்ருல் என்ன? வாயு என்னும் அதிஷ்டான தேவதையால் தூண்டப் பட்டு சரீரத்திலுள்ள தோல் முழுவதும் பரவி யிருந்துகொண்டு சீதம், உஷ்ணம், மிருது, கடி னம், கரடுமுரடு ஆகிய அநேக விதமான ஸ்பர் சத்தை அறிவது த்வக் இந்திரியம். சுஷுப்தி முதலிய சமயங்களில் முன் போலவே தோல் இருந்தபோதிலும் ஸ்பர்ச உணர்ச்சி அறிபப் படுவதில்லை. ஆகையால் தோல்மட்டும் ஸ்பர்ச இந்திரியம் ஆகாது. தோலைக்காட்டிலும் வேரு னதுதான் த்வக் இந்திரியம்.

சக்ஷு இந்திரியம் எது? சூரிய ரூபமான அதிஷ்டான தேவதையால் ஏவப்பட்டுக் கண் ணில் கருவிழியில் இருந்துகொண்டு நீலம் சிவப்பு, கருப்பு, வெளுப்பு. பெரியது, சிறியது, நீளம், குட்டை ஆகிய பலவிதமான ரூபங்களை அறிவது சக்ஷு இந்திரியம். கருப்பு விழியே ரூபங்களை அறிகிறது என்று சொல்ல முடியாது. ஏனெனில் தூக்கத்தில் இந்தக் கண்கள் இருந் தும் ரூபத்தை அறிவதில்லை, தெரிவதில்லை. ஒருவருமே பார்ப்பதற்கு இல்லாத ஒரு நாடக கொட்டகையின் மேடையில் என்ன நாடகம் நடந்தால்தான் என்ன? நாடகத்தைக் கண்டு ரசிப்பதற்கு, கண்டு உருகுவதற்கு ஆட்கள் வேண்டும். ஆகையால் இந்த ஸ்தூலக் கண் சக்ஷு இந்திரியம் ஆகமாட்டாது. ரஸனேந் திரியம் (ருசி அறிகிற இந்திரியம்) எது? வரு ணன் என்கிற அதிஷ்டான தேவதையால் தூண்டப்பட்டு நாக்கில் இருந்துகொண்டு இனிப்பு, கசப்பு, உப்பு முதலிய ஆறு ரஸங் களையும் எது உணர்கிறதோ அது ரசனேந்திரி யம். வெறும் நாக்கு ரசனேந்திரியம் ஆகாது. தூக்கத்தில் நாக்கு இருந்தும் ரஸம், ருசி அறி யப்படுவதில்லை. ஒரு பொம்மை பலகாரங் களை ரசிக்க, ருசி அறிய முடியாதல்லவா. இந்த ஸ்தூல சரீரம் வெறும் பொம்மை, கூடு. முக ரும் இந்திரியம் எது? அசுவினி தேவதையால் தூண்டப்பட்டு மூக்கின் நுனியில் இருந்து கொண்டு நல்ல, கெட்ட வாசனைகளை எது அறி கிறதோ அதுதான் க்ராண இந்திரியம். தூக் கத்தில் மூக்கு இருந்தும் வாசனையை அறிவ தில்லை. ஆகையால் இந்த ஸ்தூல மூக்கு க்ராண இந்திரியம் ஆகாது. அது மூக்கைக் காட்டிலும் வேருனது. இவ்விதம் ஞானேந்திரி யங்களின் லக்ஷணங்கள் கூறப்பட்டன.

இனி கர்மேந்திரியங்களின் லக்ஷணங்களைக் கவனிப்போம். அக்னி என்னும் அதிஷ்டான தேவதையால் தூண்டப்பட்டு மோவாய்க் கட் டையின் அடி, மேல்கீழ்உதடுகள், பல், கழுத்து, ஹிருதயம், தொப்புள் முதலிய சரீரத்தின் அவயவங்களை அடைந்து முன்சொன்ன பலவித சப்தங்களை எது சொல்லுகிறதோ அது வாக் இந்திரியம் ஆகும். தூக்கத்தில் இந்த அவய வங்கள் இருந்தும் பேசுவதில்லை. ஆகையால் இந்த ஸ்தூல அவயவங்கள்மட்டும் வாக் இந்திரி யம் ஆகா. இவற்றைக்காட்டிலும் வேருனது அது. இந்திர தேவதையால் தூண்டப்பட்டு உள்ளங்கையை ஆச்ரயித்து (அடைந்து, அதை ஸ்தானமாகக் கொண்டு) கொடுப்பது, வாங்கு வது, தொழுவது, எழுதுவது முதலான காரி யங்களை எதுசெய்கிறதோ அது பாணி (கை) இந்திரியம். சாதாரணமான கையாகிய அவய வம் மட்டும் பாணி என்கிற இந்திரியம் ஆகாது. ஏனென்ருல் தூக்கம் முதலிய காலங்களில் இந்தக் கை இருந்தும் எந்த வேலையும் செய்வ தில்லை. ஆகையால் பாணி இந்திரியம் ஸ்தூல கைக்கும் வேருனது. உபேந்திர தேவதை யினுல் தூண்டப்பட்டு உள்ளங்காலில் இருந்து கொண்டு நடத்தல் என்னும் வேலையை எது

செய்கிறதோ அது பாத இந்திரியம் ஆகும். சாதாரணமான கால் என்கிற அவயவமானது பாத இந்திரியம் ஆகாது. ஏனெனில் தூங்கும் காலத்தில் கால் இருந்தும் நடப்பதில்லை. ஆகையால் பாத இந்திரியம் கால் என்னும் ஸ்தூல அவயவத்தைக் காட்டிலும் வேறானது. மிருத்யு தேவதையால் தூண்டப்பட்டு குதம் (மலதுவாரம்) என்னும் அவயவத்தை இடமாகக் கொண்டு எது சரீரத்தை விட்டு மலத்தை வெளித்தள்ளுகிறதோ அதற்கு பாயு இந்திரியம் என்று பெயர். கேவலம் குதம் என்னும் அவயவம் மட்டும் பாயு இந்திரியம் ஆகாது. ஏனெனில் சுஷுப்தியில் இந்த அவயவம் இருந்தும் அதன் வேலையை அது செய்வதில்லை. ஆகையால் இந்த அவயவத்தைக் காட்டிலும் வேறானது பாயு இந்திரியம். பிரஜாபதி என்னும் தேவதையினால் தூண்டப்பட்டு யோனி (பிரஜா உற்பத்தி ஸ்தானம்) லிங்கம் (ஆண்குறி) என்கிற அவயவங்களை அடைந்து சுக்கிலம், சோணிதம், மூத்திரம் முதலியவைகளை எது வெளியில் தள்ளுகிறதோ அதற்கு உபஸ்த இந்திரியம் என்று பெயர். கேவலம் சரீரத்தில் உள்ள இந்த அவயவம் உபஸ்த இந்திரியம் ஆகாது. ஏனெனில் தூக்கத்தில் இந்த அவயவம் இருந்தும் அதன் வேலையை அது செய்வதில்லை. ஆகையால் இந்த ஸ்தூல அங்கங்களைக் காட்டிலும் வேறானது உபஸ்த இந்திரியம். பொம்மலாட்டக் காட்சியில் சூத்திரதாரியால் இயக்கப்பட்டு பொம்மைகள் நடப்பதும் ஓடுவதும், கை வீசுவதும் ஆகிய செயல்களைச் செய்கின்றன. அவைகள் தாமே இயங்கமாட்டா, இயங்கமுடியாது. சூத்திரதாரி அவைகளை இயக்குகிறான். அதே நிலைமையில்தான் மானுட சரீரம் இருந்து வருகிறது.

இனி ஐந்து பிராணன்களின் லக்ஷணங்களை ஆராய்வோம். விசிஷ்டம் என்று பெயருள்ள அதிஷ்டான தேவதையின் பிரேரணையினால், தூண்டுதலால் ஹிருதயத்தில் இருந்துகொண்டு வெளி மூச்சு விடுகிறது பிராண வாயு. விசுவ சிருஷ்டன் என்ற தேவதையினால் தூண்டப்பட்டு குதம் என்ற அவயவத்தில் இருந்து கொண்டு உள்ளே மூச்சை இழுப்பது அபான வாயு எனப்படும். விசுவயோனி என்ற தேவதையால் தூண்டப்பட்டு சரீரத்துக்கு உள்ளும் வெளியும் இருந்துகொண்டு இந்திரியங்களுக்குப் பலத்தை எது கொடுக்கிறதோ அது வியான வாயு எனப்படுகிறது. அஜன் என்ற தேவதையின் தூண்டுதலால் கழுத்துப் பிரதேசத்தில் இருந்துகொண்டு எது சுஷுப்தியில் இந்திரியங்களுக்கு அந்தந்த அவயவங்களில் லயத்தை ஏற்படுத்தியும் விழிப்பு வரும் காலத்தில் வேலை செய்யும்படி அந்தந்த அவயவங்களில் அந்தந்த இந்திரியங்களை ஸ்தாபித்தும் மனிதன் இறந்தவுடன் அந்த இந்திரியங்களை எடுத்துக்கொண்டு வேறு லோகங்களுக்கு ஜீவனுடன் எது செல்லுகிறதோ அதற்கு உதான வாயு என்று பெயர். ஜயன் என்ற தேவதையால் தூண்டப்பட்டு எது தொப்புள் பிரதேசத்தில் இருந்து கொண்டு நாம் உட்கொள்ளும் பக்ஷ்யம் (கடித்து சாப்பிடப்படுவது) போஜ்யம் (விழுங்கப்படுவது) சோஷ்யம் (உறிஞ்சப்படுவது) லேஹ்யம் (நாக்கால் நக்கப்படுகிறது) ஆகிய நான்கு வகையான உணவுகளையும் ஜாடராக்னியில் ஜீரணிக்கச் செய்து எது சரீரத்திற்கு புஷ்டியை உண்டு பண்ணுகிறதோ அது ஸமான வாயு எனப்படும். இங்ஙனம் பிராணன்கள் ஐந்து வகைப்படும். சரீர வாழ்க்கை இங்ஙனம் நிகழ்ந்து வருகிறது. சுவாசம், ஜீரணம், கழிவுகளை வெளியேற்றுதல், ஓய்வு, உழைப்பு ஆகிய கிருத்தியங்கள் அடங்கியது மானுட வாழ்வு. இவைகள் பஞ்ச பிராணன்களால் நிகழ்கின்றன.

இது தவிர நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்ற ஐந்து வாயுக்கள் சொல்லப்படுகின்றன. இவைகள் முன் சொல்லப்பட்ட ஐந்து பிராணன்களைச் சேர்ந்தவை தான். நாகன் என்பது வாந்தி எடுக்கும்படி செய்கிறது. கூர்மன் என்பது கண்களை மூடுவது திறப்பது, மேல்கீழ் உதடுகளை அசைப்பது இந்தக் காரியங்களைச் செய்கிறது. க்ருகரன் என்பது தும்மலையும் தேவதத்தன் என்பது கொட்டாவியையும் உண்டுபண்ணுகின்றன. தனஞ்ஜயன் என்பது உடலைப் பருக்கும்படிச் செய்கிறது.

இனி, அந்தக்கரணத்தின் நான்கு பிரிவுகளான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவைகளைப்பற்றி ஆராய்வோம். சந்திர தேவதையால் தூண்டப்பட்டு கழுத்தை

அடைந்து சங்கல்ப விகல்பங்களை (பழைய, புதிய எண்ணங்கள்) உண்டுபண்ணுகிறது மனம். நான்முகனால் தூண்டப்பட்டு வாயை அடைந்து எது தீர்மானம், நிச்சயம் செய்கிறதோ அது புத்தி எனப்படுகிறது. ருத்திரனால் தூண்டப்பட்டு ஹிருதயத்தில் இருந்து கொண்டு எது அபிமானம், பற்றுதல் கொள்கிறதோ அது அகங்காரம். க்ஷேத்ரக்ஞனை விஷ்ணுவினால் தூண்டப்பட்டு நாபி (தொப்புள்) பிரதேசத்தை அடைந்து நினைவுறுத்துவது சித்தம் எனப்படுகிறது. உணர்ச்சி மயமானது மனது. ஆராய்தல், சிந்தித்தல், நிச்சயித்தல் புத்தி. இந்த ஜீவவியக்தியைப் பற்றி நாம் கற்பித்துக்கொண்டுள்ள எல்லாக் கருத்துக்களும், அபிமானங்களும் அகங்காரம். நமது அநுபவம், சம்ஸ்காரம் இவைகளின் பண்டகசாலை போன்று, சேமிப்புக் கிடங்கு போன்று இருப்பது சித்தம் என்று விளக்குவதும் உண்டு. பிராணன் என்றால் உயிர், உயிர் நாடியான விஷயம் என்று பொருள். ஜங்கம உயிர்வகைகள் பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவை வெளிவிடுகின்றன. ஸ்தாவர உயிர்கள் கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளிவிடுகின்றன. இதனால் பரஸ்பரம் இரண்டுவகை உயிர்களும் நன்மை அடைகின்றன என்று விக்ஞான பாடத்தில் படிக்கிறோம். இங்கு உள்ளே இழுக்கும் செயல், வெளியே தள்ளும் செயல் என்கிற பொருளில் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லா வாயுக்களுமே பிராணன் என்ற பொதுப் பெயரில் குறிப்பிடப்படுகின்றன. சரீரத்தின் வேலைகளையெல்லாம், புராணம் விளக்குகிற பாங்கில் ஒரு தேவதையின் செயல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அண்ட வெளியில் சந்திர சூரியர், பூமி, இதர கிரகங்கள், கோளங்கள் யாவும் ஆகர்ஷண சக்தியால் இயங்கி வருகின்றன. பெரிய யந்திரங்கள், கப்பல், ரயில், விமானம் போன்றவைகள் எல்லாம் மின்சாரம், நீராவி, டீசல் போன்ற ஜட சக்திகளைக்கொண்டு இயங்கி வருகின்றன. அதேபோல இந்த ஜீவ சரீரங்களை சித்சக்தி, சேதனம், பிரக்ஞை, அறிவு இயக்குகிறது. ஜடசக்தியைக் காட்டிலும் சித்சக்தி பெரியது. சித்சக்தியிலிருந்தே பிரபஞ்சத்தில் யாவும் தோன்றிவந்துள்ளன. இந்த ஸ்தூல சரீரம் அந்தக்கரணத்தின் கருவி என்பதையும், அந்தக்கரணமும் ஜடப்பொருள், அதுவும் சித்சக்தியின் கருவி என்பதையும் நாம் நன்கு விளங்கிக்கொள்ளவேண்டும்.

செய்திகள்

நிகழ்பவை :

20—8—80-ஆம் தேதி புதன்கிழமையன்று மதுரை ஜில்லா தேனி, நாடார் ஸரஸ்வதி பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு ஸ்ரீமத் அசலானந்த சுவாமிகள் அறிவுரையாற்றுவார்கள்.

22 8—80 வெள்ளிக்கிழமையன்று ஆடி விடுமுறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யா வனக் குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

27—8—80 புதன்கிழமையன்று மாலை 5 மணி முதல் இரவு 8-30 மணி வரையில் பாண்டிச்சேரி அருட்கோன் வேதானந்தர் பொதுப்பணிக் கழகத்தில் ஸ்ரீமத் துருவானந்த சுவாமிகள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

2—9—80 செவ்வாய்க் கிழமையன்று ஸ்ரீ ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பகல்பன்னிரண்டு மணி நேரம் அகண்ட நாம பஜனையும் மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

7—9—80 ஞாயிற்றுக் கிழமையன்று மதுரை ஜில்லா உசிலம்பட்டி நாடார் ஸரஸ்வதி மேல் நிலைப்பள்ளியில் ஸ்ரீமத் அசலானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

செப்டம்பர் மாதம் 13-ஆம் தேதி சனிக்கிழமை ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி ஆகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணிநேரம் அகண்ட நாம பஜனையும், நண்பகல் 11 மணியிலிருந்து 12 மணி வரை ஐக்கிய வணக்கமும், மாலை 7 மணிக்குமேல் மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து விநாயகர் பூஜையும் செய்து ஸ்ரீ விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை 13-ம் பதிப்பு பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம்-பிரசார விலை	... 14-00
கர்மயோக விளக்கம்	... 10-00
ஞானயோக விளக்கம்	... 8-00
ராஜயோக விளக்கம்	... 8-00
பக்தியோக விளக்கம்	... 6-00
பரமஹம்சரின் பெருமை	... 6-00
விவேகானந்த விவரணம்	... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	... 4-00
விவேகானந்த உபநிஷதம்	... 4-00
கடவுளின் வடிவங்கள்	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	... 3-50
தினசரி தியானம்-பிரசார விலை	3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை	... 3-00
அனுஷ்டான வேதாந்தம்	... 3-00
எதிர்கால இந்தியா	... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	... 2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	... 2-00
கண்ணன் என்னும் கடவுள்	2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம் ஷை	... 3-00
சின்மயானந்த குரு ஷை	... 3-00
ஆனந்தமானபரம் ஷை	... 3-00
சுகவாரி ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம் ஷை	... 3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை	... 2-50
பரசிவ வணக்கம் ஷை	... 1-00
பஜனைப் பாடல்கள்	... 2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	... 1-50
விபீஷணன் சரணாகதி ஷை	... 1-50
பரமஹம்ஸர் பாமாலை	... 1-50
சந்நியாசி	... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்	... 1-00
சகோதரி நிவேதிதை	... 1-00
காயத்ரீ	... 1-00
வாலி மோட்சம் (நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	1-00

பிரஹ்லாதன் (நாடகம்)	ரூ. 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	... 1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	... 0-80
நன்மக்களைப் பெறுதல்	... 0-80
நோய்க்கு இடம் கொடேல்	... 0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	... 0-75
*ஆத்ம சக்தி	... 0-75
*சக்தி தத்துவம்	... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	... 0-60
*ஆலய வழிபாடு	... 0-60
*சூரிய நாராயணன்	... 0-50
*முருகக் கடவுள்	... 0-50
*விஷ்ணு தத்துவம்	... 0-50
தெய்வீக மகிமைகள்	... 0-50
சைவன் யார்?	... 0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம் எது?	0-50
*கணபதி	... 0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	... 0-40
வர்ணாச்ரம தர்மம்	... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	... 0-30
The Bhagavad Gita (10th Imp.)	...20-00
The Indian National Education	... 8-00
Sri Lalitambika Sahasranama Stotram	...10-00
Ramakrisna Lives Vedanta	... 8-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (DELUXE)	... 4-50
Daily Divine Digest (Ordinary)	... 2-50
Mahabharata (with plastic cover)	... 4-00
Ramayana (do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	... 4-00
Sri Vishnu Sahasranama Stotram	... 4-00
The Bhagavad Gita (Small Size)	... 4-00
Siva Sahasranama Stotram	... 3-50
Bheeshma The Superman	... 3-50
Hinduism Hosts Christianity	... 3-00
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
* Introducing the Gita	... 1-50
The Garland of Paraaparam	... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	... 1-00
* Key to Higher Life	... 0-75
* The Teacher	... 0-60
* The Student	... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ N. அருணாசலம் செட்டியார்	ஈப்போ	176
ஸ்ரீ லெட்சுமி நாராயண் ஸ்டோர்	கோலாலம்பூர்	105
ஸ்ரீமதி S. அனுசூயா சங்கர்	ஒக்கிலியர் தெரு, கோவை	105
திருப்புல்லாணி மங்களவிலாஸ் ந. அ. ஜெ. மங்களம் அம்மாள்	கோலாலம்பூர்	104
மதராஸ் கபே	செந்துல் ,,	101
ஸ்ரீ சுப்பிரமணியம்	ஈஸ்வரி மாவுமில் ,,	101
ஸ்ரீ K. கண்ணையா	கபங்கா, போர்ட்பிளேயர், அந்தமான்	101
ஸ்ரீ H. வெங்கடசுவாமி	சப்பாணிபட்டி, தருமபுரி	101
சச்சிதானந்த சபை	சிவன்கோவில் தெரு, தூத்துக்குடி	100
ஆத்தங்குடி வீர. அரு. முத்தையா P. J.	கோலாலம்பூர்	100
ஸ்ரீ அ. கோ. முத்தன் செட்டியார் & கோ.	,,	100
M/s. ஜெயந்தி ஸ்டோர்ஸ்	,,	100
ஸ்ரீ VR. அண்ணாமலை செட்டியார்	ஈப்போ	100
ஸ்ரீ P. குப்புசாமி	,,	100
ஸ்ரீ A. N. A. கைலாசம்	,,	100
ஸ்ரீ P. ரத்தின நாடார்	லெக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு, மதுரை	100
ஸ்ரீ P. விஸ்வநாதன், ரெங்கநாயகி	வாலாஜாபேட்டை, வ. ஆ. மாவட்டம்	100
தலைமை ஆசிரியர்	ஜமீன்தார் மேல்நிலைப்பள்ளி, துறையூர், திருச்சி	100
M/s. AR. இன்ஜினீயர்ஸ்	E. V. N. ரோடு, ஈரோடு	100
M/s. ரேணுகா ஜின்னிங் & ஆயில்மில்ஸ்	தேனி	100
M/s. S. N. நாகமணி நாயக்கர் & கோ,	கீழப்பூவாணி	100
M/s. சுப்புராமன் & கோ.	ராஜபாளையம்	100
ஸ்ரீ K. S. கந்தசாமி நாடார்	தேனி	100
M/s. விஜயலக்ஷ்மி காட்டன் டிரேடர்ஸ்	ஸ்ரீ வில்லிபுத்தூர்	100
M/s. பிரபுராம் பையர் ஒர்க்ஸ் பேக்டரி	சிவகாசி	100
ஸ்ரீ ஊ. அ. கோபாலகிருஷ்ணமாச்சாரி மின்சார நகர்	வேலூர், வ. ஆ மாவட்டம்	100
ஸ்ரீ தியாகராஜ முனையதிரியார்	திருச்சி	100
ஸ்ரீ நித்தியானந்த சேதுரார்	,,	100
ஸ்ரீ T. P. வேணுகோபால் சமூகம்	தெற்கு கூவம் தெரு, சென்னை	100
ஸ்ரீ S. Rm. பழனியப்பன்	தம்பு செட்டித்தெரு ,,	100
ஸ்ரீ Rm. PL. நாச்சியம்மை ஆச்சி	,, ,,	100
ஸ்ரீமதி S. Rm. PL. சுப்ரமணியன்	காலேஜ் சந்து ,,	100
ஸ்ரீமதி S. வள்ளியம்மை	,, ,,	100
ஸ்ரீ S. ராமநாதன்	,, ,,	100
ஸ்ரீமதி R. விசாலாக்ஷி	,, ,,	100
ஸ்ரீ S. பழனியப்பன்	,, ,,	100
ஸ்ரீமதி P. உமையாள்	,, ,,	100
ஸ்ரீ R. பழனியப்பன்	,, ,,	100
ரூபாய் நூறுக்குக் கீழ்வந்த நன்கொடைகள்		6 381
	ஆகக் கூடுதல் ரூ	8 87 719

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.